கணபதி துணை.

# முத்திமுடிவு.

காஞ்சீபுரம்
உபசுப்பிரமணியர்கோத்திரம்
சரவணதேசிகரால்
செய்யப்பட்டது.

இது
அடியார்மாணாக்கரிலொருவராகிய
அடியூர்கச்சபாலையமுதலியாரால்
செய்யப்பட்டவுரையுடன்
சென்னபட்டணம்
சுந்தரோபாத்தியாயரும்
சி. சபாபதிச்செட்டியாரும்
கேட்டுக்கொண்டபடி
காஞ்சீபுரம்
அருணகிரிசுவாமியாரால்
கலாநிதியச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

பிரசோற்பத்தி௵ வைகாசி௴.
(Copy Right Reserved.)

# சிறப்புப்பாயிரம்.

காமருநலஞ்செறிகல்வியுஞ்செல்வமு, மாமிருபொருளு மிக்கமைந்தொளிர்காஞ்சியி, லெங்குந்தமதுசீரெய்தியவறம் வாணா, செங்குந்தர்குலத்திடைத்திருத்தகவுதித்தோன, திருவாவடுதுறைச்சிவஞானதேசிக, னருளாலொருமொழியரும்பொருளறிந்தோன், புகலுமத்தேசிகன்பொற்பதமுடிபுனைந், தசமகிழ்கச்சியப்பவாரியனாற், பதிபசுபாசப்பண்பினைத்தெளிந்தோன், றுதிபெறுசிறப்பொடுசுவர்க்கபுரத்திலுற, தவப்பிரகாசசற்குருவருளா, லுவப்புறுபஞ்சாக்கரநிலையுணர்ந்தோன், திருப்பேரூர்வருசிதம்பரதேவன், றரபெறுமுத்திமுடிவுதேர்தவத்தோன், மாநந்தனமணமலருமக்காஞ்சியி, லாநந்தருத்திரேசற்காலயஞ்செய், தக்கச்சியப்பனையனலனிவளந, தொக்கவண்டுவிடுதூதும்பதிற்றுப், பத்தந்தாதியும்பகர்கலிவெண்டிலும், புத்தமிழ்தெனச்சுவையுறப்புகல்வித்தோன், வழித்தலைமானெனமாழாந்திடுமெனை, யலைத்தலைச்செயும்பவவரணைதீர்த்த, வுண்ணருந்தத்துவவுணர்வதந்தாண்டோன், பன்னுசீர்ச்சரவணபவதேசிகன்சீர், செறிதருவீட்டுநெறியுண்மையுமுயர், வண்மைசேரொருபாவுண்மையுபதேசமுந், துரிசறுபஞ்சாக்கரவறுப்பிய, மாசறுமுபதேசசித்தாந்தமுஞ், சித்தநிலைதருமுத்திமுடிவுங், கருவேரறச்செயுமொருபாவொருபஃதுந்தன்னனுபவத்திற்சார, வுன்னுமிப்புவியிடையோருயவருளினனே.

# விளம்பரம்.

இந்தப்புத்தகம்வேண்டியவர்கள் செங்காங்கடைக்கு அடுத்த நாட்டுப்பிள்ளையார்கோயிலுக்கு மேலண்டைவாடை ஆபீசு முத்தையாமுதலிதெருவு -௨௭-வது நெம்பர் வீட்டிலிருக்கும் காஞ்சீபுரம், அருணகிரிசுவாமியாரிடத்திலும், குச்சிலிக்கடைக்கு அடுத்த வாணக்காரத்தெருவு சி. சபாபதிசெட்டியாரிடத்திலும் விலைக்கு வாங்கிக்கொள்ளலாம்.

கணபதி துணை.

# முத்திமுடிவுரை.

மோட்சத்துக்குப்பக்குவனாய் மோட்சதாகமுண்டாகியவொருவன், சிவபுண்ணியங்களைச் செய்யவதனான் மலபரிபாகமெய்திச் சத்திநிபாதம்பதிந் இருவினையொப்பு வந்தகாலத்தவனுக்குயிர்க்குயிராய், நிட்களமாய் நின்ற பரமசிவந்தானே சகளீகரித்தாசாரிய மூர்த்தமாயெழுந்தருளிவந்து ஞானதிட்சையைச்செய்து ஞானசாத்திரத்தையநுக்கிரகித்தருள; அதனைக்கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டையைப் பொருந்தி மோட்சமுடிவைப்பெற்ற மோட்சானந்தியானவன் யான்பெற்றபேறு பெறுகவிவ்வையகமென்னுங்கருத்தாற் றான்பெற்றபேறிவ்வையகமும்பெற்றுய்தற்பொருட்டுத் தனக்கநுக்கிரகித்தருளிய ஞானசாத்திரமென்னு முத்திமுடிவைத் தான்கூறத்தொடங்கி யதற்கோர்விக்கினமின்றி முடிதற்பொருட் டிந்நூற்கு முதற்கண் விக்கினேசு[illegible]தி கூறுகின்றார்.

## காப்பு.

சித்தமயனீங்கிச் சிவத்தோடிரண்டறவே
யொத்துடனாய்நிற்குமுபாயமருள்-வித்தகமா
முத்திமுடிவோத முருகற்குமூத்தவரு
ளத்திமுகன்றா ளகம்வைப்பாம்.

## (இதன்பொருள்.)

சித்தமென்றுகூறுமான்மாவானது தன்னைப்பந்தியாநின்ற வஞ்ஞானாதிபாசமயக்கங்களைநீங்கிப் பரமசிவத்துடனிரண்டறக்கலந் தனன்னியமாய்நிற்கும்படிக்குளவாகிய வுபாயத்தினையருளிச்செய்யாநின்ற வுயர்ச்சிபொருந்திய முத்திமுடிவென்னுந் திருப்பெயரினையுடைய விந்நூலினைக்கூறுவான்றொடங்கி, யஃதிடையூறின்றிமுடிதற்பொருட்டு முருகனென்னுந் திருநாமத்தினையுடைய சுப்பிரமணியனுக்கு முன்னமே திருவவதாரஞ்செய்தருளிய பெருங்கருணையினையுடைய வானைமுகத்தனாகிய விக்கினேசுபரனுடைய திருவடித்தாமரைகளை யெனதுள்ளத்துள் வையாநின்றேனென்றவாறு.

இதிற்சித்தமென்றதை யான்மாவென்றதற் குதாரணம். திருவாசகம். "புத்தர்முதலாயபுல்லறிவிற்பலசமயர், தத்தமதங்களிற்றட்டுளுப்புப்பட்டுநிற்கச், சித்தஞ்சிவமாக்கிச்செய்தனவேதவமாக்கு, மத்தன்கருணையினாற்றோணோக்கமாடாமோ." என்றும், திருமந்திரம். "சித்தஞ்சிவமாகச்செய்தவம் வேண்டாவாற், சித்தஞ்சிவானந்தஞ் செய்தோரறவுண்டாற், சித்தஞ்சிவமாக வேசித்திமுத்தியாஞ், சித்தஞ்சிவமாதல்செய்தவப்பேறே." எனவும், வரும். மற்றும்வருவனவற்றுட்காண்க. ஆன்மாவைப்பந்தியாநின்றவஞ்ஞானாதி பாசமயக்கங்களென்றதற்குதாரணம். சிவஞானசித்தியார். "மும்மலநெல்லினுக்கு முளையொடுதவிடுமிப்போல், மம்மர்செய்தணுவினுண்மை வடிவினைமறைத்துநின்று, பொய்ம்மைசெய்போகபந்தப் பொய்த்திருத்துவங்கள்பண்ணு, மிம்மலமூன்றினோடு மிருமலமிசைப்பனின்னும்." என்றும், சிவப்பிரகாசம். "மோக

மிகவுயிர்கடொறுமுடனாய்நிற்கு - மூலவாணவமொன்றுமு
யங்கின்று, யாகமிகவுதவுதிரோதாயியொன்று - பகர்மாயை
யொன்றுபடர்கன்மமொன்று, தேகமுறுகரணமொடுபுவன
போகச்-செயலாருமாமாயைத்திரட்சியொன்றென், ருசமல
மைந்தென்பனாநதமாரு-தருளென்பதரிதென்பரறிந்துளோர்
ரோ." என்றும், சிவாசமார்த்ததரிசனும். "பிறப்பதும்பா
சத்தாலே பிணிபபதும்பாசத்தாலே, யிறப்பதும்பாசத்தாலே
யிளைப்பதும்பாசததாலே, மறபபதும்பாசத்தாலே மயக்கமு
ம்பாசத்தாலே, துறப்பதும்பாசத்தாலே தொழில்களும்பாச
த்தாலே." அன்றியும், "பிணிகளும்பாசத்தாலே பேதமை
பாசத்தாலே, துணிவதும்பாசத்தாலே துன்பமும்பாசத்தா
லே, யணிவதும்பாசத்தாலே யாக்கையும்பாசத்தாலே, பணி
வதும்பாசத்தாலே பற்றெலாம்பாசத்தாலே." என்றும், அ
விரோதவுந்தியார. "அஞ்ஞானமாயைகன்மம்பந்தமாமிவற்
றஞ்ஞானமோர்முதலுந்திபற, வன்குருமென்பராலுந்திபற."
எ-ம, வருமை. மற்றுமவருவனவற்றுறகாண்க. தாவகம்மை
பாமெனவேயிந்நூலிடையூறின்றி முடியவேண்டுமென்ற
யிற்று. இது விநாயகன்றுதி.

மேற்றிருவிருத்த மிந்நூற்சுருக்கநூலாகையிற் சிவ
முதல்யகடவுளர்வணககமு மாசாரியர்வணக்கமுந், தொகு
த்துக்கூறுவானெடுத்துக்கொண்டது.

பரனொடுபரையைப்பணிகுவாங்கெசத்தின்பதா
ம்புயம்பற்றுவாமெழிலார், தருதிருமுருகவேள்பதம்
வழுத்தித்தாழ்குவாங்கயிலைகாத்தருளுந், திருவுறுநந்
திமுதற்குரவர்கடாட்சிரமிசையணிகுவாம்பேசரி, வ

ருமருட்குருவாஞ் சிதம்பரதேவன் மலரடிநினைந்திட ரொழிப்பாம.

இ-ள்.—பரமசிவனோடு பராசத்தியையும் அட்டாங்கபஞ்சாங்கங்களும் நிலத்திலேதோயும்படி வணங்குவாம் யானைமுகத்தினையுடைய விநாயகனதுபயபாததாமரைகளையு முள்ளத்தில்முந்தப்பற்றுவாம் அழகுதானே நிரம்பியுறுகின்ற பிறப்பினையுடைய முருகவேளென்னுஞ் சுப்பிரமணியனுடைய விரண்டுதிருவடிகளையுந் துதித்து வணங்குவாம முக்கண்டபரமேசுரனெழுந்தருளியிராநின்ற திருக்கயிலாயபருப்பதத்தைக்காவலாக்கொண்டருளும் பட்டச்செல்வத்தினையுடைய ஸ்ரீநந்திகேசுவரநாயனார் முதலியசந்தானாசாரியர்கள் சமயாசாரியர்களாகியவிவர்களுடையதிருவடிகளையு முடியின்மீதுசிரோமகுடமா யணிந்துகொள்ளுவாந் திருப்பேரியென்னுந் திருநகரத்தின் கண்ணெழுந்தருளியிராநின்ற ஞானாசாரியனாகிய சிதம்பரதேவனென்னுந் திருநாமத்தினையுடைய வெமதுசுவாமிகளினது செந்தாமரைமலர்போன்ற திருவடிகளையு மிதயத்திலிருத்தியெமதுசெனனமரண துக்கங்களாகிய விடரினையொழித்துக் கொள்ளுவாம்.—எ-று.

கெசத்தின்பதாம்புயமென்ற தெறிசுடர்விளக்கிருக்குமிடத்தையும் விளக்கென்றாற்போலக் கெசானனத்தினையுடைய விநாயகனையுங் கெசமென்றுருபெயராற் கூறியதெனக்கொள்க. அட்டாங்கபஞ்சாங்கங்களு நிலததிலேதோயும்படி வணங்குவாமென்றதற்குதாரணம்: ஆணிகைப்புராணம். "சென்னிதாளிருகன்னங்கழிருமுகம்வாய்புயங்க, ளென்னுமோரெட்டுஞ் சென்னியிருகரமுழந்தாளைந்து, நன்னிலந்தோயத்தாழ்ந்துநயந்துபின்பிதற்குப்பாங்கர், மன்னுபூங்கோயிலாக்கிக் குரவனை வழிபாடாற்றி." எ-ம்,வரும். மற்றுமவருவனவற்றாற்காண்க.

செனனமரண துக்கங்களாகிய விடொன்றதற்குதாரணம்: ஆ ரூநதிரட்டு. "பிறந்தவரிறத்தல்பிழைபாதெனவறிநதா, லூறுங் துயரொழிந்தினிய வுண்ணகினைவாரோ, மறந்துவிடயத்துழ யலுற்றிடுதல்வானமீ, திறந்தவுணாயுச்சிவிழுவோனிடைகொ ளின்பம்." என்றும், தத்துவாமிர்தம். "பிணிகளுங்கவலையும் பேசிலேழ்கட, லணைதருமணலினுமனந்தகோடியா, லிணைத ருபிறவியினிடரலாதொரு, கணமதுமிலதெனககண்டுநொந்த வன்." என்றும், தணிகைப்புராணம். "கருவினின்மழவிற்கற் குங்காலையிற்பருவமாறிற, பெருகியபொழுதிறேயிற் பிரிவி னிற்பகையினீட்டும், பொருள்வயின்வேட்டதெய்தாப் புன் மையின்முதுமைதன்னின், மருவியதிழப்பிற்சாவின் வன்றுய ர்மனிதர்க்குண்டே." என்றும், வயிராகதீபம். "உடலிதுற்பவ த்தேசாம்பெருநதுயர்மாய்ந் துறுகணத்துயரினெண்மடங் கா, விடையுளதிதிக்கட்டுயரமுப்பறிவோங் இளமையிற்பி ணியுருவிடத்தும், விடலரும்பசிநோய்காமநோய் தணிப்பது ன்மிகுபொருடேடுதறுயரீண், டடையினுமதனைக்காக்குதது யர்வோதாயினுமிகுநராற்றுயரே." எனறும், தேவாரம். "நடுவிலாக்காலன்வநது நணுகும்போதறியவொண்ணு, தடு வனவைந்துபூத மவைதனககாற்றலாகேன், படுவனபலவுங் குற்றம் பாங்கிலாமனித்தர்வாழ்க்கை, கெடுவதிப்பிறவிசீசீ கினி ரொளிச்சடையினுரோ." என்றும், சிந்தாமணி. "அடுகளி தொடரவீழ வைந்தலைநாகங்காண, விடிகிணற்றறுகின்வே ரைப் பற்றிநான்றிடவவ்வேரைக், கடுகவேரொலியும்வந்து க றித்திடவதினின்றேனுக், கிடைதுளிதேனக்கின்பம் போலுமி ப்பிறவியின்பம்." என்றும், காசிகண்டம். "கருவிலடைய மூந்துதன்பமுங்கிலத்தின் கண்ணுறிற்கொடியவெந்நோயான், மருவுவெந்துயருநாதிரையெய்தி வருந்துறுதன்பமுங்கட

ற்று, லுருவினையொருவுதன்பழுமீட்டுங் கருக்குழியொன்
றுறுதுயரும், வெருவாவெண்ணரியின்பவீடதனின் மேவநன்
குணர்தலைவேண்டும்." என்றும், சிவானந்தமாலை. "நீயு
ஞ்சிறிதுபொழு தாணவமாய்நின்றுபா, ராயமன்றுணின்று
டுமாண்டகையே, யோயாமலைம்புலனுயாடிப்பா ரானந்தத்
தாண்டவம்விட், டென்பிறவித் துன்பறியவின்று." எ-ம், வ
ரும். மற்றும்வருவனவற்றுற்காண்க.

மேற்றிருவிருத்தமிந்நூலினதனுபவ மனோலயத்துண்
டா மனுபவமேயாகையா லிதனைக்கூறும்பொழுது மனோவி
ருத்தியா யவ்வனுபவமு மொழியாதோவென்பாரைப்பற்ற,
வஃதொழியாதென்றோர் திட்டாந்தமுகத்தாற் கூறுவானெடு
த்துக்கொண்டது.

நின்னினைவொழிவின் மன்னிடுஞ்சொரூபநிலைய
கேமுத்தியின்முடிவென், றென்னருட்குரவனென்னி
னைவகற்றியெனக்கருண்முத்தியின்முடிவைப், பின்னு
ந்நினைவுகொண்டியான்புகறல் பெருவயித்தியனொரு
த்துருடன், றன்னிருளகற்றிக்கோலொழிப்பவும்பின்று
க்கோல்கைக்கொளல்போலும்.

இ-ள்.—உன்னுடையமனமொழிந்தவிடத்து நிலைபெற்று
நிற்குஞ்சொரூபமாகிய பரமசிவம் அந்தவிடமே மோட்சமுடி
வான விடமென் றென்னுடைய ஞானசாரியரானவ ரென்னு
டையமனதை நீக்குமுபாயத்தினு னீக்கி யெனக்கனுக்கிரக
ம்பண்ணியமோட்சமுடிவாகிய சுவானுபவநிலையை நீங்கினவ
ம்மனதைப் பிற்பாடுந் தழுவிக்கொண் டியானிந்நூலினைக்கூ
றுவான்றொடங்கலெப்படிப்போலவெனின் மகாவயித்தியனு

ணவன்கோல்காட்டநடக்கு மோரந்தகனுடைய விழியினைம
றைத்த படலத்தைநீக்கி யிருளையகற்றிப் பிரகாசத்தைக்காட்
டிக் கோலைநீக்கிப்போட் டிப்பிரகாசங்காட்டியவழியே செ
ல்லவு மப்பிரகாச மவன்விழிக்குக்கூசிப் பிற்பாடுந்தான
ந்தகோலைக் கையிலேயெடுத்துக்கொண் டவ்வழிநடத்தல்
போலுமாம்.—எ-று.

நின்னினைவொழிவின் மன்னிடுஞ்சொரூப மென்றதனு
னினைவொழியவேயிந்திய வுணர்வுகணங்கு மவைநீங்கினவி
டத்துச் சொரூபமேநிலைபெற்று நிற்குமென்பது பெறப்ப
ட்டது. இதற்குதாரணம்: பிரபுலிங்கலீலை. "இந்தியமோ
ரொன்றாய் விட்டிடின்மற்றையொன் றுசாரு, முந்தியமனமழி
ப்ப முற்றும்போமணியபாம்பி, னைந்தலைகளினுளொன்றை ய
ரிந்திடின் மற்றொன்றுலஞ், சிந்திடுமிடறரிதாற் றீர்ந்திடுமொ
ருங்குமாதோ." என்றும், ஒழிவிலொடுக்கம். "பாசங்கழ
ன்றாற் பசுவுக்கிடம்பதியா, மூசல்வடங்கழன் றதொவ்வாதோ
நேசித்த - பற்றற்றக்கண்ணே பிறப்பறுக்கும்பாட்டுமக்கோ,
மற்றைச்சமயமெங்குமாம்." என்றும், சிவஞானபோதம்.
"ஐம்புலவேடரி னயர்ந்தனைவளர்ந்தெனத், தம்முதல்குருவு
மாய்த் தவத்தினிலுணர்த்தவிட், டன்னியமின்மையி னரன்
கழல்செலுமே." என்றும், சிவஞானசித்தியார். "மன்ன
வன்றன்மகன் வேடரிடத்தேதங்கி, வளர்ந்தவனையறியாதம
யங்கிநிற்பப், பின்னவனுமென்மகனீ யென்றவரிற்பிரித்துப்
பெருமையொடுந்தானாக்கிப் பேணுமாபோற், றன்னியலைம்
புலவேடர் சூழலிற்பட்டுத், துணைவனையுமறியாது துயருறுந்
தொல்லுயிரை, மன்னுமருட்குருவாகி வந்தவரினீக்கி, மலம
கற்றித்தானாக்கி மலரடிக்கீழ்வைப்பன்." எ-ம், வரும். மற்று
ம்வருவனவற்றுற்காண்க. சொரூபமென்றதைப்பரமசிவமே

ன்றதற்குதாரணம்: பாடுதுறை. "தோற்றுவதெல்லாஞ் சொரூபமாய்த்தோற்றலேவோர், மாறறமருளி ஞானன்னேயெனனு, மாற்றமருளிய வல்லபங்கண்டெனக், காபருதகிசய மன்னேயெனனும்." எ-ம், வரும. மறறும்வருவனவற்றுறகாண்க. மனத்தைநீக்குமுபாய மியாதெனின் மேன்முதநிலைகூறுமிடத்துணர்த்துகிறோராங்குக்கண்டுகொள்க. இருளகற்றிக்கோலொழிப்பவும் பின்றுனக்கோல் கைககொளல்போலு மென றதனால் வயித்தியன்படலத்தைநீக்கிக் கோலையொழித்தொளியைக்காட்டவுங் கண்டவன் பின்னுந்தன்கட் கூசுதலானடைகூட்டும்பொருட் டககோலை யெடுத்துக்கொண்டானாயினு மவனுக்கவ்வொளியு மகலாதுநின்றறபோல வாசிரியன்மனத்தையொழித் தனுபவநிலையைக்காட்டவுங் கண்டயானும் பினுமிந்நூல் கூறும்பொருட் டநினைவை யெடுத்துக்கொண்டேனாயினு மெனக்குமவ்வனுபவநிலையு மகலாதுநிறகுமென்பது கருத்தாயிற்று. கோலொழிப்பவும் பின்றுனக்கோல் கைக்கொளல்போலுமென்றதற்குதாரணம்: ஒழிவிலொடுக்கம். "பழக்கங்கொடியதுபாா பாறையிலுங்கோழி, கிழிக்கும்பொலியைக்கிளறும் - விழித்துங்-குருடாக்கொளியகையாய்க் கூசிக்கோலபோடா, ரருளைபபகுக்குமான்மா." எ-ம், வரும். மற்றும்வருவனவற்றுற்காண்க.

மேலிரண்டுசெய்யு ளொருதொடராய்நிட்களமாய் நின்றபரமசிவமடியேனைப்பொருநதாஞ் செனனங்களைபபோக்கத்திருவுளமுயற்சிசெய்து சகளீகரித்துப் பேருருங்கொண்டு திருவடிதீட்சைசெய தனுக்கிரகிக்கத்தொடங்கியதைக்கூறுவானெடுத்துக்கொண்டது.

அருவதாயகிலகாரணமாகி யனந்தவானநதமாய சிவா,யொருவில்பூரணமாய்நித்தமாய்ச் சத்தாயோங்

குறுசூக்குமமாய்மாயை, தருகுறிகுணங்களொன்றுமில் லதுவாய்ச் சாற்றும்வேதாகமத்தளவாய்ப், பொரு விலபேரொளியாம்பரம்பொருடமியேன் புணர்பவம் போக்குவான்முயன்றே.

இ-ள்.—அரூபமாய்ச் சருவபிரபஞ்சங்களுக்குங் காரண மாய் முடிவற்றவின்பமாய் ஞானமேசொரூபமாய் நீக்கமின் றியெங்கு நிறைந்துநிற்பதாய் நித்தியத்துவமா யொருகால த்து மழிவின்றிநிற்பதா யுயர்ச்சிபொருந்திய நின்மலமாய் மாயைதருகின்ற வடையாளங்கள் குணங்களொன்றுமில் லாததாய்ச் சொல்லப்பட்ட வேதாகமங்களுக்கு மளவுபடா ததா யொப்பற்ற பெரும்பிரகாசமாய் விளங்காநின்ற பரம் சிவமெனிறையனைப் பற்றிவிடாதசெனனங்களை யொழிக்கும் பொருட்டுத் திருவுளமுயற்சிகொண்டு.—எ-று.

இதனுருவமின்றென்பதுந் தனக்கொருகாரணமின்றெ ன்பது மற்றவின்பங்களைப்போல முடிவுபெறாதென்பதுந் த னக்கொருவ ரறிவிப்பதின்றித்தானேயறிவனென்பதும் நீக் கமுடனேகண்டிதமின்றென்பது மனித்தியமின்றென்பது மெக்காலத்துமுள்ளதென்பதுந் தாட்சியு மசுத்தமுமின்றெ ன்பது மருளையின்றியோர் குறிகுணமின்றென்பதும் போத வொழிவில் விளங்குவதென்பதுந் தனக்குத்தானேயொப்பா கிய பேரறிவனென்பதுஞ் சருவத்துக்குமேலாகிய பரமசிவ மென்பது மதனையின்றி யொருவர்க்கொருவர் செனனமகற்ற மாட்டாரென்பதும் பெறப்பட்டன. இதற்குதாரணம்: சிவ ஞானசித்தியார். "அறிவாயகிலகாரணமா யனந்தானந்தமாய ருவாய்ச், செறிவாயெங்குநித்தமாய்த்திகழ்ந்தசத்தாய்ச்சுத்த மாய்க், குறிதான்குணங்களொன்றினறிக்கூறும்வேதந்தனக்

களவாய்ப், பிறியாவநுபூதிகந்தனக்காய்நின்றதந்தப்பிரமந்
தான்." எ-ம், வரும். மற்றும்வருவனவற்றுற்காண்க. வேதாக
மங்களுக்குமளவுபடாததென்றதற்குதாரணம்: திருமந்திரம்.
"ஆதாரமாறல்லவப்பாலுமல்ல, யோதாவொளியல்லவுண்ம
ந்திரமல்ல, வேதாகமத்தால்விளங்கும்பொருளல்ல, ஞானா
மாநந்திசொன்னவுபதேசமே." என்றும், மெய்ம்மொழிச்சரி
தை. "ஐந்துப்புலனின்வழிபோகாதடக்கமதுவேயனுட்டான
ஞ், சிந்தையதனின்மலஞ்சேராத் திறமேசவுசமனோசுத்தி, வந்
ததுவேநீராடன்மனநாணிறைக்குமெட்டாத, வெந்தையெ
னவேசோகஞ்செய் திருத்தலிறைபூசனையாமே." என்றும்,
சிவாகமார்த்திதரிசனம். "பன்னுமெந்நூல்களாலும் பகருமெ
வ்வளவையாலு, மன்னுமிப்பொருளதென்னைகவாசகஞானமா
கு, முன்னுமவ்வுணர்விறந்தவுலப்பிலபேரின்பவெள்ளந், தன்
னனுபோகமாகத்தான்றனிற்காண்பதொன்றே." எ-ம், வரும்.
மற்றும்வருவனவற்றுற்காண்க. (௫)

தெருளருளுருவாய்க்கொடுதிருநாமஞ் சிதம்பர
தேவெனப்புனைந்தோர், தருதிருப்போரிதனிலெழுந்த
ருளித்தமியனேன்பவம்வெரீஇயடிதாழ்ந், துருகியே
ற்றிடத்தன்னடிமுடிசூட்டி யொளிவளரத்தடாத்தகஞ்
செய், தருளினுற்பவந்தீர்தரமுத்திமுடிவை யறைகு
துங்கேட்டியென்றருள்வான்.

இ-ள்.—தெளிவாகியஞானமே திருமேனியாய்ச் சகளீக
ரித்துக்கொண்டு சிறப்புப்பொருந்திய திருநாமமுஞ் சிதம்பர
தேவனென்று தரித்துக்கொண்டழகுவிளங்காநின்ற திருப்
போரூரென்னுந் திருப்பதியின்கண்ணெழுந்தருளிவந் தெளிய

ளுகிய யான் செனனங்களுக் கஞ்சித் திருவடியைவணங்கிநெஞ்சங்குழைந்து தோத்திரஞ்செய்யத் திருவுளமிரங்கி யடியேன்புன்றலைமேற் றனதுதிருவடியைச்சூட்டி யிதயத்தினிடத்தும் விழியினிடத்து மழுந்தப்பதிவித்துத் திருவடிதீட்சைசெய்து பிரகாசமிகுந்த ஞானமயமாகிய திருக்கரத்தினையடியேனுஞ் சகலகேவலநீங்கிச் சுத்தஞானமயனாய் விளங்கும்படிக்குச் சென்னியின்மீதமயவமைத்து வொன்றுக்கும் பற்றாத வடியேன்மீது வைத்தபெருங்கருணையான் மோட்சமுடிவாகிய வுபதேசத்தை யுனதுசெனனங்க ணீங்கவுபதேசிக்கிறே னீயு முனதுமனமொழி மெய்களொருங்கிக் கேளும்பிள்ளாயென் றருளிச்செய்வான்.—எ-று.

மாயாவுருவன் மாயாவுருவினையே யானேய்ந்தவனெம்மனோ என்பானைப்பற்றப் "பொருவில்பேரொளியாம்பரம் பொருடமியேன்புணர்பவம்போக்குவான்முயன்றே, தெருளருளுருவாய்க்கொடுதிருநாமஞ்சிதம்பரதேவெனப்புனைந்தோர், தருதிருப்போரிதனிலெழுந்தருளியென்றூர்" ஆகையாற் சிவமேகுருவடிவென்பது கருத்தாயிற்று. இதற்குதாரணம்: திருவாசகம். "அருபரத்தொருவனவனியில்வந்து, குருபரனாகியருளியபெருமையைச், சிறுமையென்றிகழாது. - அன்றியும், "சிவனெனையாளுந்தேறினன்காண்க, வவனெனையாட்கொண்டருளினன்காண்க." என்றும், திருமந்திரம். குருவேசிவமெனக்கூறினனந்தி, குருவேசிவமென்பதுகுறித்தோரார், குருவேசிவமாகிக் கோனுமாய்நிற்குங், குருவேயுரையுணர்வற்றதோர்கோவே. அன்றியும், சுத்தசிவனேகுருவாய்வந்துதூய்மைசெய், தத்தனைநலகருள்காணுவதிமூடர், பொய்த்தகுகண்ணனமனென்பர்புண்ணிய, ரத்தனிவனென்றடிபணிவாரோ." என்றும், ஆனந்தருத்திரேசரந்தாதி. "குறியேதுமி

ல்லானென்குறிமாற்றக்குறியேற்று, னறிவாளனுணர்தருத்தி
ரோசம்பதியா, யுறைவானென்பதியெனக்கிங் கொழிக்கிற்ப
விளமாவின், முரிமேனிதரித்தானென்முடைமேனிக்கழிப்ப
வே." என்றும், சிவப்பிரகாசம். "காட்டிடுங்கரணமொன்றுமி
ல்லையேற்காணொணாதா, னாட்டியவிவற்றின்ஞான னணுகவு
மொண்ணுமுன்ன, னீட்டியதவத்தினாலேயிறையருளுருவாய்
வந்து, கூட்டிடுமிவற்றைநீக்கிக்குரைகழல்குறுகுமாறே." எ
ன்றும், திருவுந்தியார். "அகளமாயாருமறிவரியபொருள்
சகளமாய்வந்ததென்றுந்தீபறத், தானாகத்தந்ததென்றுந்தீபற."
என்றும், அவிரோதவுந்தியார். "எல்லாமுடையான்குருவா
கியிங்கெம தல்லலறுத்தானென்றுந்தீபற, வவன்றனோடொழு
வோமென்றுந்தீபற." எ-ம்,வரும். மற்றும்வருவனவற்றுற்கா
ண்க. அடிமுடிசூட்டியொளிவளரத்தமத்தகஞ்செய்[illegible]
தற்குதாரணம்: ஞானவிளக்கம். "மேலவத்தைகி[illegible]
வீட்டிநிராலம்பச், சாலவறிவாகத்தரியென்று - வாலறிவன்,
கால்வைத்தான்சென்னியிலே கைவைத்தானென்னுளத்தின்,
பால்வைத்தான்றன்னுருவைப்பார்." என்றும், திருமந்திர
ம். "திருவடிவைத்தென்சிரத்தருணோக்கிப், பெருவடிவைத்
தந்தபேர்நந்திதன்னைக், குருவடிவிற்கொண்டகோனையெங்
கோவைக், கருவழிமாற்றிடக்கண்டுகொண்டேனே." அன்
றியும், "இதையத்துநாட்டத்துமென்றன்சிரத்தும், பதிவித்
துப்பாதம்பராபரனந்தி, கதிவைத்தவாறுமெய்காட்டியவா
றும், விதிவைத்தவாறும்விளம்பவொண்ணாதே." அன்றியும்,
"உடல்பொருளாவியுதகத்தாற்கொண்டு, படர்வினைபற்றறப்
பாவித்துக்கைவைத்து, நொடியிலடிவைத்துநுண்ணுணர்வாக்
கிக், கடியபிறப்பறக்காட்டினனந்தியே." அன்றியும், "தன்
னையறிந்திடுந்தத்துவஞானிகள், முன்னைவினையின்முடிச்சை

யவிழ்ப்பர்கள், பின்னைவினையைப்பிடித்துப்பிசைவர்கள்,சென்னிகைவைத்தசிவனருளாலே.'' அன்றியும், "திருவடிஞானஞ்சிவமாக்குவிக்குந், திருவடிஞானஞ்சிவலோகஞ்சேர்க்குந், திருவடிஞானஞ்சிறைமலமீட்குந, திருவடிஞானந்திண்சித்திமுத்தியே.'' என்றும், சிவஞானக்கலம்பகம். "அடங்கவெலும்புநரோதாலுமா யருவருபபுற்றுமிழ்கின்ற, வுடம்பைநானென்றிருந்தேனையொழிவில்கருணைச்சிவஞானி, கடந்தபிரமநீயெனவேகழற்காலென்புன்றலைவைத்தான, முடங்குசுருள்வாளுக்கொருபொன் முடிசூட்டினனெம்பெருமானே.'' என்றும், போற்றிப்பஃறொடை. "கண்ணருளாலேநோக்கிச்சுடியபிறப்பாற்பட்ட, புண்ணுமிருவினையும்போயகல-வண்ணமலர்க், கைத்தலத்தைவைத்தருளிக் கல்லாயநெஞ்சுருக்கிமெய்த்தகைமையெல்லாம்விரித்தோதி யொத்தொழுகுஞ்,சேணிருள்வடிவுஞ் செங்கதிரோன்பானிற்பார், காணுதொழியுங்கணக்கேபோ லாணவத்தி, னதிகுறையாமலென்பாலணுகாம னிதிநிறுத்துநிலைபோற்றி.'' என்றும், சிற்றம்பலநாடியார். "நில்லாவுடலும்பொருளும் நிலையெனநின்றுணரும், பொல்லாதபுன்மையர்புன்மையை நீத்துப்புலன்வழியிற், செல்லாதொழித்தசிற்றம்பலநாடிசிரபுரத்தோ, னெல்லாம்பொய்யென்றிருபாதம்வைத்தானின்பமேலிட்டதே.'' எ-ம்,வரும். மற்றும்வருவன வற்றுற்காண்க. முத்திமுடிவையருளிறுப்பவர்தீர்தரவறைகுதுமென்றதற்குதாரணம்: திருமந்திரம். "கறுத்தவிரும்புகனகமதானுன்,மறுத்திரும்பாகாவகையதுபோலச், குறித்தகுருவருள்கொண்டவப்போதே, மறித்தும்பிறவியில்வந்தணுகாரோ.'' எனறும், வீராகமம். நீறுகோமயமதாகாநெய்யிருங்கீரமாகாச், சாறுகோதாகாமீட்டுந்தண்டுலநெல்லதாகாக், கூறுதாம்பிரம்பொன்னுகிற்குலவுமுற்செம்பதாகா,

வாறுபோலாசான்பாதமருவினோர்பவம்புகாரே." எ-ம், வரும். மற்றும்வருவனவற்றாற்காண்க. (௪)

மேற்றிருவிருத்தந் திரிபுடியென்றுகூறு ஞாதுருஞானஞேயங்களை சருவப்பிரபஞ்சமாய் நிற்பதாதலாலவையிற்றின் முதனின்றஞாதுருவைக் கூறுவானெடுத்துக்கொண்டது.

ஞாதுருஞானஞேயமென்றுலகினவின்மறையாகமங்கலைக, ளோதுறுமவற்றின்ஞாதுருவாவதுணர்வுதானென்பதைமறந்து, பேதமாமுடலைத்தானெனக்கருதிப்பெரும்பொருட்சார்புயிர்ச்சார்புந், நித்தியமாய்க்கொண்டவத்தைகளுட்சென்றுழல்கின்றவான்மாவாம்.

இ-ள்.—ஞாதுருவென்றும் ஞானமென்றும் ஞேயமென்று முலகத்துனசட் சொல்லப்பட்ட வேதாகமபுராணசாத்திரகலைக்கியானங்கள் கூறுகிறது மிங்ஙனங்கூறியவற்றின் முதனின்றஞாதுருவாவதேதென்னி லறிவேதனதுவடிவென்னுஞ்சுபாவத்தைமறந்துபோய்த் தானல்லாது தனக்கன்னியமாயநின்றதேகத்தை யனன்னியமாய்த்தானென்றே கருதிக்கொண்டு தேகாபிமானியாய் மிகுதியுடைய பொருட்சார்பென்னுந் தனதானியவத்திராபரணங்களையு முயிர்ச்சார்பென்னுந்தாய்தந்தை பெண்டுபிள்ளையாகிய குடும்பத்தையுந் நிதன்றிய நித்தியப்பொருளென்று நம்பிக்கொண்டு சாக்கிராதியவத்தைகளிலேபுகுந்துழலாநின்றவான்மாவாம்.—எ-று.

உணர்வுதானென்பதை மறந்தெனவே மறவாதுணர்வே தானெனுநின்றது. சுத்தஞாதுருவென்பதுந்தானேபெறப்படும். இதிற்பேதமாமுடலைத்தானெனக் கருதியென்றதற்குதார

ணம்: ஞானவாசிட்டம். "மொய்யுடலுனையென்னின்மூலேமூரருமஃதே, வெய்யவெந்துயராமேனு மெய்யையானென்னவேண்டா, மையமில்கேள்விநல்லோர்நினைவரோவனைத்தாமூனுங், கையுரத்தின்பரோனுராய்ப்பிணங்கவரார்நீசர்." அன்றியும், ராமுடலென்னுமாசான் ஞானக்கண்குருடாய்ப்போகுங், தோமறவதனைத்தூரத்துரப்பதே சோதிஞான, மாமுகிலிலாநிலாப்போல்வயங்கிடுமனையகண்ணு, மேலுமுறம்பிறவிவேலையிருங்கரையெளிதிற்சேருன்றம்." அன்றியும், மூகமாய்ச்சடமாய்ச்சுகாசுகங்களிலே மூழ்கியோர்பயனறவருந்துங், தேகமாநீயாரசோவகோவிதோரசித்திரமிருந்தவாகாறு, யேகமாய்மெய்யாயிலங்கியபிரமமெங்குமாயிருக்கவுந்தோன்ருச், சோகமாய்ப்பொய்யாய்விளங்குறுமாயைதோன்றிடாதிருக்கவுந்தோன்றம்." என்றும, திருவாசகம். பொத்தையூன்சுவர்புழுப்பொதிந்துமுத் தசும்பொழுகியபொய்க்கூரை, பித்ததமெய்யெனக்கருதிநின் றிடர்க்கடற்சுழித்தலைப்படுவேனை, முத்துமாமணிமாணிக்கவயிரத்தபவளத்தின்முழுச்சோதி, யத்தனுண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே. என்றும், அவிரோதவுந்தியார். "அழிதேகமன்றுயிர்க்கன்னியமேயெனும் பழமோகத்தால்யானென்றுந்திபற, பற்றுமையோற்றுமையுந்திபற." என்றும், சிவாகமார்த்ததரிசனம். "தானலாதொன்றதனைத்தானெனக்கருதிக்கொண்டே, யானெலாஞ்செய்தேனென்னுஞானமஞ்ஞானமத்தா, வீனமாம்வினையிரண்டாமிருவினையாலுடம்பா, மூனமாருடம்பாலூழாமூழிறலாகாதுண்டோ." எ-ம், வரும். மற்றும்வருவனவற்றுற்காண்க. பொருட்சார்புயிர்ச்சார்புகளைத்தீஇன்றியநித்தியப்பொருளொன்றுநம்பிக்கொண்டென்றதற்குதாரணம்: உபதேசகாண்டம். "மக்களைநிலையைப்பேதைமகளிரைமருங்குசூழ்

ந்த, வொக்கலைநோக்கியேமாநதுறுகதிநோற்கலாராய், மிக்கி ழிகிரயத்தாழ்வர் மென்சிறுபறவைகண்டாக, தொக்கவெருஉ ழுறுக்கண்டைகொண்டுவிணடுயலாதன்றே." என்றும், வயிரா கதீபம். "கயல்விழிமனைவியனைமுதலியவாங் கட்டறுதனை யெனதெனவு, மியலபதாமசுத்தமாதியாருடற்கட்டிதனையா னெனவுமவைதெனுமோா,மயலதாமிருளைதறுறவெ வும்மா ளியான்மாற்பிநெஞ்சகத்தினைவிளக்கரு, செயல்விாநூறுரூப பெயர்வயிராகதீபமென்றுரைத்திடபபடுமால." என்றும, தணி கைபபுராணம். "மனைக்குரிமனையாடன்னைவாய்சதன்மைம தாதமைமக், கனைத்தலைசுருட்டும்வேலைக்கடனிகர் செலவநத ன்னை, யெனைத்தைதபுமிலம்பாடென்றேயிம்மெனத்துறநதுபெ ம்மான்,றனைச்சரணடைநதுளாரோதனைநிகரில்லாச்செலவா." என்றும், அஞ்ஞவதைப்பரணி. "வந்தவழிகககணவநதுலர்போ கும்வழியினும்வருவாரலரிடைவழியார், சந்தமசத்தாயத ன்னெடும்வநதாாதாரமுமுற்றாதாமுமெலாமே." என்றும், தத்துவாமிர்தம. "கள்ளக்கோலக்கருங்குழனமாதாபான், முள்ளித்தேனைமூனிநதெழுமுத்தியாம், வெள்ளத்தேனைவிரு மபும்விடையினு, னெள்ளிற்போதுமிராதகன்றேகிறுன." என் றும், தேவாரம். அருத்தமுமனையாளொடுமக்களும,பொ ருத்தமில்லைபொல்லாததுபோகட்டுங், கருத்தன்கண்ணுதல ணைல்காட்டுப்பள்ளித், திருத்தன்சேவடியைச்சென்றுசே ாமினே." என்றும், ஒழிவிலொடுக்கம். "நாடுநகாவீடுடையா டாய்தநதைநட்புமககள், மாடுகுலம்பொனனுடம்பினவாத னைகள்கூடத், தொடுத்தவலைக்கண்ணித்தொடக்கிதனையிப்போ, விட்டுப்பெறுவாரோனபிறப்பாாமேல்." என்றும், குகைநமசி வாயர். "கள்ளிக்குமாலாக்கிககாற்குவிலங்காக்கிபு பிள்ளைக் கையாணியின்னிறுக்கி - மெள்ளக்- கடுமிடறென்சோனே

சன்கற்பித்துயிரைப்-படுகுழியிற்பாச்சினத்தைப்பார்." எ-ம், வரும். மற்றும்வருவனவற்றுற்காண்க. சாக்கிராதியவத்தை களிலேபுகுந்துழலாநின்ற வான்மாவென்றதற்குதாரணம்: சிவஞானசித்தியார். "சாக்கிரமுபபத்தைந்துறுதலினிற்கனவு தன்னி, லாக்கியவிருபத்தைந்து களத்தினிற்சுழுனைமூன்று, நீக்கியவிதயந்தன்னிற் றுரியத்திலிரண்டுநாபி, நோககியதுரியாதீதநுவலின் மூலத்திலொன்றே." அன்றியும், படைகொடுபவனிபோதும்பாாமன்னன்புகும்போதில்லிற், கடைதொறுமவிட்டுவிட்டுககாவலும்விட்டுப்பின்ன, ரடைதருந்தனியேயந்தப்புரத்து னிலதுபோலான்மா, வுடலினிலைநதவததையுறுமுயிராகாவலாக." எ ம், வரும. மற்றும்வருவனவற்றுற்காண்க. (ரு)

மேலிரண்டுசெய்யுளான்முற்கூறிய திரிபிடிமூன்றனுளிடைநின்ற ஞானத்தையு மதனதுபெயர்களையுங் கூறுவானெடுத்துக்கொண்டது.

கலைகளினியம்புஞான மாவதிவண்கழறியஞாதுருவென்னு, மலைவுறுமான்மாவாயவன்மனத்தோடமூந் திஞானேந்தியமென்னு,மிலகுமெய்வாய்கண்மூக்குறு செவியினிடமதாய்நின்றுறுபுலனை,நலனுறுவிருப்பும் வெறுப்புமாய்நாடல் ஞானமாமிதன்பெயர்சிலவால்.

இ-ள்.—கலைக்கியானங்களிற் கூறுகின்ற ஞானமாவதே தென்னில், இவ்விடத்துக் கூறிய ஞாதுருவென்னு மயக்கத்தைப் பொருந்திய ஆன்மாவாயவன்மனதோடுகூடி ஞானேந்தியமென்னும் பெயரினையுடைத்தாய் விளங்காநின்ற மெய் வாய் கண் மூக்குச் செவியென்று உறுகின்ற பொறிக

ளினிடமாய் நின்று அதனிற் பொருந்தாநின்ற விடயங்களை நன்குறுவிருப்புந் தீங்குறுவெறுப்புமாயக் காண்டலே ஞானமாம் இந்த ஞானத்துக்குப்பெயர்கள் சிலவுண்டு.—எ-று.

நலனுறுவிருப்பென்கையாற் றீங்குறுவெறுப் பென்கை தானேபோதரும். ஆலீற்றசை. இதற்குதாரணம்: பிரமகீதை. "தேசுறுவிழியாற்கண்டு செவிகளாற்சொற்களகேட்டு, நாசியாற்கந்தங்கொண்டுநாவினுலிரதந்துய்த்துப், பூசியதோலினுலேபுலப்படப்பரிசமுண்டிங், காசறவுடலினிற்குமறிவதானுன்மாவாவான்." என்றும், கந்தரநுபூதி. "கைவாய்கதிர்வேல்முருகன்கழல்பெற், றுய்வாய்மனனேயொழிவா யொழிவாய், மெய்வாய்விழிநாசியுடன்செவியோ, டைவாய்வழிசெல்லுமவாவினையே." என்றும், தேவாரம். "மூக்குவாய்செவிகண்ணுடலாகிவந், தாக்குமைவர்தம்மாப்பையவிழ்த்தரு, ணோக்குவானமைநோய்வினைவாராமே, காக்குநாயகன்கச்சியேகம்பனே." என்றும், நாலடியார். "மெய்வாய்கண்மூக்குச்செவியெனப்பேர்பெற்ற, வைவாயவேட்கையவாவினைக் கைவாய், கலங்காமற்காத்துய்க்கு மாற்றலுடையார், விலங்காமல்வீடுபெறும்." எ-ம், வரும. மற்றும்வருவனவற்றாற் காண்க. (௫)

விடயஞானமெனப்பொய்யறிவென்ன விளங்கெதிர்விடயமேயென்ன, வடைதருநாமமிதுசுகதுக்கத்தழுத்திமேற்பிறப்பினைக்கொடுக்கு, மடனுறுகொடும்பொய்ஞானமாமிதனை மருவுமெஞ்ஞானமாய்ப்பந்தங், கடிதருதுரியஞானமாய்ச்சொரூபஞானமாய்க் கருதலாகாதால்.

இ-ள்.—முற்கூறியஞானத்துக்கு விடயங்களை யறிவிக்
கையால் விடயஞானமென்றும் ஒன்றறியும்போதொன்றறி
யாமையாற் பொய்யறிவென்றும் போதத்தால்விளங்கவெ
திரிட்டுக்காண்கையால் விளங்காநின்ற வெதிராவிடயமென்
றும் பெயர்கள்பொருந்தாநிற்கு மிந்தஞானமானது ஆன்மா
வைச்சுகதுக்கங்களி லழுத்தி மேலும் பிறவியில்வீழ்த்தாநிற்
குமறியாமையையுடைய கொடியபொய்ஞானமேயாம் இந்த
ஞானத்தை யெக்காலத்து மெவ்விடத்தும் பொருந்தாநிற்கு
நித்தியத்தையுடைய மெய்ஞானமாகவும பாசங்களைக்களைந்
து விளங்காநின்ற துரியஞானமாகவும் சொரூபத்தைவிளக்
காநின்ற சொரூபஞானமாகவு நினைக்கலாகாது.—எ-று.

இது சுகதுக்கத்தழுத்தி மேறபிறப்பினைக் கொடுக்குமட
ஞானகொடும்பொய்ஞானமாமெனவே,இஃது அசத்ஞானமெ
ன்பதும் இதனைமெஞ்ஞானமாய்த் துரியஞானமாய்ச் சொரூ
ட ஞானமாய்க் கருதலாகாதெனவே, அங்ஙனங் கருதும்படிக்
குநிற்பதோர் சுத்தஞானமுண்டென்பதும் பெறப்பட்டது.
இந்தச்சுத்தஞானத்துக்கு எக்காலத்துமழிவின்றிமெய்ம்மை
யாய் விளங்குகையான் மெஞ்ஞானமென்றும் பாசங்களையக
ல்வித்துவிளங்குகையாற் றுரியஞானமென்றுஞ் சொரூபத்
தைத் தரிசிப்பிக்கையாற சொரூபஞானமென்றும் பெயராயி
ற்று. இதிலொன்றறியுமபோதொன்றறியாமையாற் பொய்
யறிவென்றதற்குதாரணம்: சிவஞானசித்தியார். "ஒருபுலனுக
ரும்போதங் கொன்றிலையொன்றின்பாலும், வருபயன்மாறி
மாறிவந்திடுமெல்லாமாயு, மொருபொழுதுணரினுண்டாமில்
லதிவ்வல்லல்வாழ்க்கை, மருள்கனவதுவும்போல மாயும்பி
ன்மாயமன்றே." என்றும், சிவஞானபோதம். "ஒன்றறிந்த
தொன்றறியாதாகியுடன்மன்னி, யன்றும்புலனையவஞ்செமத்

தை - யொன்றறித, லுள்ளதேயாயினது நீ தனித்தனிக்கண், டுள்ளலவையொன்றல்லையோர்." எ-ம், வரும். மற்றும்வருவனவற்றுற்காண்க. இந்தஞானமானது ஆன்மாவைச்சுகதுக்கங்களிலழுத்திமேலும் பிறவியில்வீழ்த்தாநிற்கு மென்றதற்குதாரணம்: திருவாசகம். "இந்திரியவயமயங்கியிறப்பதற்கே காரணமா, யந்தரமேதிரிந்துபோயருநரகில்வீழ்வேற்குச், சிந்தனையைத்தந்தென்னைச்சிவமாக்கியாண்டானை, யந்தமிலா வானந்த மணிகொடில்லைகண்டேனே." என்றும், தேவாரம். "வென்றிலேன்புலன்களைந்தும் வென்றவர்வளாகந்தனுட், சென்றிலேனுதலாலேசென்னெறியதற்குஞ்சேயே, னின்றுளேதுளும்புகின்றேனீசனேனீசனேயோ,வின்றுளேனுளையில்லேனென்செய்வான்றோன்றினேனே." அன்றியும், "படுகுழிப்பௌவத்தன்னபண்டியைப்பெய்தவாற்றாற்; கெடுவதிம்மாயவாழ்க்கை காண்டொறுங்கேதுகின்றேன், முடுகுவரிதனுளைவர்மூற்கரோலவர்களோடு, மடியனேன்வாழமாட்டேனுருர்மூலட்டனுரே." என்றும், அவிரோதவுந்தியார். "அசுணுதிக்கோரொன்று லைம்புலனுலுமிசையுமேற்கேடெமக்குந்தீபற, வெங்ஙனமுய்துமென்றுந்தீபற." என்றும், அமுதசாரம். "சிந்தாகுலமனிதர்சீசீசெவிமுதலா, மைந்தாலுமீடழியவல்லரேறு ~ வைந்திலொரு, வேட்கையசுணமிபம்விட்டின்மீன் வண்டிவைகள், கேட்கைமுதலொன்றொன்றின்கேடு" எ-ம், வரும். மற்றும்வருவனவற்றுற்காண்க. மடனுறுகொடும்பொய்ஞானமாமென்றதற்குதாரணம்: தேவாரம். "புள்ளுவரைவர்கள்வர்புனத்திடைமறைந்துநின்று, துள்ளுவர்சூறைகொள்வர்தூநெறிவிளையவொட்டார், முள்ளுடையிவர்கடம்மைமுக்கணன்பாதநீழ, லுள்ளிடைமறைந்துநின்றங்குணர்விலெய்யலாமே." அன்றியும், "பொய்யனைத்தையும்வி

ட்டவர்புந்தியுள், மெய்யனைச்சுடர்வெண்மழுவேந்திய, கையனைக்கச்சியேகம்பமேவிய, வையனைத்தொழுவார்க்கில்லையல்லலே." என்றும், திருவாசகம். "அடற்கரிபோலைம்புலன்களுக்கஞ்சியழிந்தவென்னை, விடற்கரியாய்விட்டிடுதிகண்டாய்விழுத்தொண்டற்கல்லாற், றொடற்கரியாய்சுடர்மாமணியேசுடுதீச்சுழலக், கடற்கரிதாயெழுநஞ்சமுதாக்குங்கறைக்கண்டனே." அன்றியும், "மாறுபட்டஞ்சென்னைவஞ்சிப்பயானுன்மணிமலர்த்தாள், வேறுபட்டேனைவிடுதிகண்டாய்வினையேன்மனத்தே, யூறுமட்டேமன்னுமுத்தரகோசமங்கைக்கரசே, நீறுபட்டேயொளிகாட்டும்பொன்மேனிநெடுந்தகையே." என்றும், பொன்வண்ணத்தந்தாதி. "ஒழித்தேன்பிறவியையூர்ந்தேனுவகையையோங்கிற்றுள்ள, மிழித்தேனுடம்பினையேலேன்பிறரிடையிம்மனையும், பழித்தேன்பழியேவினைக்கும்பஞ்சேந்தியக்குஞ்சரமூந், தெழித்தேன்சிவனடிசேர்ந்தேனினிமிகத்தெள்ளியனே." என்றும், திருவம்மானை. "மெய்யானதொன்றுமேமெய்ம்மைகாணம்மானை, மெய்யுன்றிமற்றெல்லாமித்தைகாணம்மானை." என்றும், திருவாய்மொழி. "ஆவிதிகைக்கவைவர்குமைக்குஞ்சிற்றின்பப், பாவியேனைப்பலநீகாட்டிப்படுப்பாயோ, தாவிவையங்கொண்டதடந்தாமரைகட்கே, கூவிக்கொள்ளுங்காலமின்னங்குறுகாதோ." எ-ம், வரும். மற்றும்வருவனவற்றுற்காண்க. எக்காலத்துமெவ்விடத்தும்பொருந்தாநிற்கு நித்தியத்தையுடைய மெய்ஞ்ஞானமென்றதற்குதாரணம்: அஞ்ஞவதைப்பரணி. "புனலினமிழாதுகனமிசையூதைபொருதவலையாதபொருளதா, மினலினெரியாதுபடையின ழியாதவறிவையறிவீர்கடிறமினோ." என்றும், திருமந்திரம். "அறிவுக்கழிவில்லை யாக்கமுமில்லை, யறிவுக்கறிவல்லாதாரமில்லை, யறிவேயறிவையறிகின்

றதென்றிட், டறைகின்றனமறையீறுகடாமே.'' என்றும், ஒழிவிலொடுக்கம். "உதியாதுளதாகியோங்கிப்பேராம, லதிருக்குமங்குறைந்தாகாமற் - பதையாத, வாகாயமுங்காலும்போலவசைவற்ற, தேகாண்பரிபூரணம்.'' என்றும், சிவஞானசித்தியார். "ஞானத்தால்வீடென்றேநான்மறைகள்புராணநல்லவாகமஞ்சொல்லவல்லவாமென்னு, மூனத்தாரொன்கடவாரஞ்ஞானத்தாலுறுவதுதான் பந்தமுயர்மெஞ்ஞானந்தா, ஞானத்தாலதுபோவதலாகதிர்முன்னிருள்போலஞ்ஞானம்விடப்பந்தமறுமுத்தியாகு, மீனத்தார்ஞானங்களல்லாஞானமிறைவனடிஞானமேஞானமென்பர்.'' எ-ம், வரும். மற்றும்வருவனவற்றுற்காண்க.

மேற்றிருவிருத்தமுறைகூறிய திரிபிடிமூன்றனுட்கடைநின்ற ஞேயத்தைக் கூறுவானெடுத்துக்கொண்டது.

பன்னியஞேயமாவதுபூத பௌதிகமாம்பதார்த்தங்க, ளன்னவைமொழியினெதிர்விடயங்களாமவைஞேயமாமன்றித், துன்னுநுசிவமாகியவறிவினுக்குஞ்சொல்லுவர்ஞேயமென்றொருபே, ரின்னதென்னெனநீமயங்கலை புணர்தியிசைந்திதுவது வெனப்பகுத்தே.

இ-ள்.—முற்கூறிய ஞேயமாவதியாதென்னிற் பூதங்களானவை தடித்துப்பௌதிகமாய் விரிந்தான்மாவைச் சிவத்திற்சேராமற் பராமுகஞ்செய்து துன்பப்படுத்தாநின்ற சத்தாதிவிடயங்கள் அவைகளைக்கூறுமிடத்து எதிர்விடயங்களேயாம் அவ்வைகளே ஞேயமெனப்பெயர்பெற்று நிற்கும் அஃதல்லாமலும் நிலைபெற்றவறிவுச்சொரூபமாகிய பரமசிவத்துக்

துஞேயமென்றொருபெயர் கூறுநிற்பர்களிங்ஙனம்விடயங்களையுஞ் சிவத்தையுமிரண்டுஞேயமாய்க் கூறவேண்டுவதென்னென்று நீ மயங்கத்தேவையில்லை முதற்கூறியதிருவிருத்தங்களிற் சுத்தஞாதுருவுஞ் சுத்தஞானமும் பெறப்படுகையாலித்திருவிருத்தத்திற் சுத்தஞேயமும்பெறவேண்டிச் சிவத்தையுஞேயமென்றதெனவுங்கருத்தொத்து இதுசுத்தஞேயமெனவு மஃதசுத்தஞேயமெனவும் பகுத்தறிந்துகொள்ளுவாயாக.—எ-று.

இன்னதென்னெனநீமயங்கலையிசைந்திதுவதுவெனப் பகுத்துணர்தி யென்றதனாற் சுத்தஞாதுரு சுத்தஞானஞ் சுத்தஞேயமெனவு மசுத்தஞாதுரு வசுத்தஞான மசுத்தஞேயமெனவுந் திரிபிடி இரண்டுவகைப் பட்டிருக்குமறிந்து கொள்ளுதியென்பதாயிற்று. இதனான்மோட்சநிலையிற் சுத்தத்திரிபிடியு மாகாதென்பதை மேன்மோட்சநிலைகூறிய முன்னிருவெண்ணுஞ்செய்யுளினமூர்தலே சொருபமென்றதனாற்பெறப்படும் ஆனைக்கண்டுகொள்க. பூதங்களானவை பௌதிகமாய்விரிந்தான்மாவைச்சிவத்திற்சேரவமற் பராமுகஞ்செய்து துன்பப்படுத்துமெனறதற்குதாரணம்: ஆனந்தருத்திரோசரந்தாதி "படுவதொன்றிலைத்துன்ப மலாவெனும்பவுதிகத்திடைப்பண்பினெஞ்செய்து, விடுவதேவிடுத்தாலெழிற்காஞ்சியின்மேவுமானந்தருத்திரேசத்தனைத், தொடுவதாம்பயனெய்துறுமெயதுறிற் சூழ்ந்தவல்வினைமூலமலத்தோடுங், கெடுவதாமவைகெட்டிடினெய்துமாறகேடிலாப்பரமானந்தவெள்ளமே." என்றும், சிவப்பிரகாசம். "பந்தமானவையறுத்துப்பவுதிகமுழலுமெல்லைச், சந்தியாதொழியாதிங்குத் தன்மைபோல்வினையுஞ்சாருமந்தமாதிகளில்லாதவஞ்செழுத்தருளினாலே, வந்தவாறுவாசெய்வாவாதியாபேதியாவே." என்றும், சிவான

நதமாலே. "சீதமுடன்வெம்மைசெறிந்துமிகச்சலிக்கும், வாத மழைதடித்துவானிலிடி-தீதில், கவுரியொருபாகன்கருணையி லாகும், பவுதிகமீதென்றேபகர்." எ-ம், வரும். மற்றும்வ ருவனவற்றுற்காண்க. சிவத்தையும் ஞேயமெனறதற்குதார ணம்: சிவப்பிரகாசம். "தேசுறமருவுமான்மதெரிசனமான்ம சுத்தி, யாசிலாவான்மலாபமாகமூன்றுகுமூன்றும், பாசமத கலஞானமபற்றறுன்பணியைநீத்த, லேசின்ஞேயத்தழுந்த லெனுமிவற்றடங்குமன்றே." என்றும்; திருமந்திரம் "ஞே யத்தேநின்றோர்க்குஞாதுருநீங்கிடு, ஞேயத்திலஞாதருஞே யத்தில்வீடாகு, ஞேயத்தின்ஞேயதைஞேயத்தையுற்றவ,ரா யத்தினின்றுவறிவறிவோரே." எ-ம், வரும். மற்றும்வருவன வற்றுற்காண்க. (அ)

மேற்றிருவிருத்தந்திரிபிடியற்றுற் பிறப்புஅற்றுந் தி ரிபிடியுற்றுற் பிறப்பு உறறு நிற்குமாகையாற் றிரிபிடி நீங்கி ச்சொரூபஞானத்தைப் பெறல்வேண்டுமென் றருளிச்செய் வானெடுக்குக்கொண்டது.

ஓதுமின்னேயஞானஞாதுருவுமொழித்திடிற் பிற ப்பும்விட்டொழியும், பேதுறுமிந்தத்திரிபிடிதனைநீபி டித்திடிற்பிறப்புனைப்பிடிக்கு,மாதலாலோதுந்திரிபிடி தனைநீயகன்றுயர்சொரூபஞானத்தைக்,கோதறவடை யச்சூட்சியுங்குறுக்கிக்கூறுதுங்கேளெனக்கூறும்.

இ-ள்:—விளம்பாநின்ற ஞேய ஞான ஞாதருவென்னுமூ ன்றினையுமொழித்தவிடத்துப் பிறவித்துன்பமூ முன்னைவிட் டொழிந்துபோம் அறியாமையைச் செய்யாநின்ற இந்தமுப் பிடியினையு நீபற்றிக்கொள்ளுவையாயிற் பிறவித்துன்பமுமு

ன்னைவிட்டுநீங்காதுபற்றிக்கொள்ளு மாகையான் முற்கூறி யமுப்பிடிகளையு நீவிட்டுநீங்கிச் சருவத்துக்குமேன்மையாய் விளங்காநின்ற சொரூபஞானமென்னும் பெயரினையுடைய சுவாநுபவத்தை மனமுதலாய ஞானேந்தியங்களு மவைகளாலபகரிக்கப்பட்ட விடயங்களும் அவ்விடயங்களால் விளையாநின்ற விருப்புவெறுப்புகளுமாகிய குற்றங்கணீங்கிப் பொருந்தத்தக்கதாக வுள்ளவுபாயமும் விரிவின்றிச் சுருக்கத்திலே கூறுகின்றேன் மனமொழிமெய்க ளொருங்கிக்கேட்பாயாகவென்றருளிச்செய்வான்.—எ-று.

மனமுதல்விருப்புவெறுப்பீறுய்க்கூறியவனைத்துஞ்சொரூபஞானத்திற்குத்தடையாகலா னவைகளைக்கோதென்றூர். சொரூபஞானத்தையடையத்திரிபிடியகலவேண்டுமென்றதற்குதாரணம்:ஷிரபுலிங்கலீலை. "ஞேயஞானஞாதருவெனுமிவை பலநிற்கு,'மாயின்வேறறுமுத்தியன்றதுசகமாமென்,றேயுமாறிதுவதுவெனுஞ்சுட்டிலாவியல்பை, மாயைமாறியதேவிபாலருளினன்வள்ளல்." என்றும், சிவஞானசித்தியார். "பரஞானத்தாற்பரத்தைத்தரிசித்தார்பரமே, பார்த்திருப்பர்பதார்த்தங்கள்பாரார்பார்க்க, வருஞானம்பலஞானமஞ்ஞானவிகற்ப, வாச்சியவாசகஞானம்வயிரதவத்தின்கலக்கந், தருஞானம்போகஞாதருஞானஞேயந், தங்கியஞானஞ்சங்கற்பனைஞானமாகுந், திருஞானமிவையெல்லாங்கடந்தசிவஞானமாதலினாற்சிவன்முத்தர்சிவமேகண்டிருப்பர்." என்றும், போரூர்முறை. "காட்டுவதுங்காண்பதுவுங்காட்சியும்போய்நின்றவின்ப, வீட்டினிடைதுயின்றேன்வேசரிக்கைதீர்வேனோ, மீட்டின்மிசையேறும்மகதேவர்சேயேநின்றூட்டுணையேதஞ்சஞ்சமரபுரிநாயகமே." என்றும், திருவம்மானை.

"காண்பானுங்காட்சியுங்கைவிட்டேனம்மானை, கைவிட்டவின்பங்களைகாணேனம்மானை." எ-ம், வரும. மற்றும்வருவனவற்றுற்காண்க. (௯)

மேலிரண்டுசெய்யுளாலீண்டுக்கூறிய திரிபிடிமூன்றனுள் ஞாதுருவானவன் ஞானத்தைப்பொருந்தி ஞேயத்தைக் கூடி விருப்புவெறுப்புற்றுப் பந்தப்பட்டுநிற்குமுறைமையை யருளிச்செய்வானெடுத்துக்கொண்டது.

ஞாதுருவெனுமான்மாநீ நவின்மனனோடுங்கூடி,
யோதுகண்ணிடமாய்நின்றிங்கொரு வெள்ளிப்பணத்
தைப்பார்க்கக், கோதுறுகருக்கன்வெள்ளியாயிற்கூர்
தருவெறுப்புந், தீதின்றப்பணமதாயிற்செறிவிருப்பமு
மாய்நிற்பை.

இ-ள்.—ஞாதுருவென்று கூறுமான்மாவாகிய நீ ஞானமென்று கூறுமனத்தோடுங்கலந்து ஞானேந்தியமென்று கூறுங்கண்ணிடமாய்நின்று இவ்விடத்து ஞேயமென்றுகூறுமொருவெள்ளிப்பணமாகிய விடயத்தைக்கண்டமாத்திரத்திற் குற்றம்பொருந்திய கருக்கன்வெள்ளியாயி னிரம்பாநின்ற வெறுப்பாயு மதுகுற்றமற்றுவிளங்காநின்ற நல்லபணமேயாயின் மிகுந்தவிருப்பமுமாயே நிற்பை.—எ-று.

இதனால் ஞாதுருவாகியவான்மா ஞானமாகியமனத்தையுமிந்திரியத்தையும்பொருந்தி ஞேயமாகியவிடயத்தைப் பொசிக்கும்போதுளவாகிய விருப்புவெறுப்பே கன்மமென்பதாயிற்று. (௧௦)

இதனைநீவிட்டுமற்றொன்றெதிருறக்கண்டபோ
துங், கதுமெனமுன்னம்போலக்கருதிருவினையாய்நி

ற்மை, யிதுவிரண்டிடமும்பெத்தத்திசையுணக்குணர்ந்துகொண்ணீ, மதிதருபெத்தநீங்குமிடமிப்பால்வகுப்பன்கேட்டி.

இ-ள்.—இந்தப்பணமாகியவிடயத்தை நீ விட்டுநீங்கி வேறோர்விடய மெதிரோபொருந்தக் கண்டகாலத்தும் விரைவிலேமுன்னம்பணமாகிய விடயத்தைக்கண்டபோது நின்றாற்போலக்கருதாநின்ற விருப்புவெறுப்பாகிய விருவினையிலொன்றுய்நிற்பை யிந்தவிரண்டிடமு முனக்குப் பெத்தத்திசையாயிருக்கும் நீ நன்றாயறிந்துகொள்ளுதி. மதியாகியவறிவைப்பந்தித்துவாராநின்ற பந்தநீங்குமிடமு மிப்பாற்பிரித்துரைக்கின்றேன் கருத்தொருமித்துக்கேட்பாயாக.—எ-று.

இதனுன் முன்கண்டபணத்தினிடமும் பின்கண்டதோர் விடயத்தினிடமும் பெத்தத்திசையெனபதும் நீ யவ்விரண்டிடத்தும் விளையாநின்ற விருப்புவெறுப்பாகிய விருவினைவசத்தாயே நிற்பையெனபதும் அவையேயுணக்குமேலைச் செனனத்துக்கு வித்துமாயவருமென்பதூஉநதொன்றநின்றது. இதற்குதாரணம்: சிவஞானசித்தியார். "மேலைக்குவித்துமாகி விளைந்தவையுணவுமாகி, ஞாலத்துவருமாபோலநாம்செயும் வினைகளெல்லா, மேலத்தான்பலமாய்சசெய்யுமிதமகிதங்கட்கெல்லாமூலத்ததாகியென்றும்வந்திடுமுறைமையோடே." என்றும், சிவாகமார்த்ததரிசனம். "வித்திலேவிளைவுதோன்ற விளைவிலேவித்தாமாங்கே, பெத்தமுன்வினைகளாலே பிறந்திடுமுடலதென்று, மெத்தவவ்வுடலினுலே மீண்டும்வல்வினைகடோன்றி, நித்தமாயிடையறுதே நிகழ்ந்திடுமாதியன்றே." என்றும், சிவப்பிரகாசம். "மேலைக்குவருவினையே தென்னிலங்கண்விருப்புவெறுப்பெனவறியவ்விளைவுமெல்லா,

மூலத்தவினைப்பயில்வாமென்னிருமென்முற்றியதன்பயனுண
க்குமுளைக்குமென்பர், ஞாலத்துவினைகளிருதிறனுகும்புந்
திரண்ணுதவினைகளுகும்வினையெனவென்றிரண்டா, மேலத்
தானிதமகிதமாமிதனுல்வழுவாதெய்தியிடும்புண்ணியபாவங்
களென்றே." எ-ம், வரும். மற்றும்வருவனவற்றுற்கா
ண்க. (கக)

மதிதருபேத்தரீங்குமிடமிப்பால் வகுப்பன்கேட்டி யெ
ன்றதற்கொக்க மேலிரண்டுசெய்யுளாற் பெத்தங்கணீங்கியவி
டமிஃதென்பதூஉ மிவ்விடமேகுற்றந்தீர்ந்த மோட்சமுடிவெ
ன்பதூஉங் கூறுவானெடுத்துக்கொண்டருளியது.

முன்னர்க்காண்பணத்தை விட்டவிடத்துக்கு
மொழிமற்றென்றை, யுன்னிப்பின்காணட்போறவிட
த்துக்குமிடையிலேயுன், றன்மனமொடுகண்ணொன்று
சாற்றுமிந்தியமுமில்லைத், துன்னெதிர்விடயமாகத்
தோற்றுமப்பணமுமில்லை.

இ-ள்.—முன்னர்க்காணப்பட்ட பணத்தைவிட்டுநீங்கி
யவிடத்துக்கும் விளம்பாநிற்கும் வேறொன்றைக்கருதிப் பிற்
பாடுகாணச்செல்லுமிடத்துக்கும் நடுவணேயுன்றன்மனதான
து பற்றுதற்கோர்கண்டிதப்பொருளின்றிச் சுத்தவெறுவெளி
யேயாயிருக்கையாற் றனக்குச் சீவனமின்றித்தான் சற்றுந்
தோன்றுதொழியு மொழியவே யஃதொன்றைப் பற்றும்போ
ததற்குவாயிலா யதனுற்சீவித்துநிற்குங் கண்ணுகியவிந்தியமு
ம் தனக்குச்சீவனமின்றி யதனோடுகூடவே யொழியுமிவைக
ளொழியவே யிவைகள்சீவிக்கும்போ திவைகளிடத்தினங்கி

யெதிர்விடயமாய்த் தோன்றுநிற்கு மந்தப்பணமுமில்லையாய் நீங்கிப்போம்.—எ-று.

இதனான் முன்காணப்பட்ட விடயத்தைவிட் டதற்குப்பின்னும் பின்காணும்விடயத்தைப் பற்றுதற்குமுன்னுமாய் நின்ற விடைவெளியிலேயுன்மனதுங் கண்ணும்விடயமுமில்லை யிதனைநன்றாயுன்னனுபவத்திலே யறிந்துகொள்ளுதியென்பதாயிற்று. இதற்குதாரணம்: தேவிகாலோத்தரம். "வானம்போலவடிவிலதாயெங்கு, மானதாசத்தியானம்பண்ணுதவன, கானந்தனனிலுலண்டெனக்கட்டுப்பட், டனமுானபிறப்பிறப்பெய்துமே." என்றும், ஒழிவிலொடுக்கம். "நீர்க்குப்பதமுநெருப்புச்சுடுந்தொழிலுங், காற்றைச்சலிக்கவுமார்சுற்பித்தா-ரார்க்குமிது, போசாமறுதிபுதைச்குநிழற்போலாகு,மாகாயம்போற்பாரறும்." எ-ம், வரும். மறறும்வருவனவற்றுற்காண்க. (௧௨)

ஆதலால்விருப்பினோடுவெறுப்புமங்கணையவில்லை
யோதுமுப்பிடியும்போயதுணையுணர்விறந்துநின்ற
சோதிசேர்சொரூபந்தானேதுளறவிளங்காநிற்கு
மேதமின்னிலையதாமவ்விடமுத்திமுடிவாமென்றும்.

இ-ள்.—முதற்செய்யுளிற் கூறியபடியே மனது மிந்தியமுமாகிய ஞானமும் அவைகளாற்பற்றியறியுமெதிர்விடயமாகிய ஞேயமுமற்றநிலைக்குளுனக்கில்லை யாதலாலந்ஞேயத்தாலெழும் விருப்புவெறுப்பாகிய கன்மங்களு மாங்கணுன்னையணுகுவதில்லை யவைகளணுகாதொழியவே யவைகளாற்பதைப்புற்றுநிற்குமுன்னது போதமும்பதைப்பற்றுநிற்கு மிங்ஙனம் பதைப்பற்றமாத்திரத்திற் சுட்டகன்றபரிபூரணானந்தமே விள

ங்காநிற்கு மவற்றுளுனது போசங்களைந்தப்பரிபூரணுனந்தமாயே நிற்பையாகலா ஸீயாகியஞாதுருவுமில்லை இங்ஙனமுற்கூறியஞான ஞேயஞாதுருவென்னுந் திரிபிடிகளுமகன்றதிவைகளனைத்துமகலவே யாங்குவிளங்குவதியாதோவெனின், வாக்குமனத்துக்கெட்டாத பரப்பிரகாசம்பொருந்திய சொரூபானந்தமாகிய பரமசிவந்தானே தனக்கோருபாதிகளுமின்றிச் சுயம்பிரகாசமாய் விளங்காநிற்கும் அங்ஙனம்விளங்காநின்றவிடமே முன்பரிபூரணுனந்தத்துட்கலாந்துநின்ற ஞாதுருவாகியவுனக்குச் சென்னதுக்கஙகணீங்கியவிடமாம் அவ்விடமேகூடுதல்பிரிதலின்றி நிர்த்தொந்தமாய் நிலைபெற்றுவிளங்காநின்ற மோட்சமுடிவாகிய விடமுமென்றுகூறி மேலுமருளிச்செய்வான்.—எ-று.

இவ்விரண்டுசெய்யுளானு முன்னர்க்காணப்பட்ட விடயத்தைவிட்டதற்குப் பின்னும் பின்காணச்செல்லும் விடயத்தைப் பற்றுதற்குமுன்னுமாய் நின்றவிடைவெளியிலே பிரகாசியாநின்ற சொரூபானந்தமே விளங்காநிற்கு மென்றதனுல் விடயத்தை விட்டமாத்திரத்திற்றுனே சொரூபநிலையாமென்பதாயிற்று. ஆதலானேயத்தாலெழும் விருப்புவெறுப்பாகிய கன்மங்களுமாங்க ணுன்னையணுகுவதில்லை யென்றதற்குதாரணம்: பகவற்கீதை. "வேண்டல்வேண்டாமையின்றிமிகைசெலாப்புலன்களாலே, மாண்டபோகங்கடுய்ப்பான்மனங்கலக்குறுன்மற்றத்தா, வீண்டியதெளிவுண்டாமாற்றெளியவேயெல்லையின்றிப், பூண்டநோய்நீங்குநீங்கப்புலனலாப்பொருளுந்தோன்றும்." என்றும், சிவானுபூதிவிளக்கம். "வெறுப்புவிருப்பென்றுவேறுரைத்தாலெந்தை, யுறுப்பிற்குறையாதோவுணர்வுடையோர்சொல்லுவரோ." அன்றியும், வேண்டலும்

வேண்டாமையுமாய்மேவும்வினைப்பயனு, மாண்டகையோடு
ற்றவனுபூதியானதே." என்றும், ஞானவாசிட்டம். "மேவலு
ற்றபோகத்தின்விருப்பும்வெறுப்புமெனக்கில்லை,யாவதெய்து
மதுவருகயாதுபோதுமதுபோகப், பாவமிகுமிவ்வஞ்ஞானப்
பகைவனுலேவிவேகமெனு, மேவமில்லாப்பொருளெல்லாமி
ழந்தேனுணர்வாலதுபெற்றேன." எ-ம், வரும். மற்றும்வரு
வனவற்றுற்காண்க. பதைப்பற்றமாத்திரத்திற் சுட்டகன்ற
பரிபூரணானந்தமேவிளங்கு மென்றதற்குதாரணம்: ஒழுவி
லொடுக்கம். "போதம்பதைப்பறவேபூரணமாம்பூரணமும்,
போதம்பதைத்தளவேபொய்யாகு-மீது, விழித்திமைப்பார்தின்
றுல்வெளியசைந்தாற்காற்றும்-பழக்கமதைச்சாட்சியைப்போ
ற்பார்." அன்றியும், "தொழிலிறுதிதானேசுகவுதயமென்
றுற் - றொழிலுதயந்துக்கமெனச்சொலலோம்-தொழில்செயி
னும்-வந்தபோகம்போலவுண்டுத்தன்மாத்திரமாய்ச்-சிந்தி
ப்பாரைப்பேணிச்செய்." என்றும், சிவஞானதீபம். உலகத்
தாடுகயிறகன்றவூசல்போலு முலவாததிரொழிந்தகறங்கு
போலு, மிகைத்தாடுவிசையறுபம்பரமேபோலும்விளங்கொ
ளிசேர்தாழ்ந்தமணிநாவேபோலுஞ், செகத்தாயசித்திரத்தினி
லைமைபோலுஞ்சிவபோகத்தடங்கியுயிர்ச்செயலொன்றின்றி,
யகத்தாயமம்போதப்பற்றுநீங்கி யசைவறநிற்பதுபரமானந்த
மாமே." என்றும், மெஞ்ஞானவெண்பா. "பதைப்பற்றிருக்க
ப்பரமசுகமென்று, லதைப்பெற்றிருக்கவறியாமல்-விதப்புற்
றுக், கற்றாபலநூலுங்கற்றவர்பாற்றற்கமிட்டு, நிற்பாரிதெ
ன்னநிலை." எ-ம், வரும். மற்றும்வருவனவற்றுற்காண்க. அவ்
விடமேகூடுதல்பிரிதலின்றி நிர்த்தொந்தமாய் நிலைபெற்றுவி
ளங்காநின்ற மோட்சமுடிவாகிய வீடென்பதற்குதாரணம்:
தாயுமானவர். "கூடுதலுடன்பிரிதலற்றுநிர்த்தொந்தமாய்க்கு

விதலுடன்விரிதலற்றுக், குணமற்றுவரவினொடுபோக்கற்றுநி லையானகுறியற்றுமலமுமற்று, நாடுதலுமற்றுமேல்கீழ்நடுப்ப க்கமெனநண்ணுதலுமற்றுவிந்து, நாதமற்றைவகைப்பூதபேத முமற்றுஞாதுருவின்ஞானமற்று, வாடுதலுமற்றுமேலான ற்றிரண்டற்றுவாக்கற்றுமனமுமற்று, மன்னுபரிபூரணச்சு கவாரிதன்னிலேவாய்மடுத்துண்டவசமாய்த், தேடுதலுமற்ற விடம் நிலையென்றமௌனியேசித்தாந்தமுத்திமுதலே, சிரகிரி விளங்கவருதெட்சணாமூர்த்தியேசின்மயானந்தகுருவே." என் றும், சிவார்க்கமார்த்ததரிசனம். "பெண்ணலியாணென்றில்லா ன்பெத்தமுமுத்தியில்லான், வண்ணமும்வடிவொன்றில்லான் வரவொடுபோக்குமில்லான் றிண்ணியபொருளாய்மேலாய்ச சேமமாயரிதாய்க்காண, வெண்ணிலாவாணுய்த்தூய்தாயிருப்ப துசிவமதன்றே." எ-ம், வரும். மற்றும்வருவனவற்றுற்காண் க. இவ்விரண்டுசெய்யுளானு முன்னர்க்காணப்பட்டவிடய த்தை விட்டதற்குப்பின்னும் பின்காணச்செல்லும்விடயத் தைப் பற்றுதற்குமுன்னுமாய்நின்ற விடைவெளியிலேபிர காசியாநின்ற சொரூபானந்தமே விளங்காநிற்குமென்றதற் குதாரணம்: ஞானவாசிட்டம். "அறிபொருளைவிட்டகன்று லழியுஞ்சித்தமந்தநிலைவியாபாரமனைத்துமில்லாச், செறிநன விற்சுழுத்தியாமிதனைநீயுந்தீராதபரிசயமேசெய்யச்செய்யப், பிறியின்முத்துரியமாமென்பர்மேலோர்பிறிவிலாவிதனிலேநி லைமைபெற்றுக், குறியறுமானந்தவேதாந்தசீலக் கொள்கை யாலானந்தங்கூடுமன்றே." அன்றியும், "ஓரிடம்விட்டோரிட த்தேயுள்ள முறிலவற்றினடுவுண்மையாகும், பேரிலதாயுண ர்விலதாய்ச்சடமிலதாமதுநீயேபிரியேலென்றுங், கூரியபுந் தியினாலேபூசித்துக் குடும்பியெனுங்குறிப்பைமாற்றித், தூரி தாம்பதிமனத்தின்றொடர்ச்சியிற் செல்லாதபடிதணிந்துநிற்

பாய்." என்றும், விருத்தாம்பிகைஅந்தாதி. "தன்னுடம்பிடையந்த ணைத்தோர்விடையந்தழுவச்சாருதன்முன், னைஞானநடுவேயிரு க்குமதே ஞானநிலையமடைந்திருந்தோரா, கள்ளவுருக்கித்திரிந்தா லுலகனைத்துந்தவங்கள்புரிந்தாலு, முன்னுருமுயர்வுதாழ்விலையெ ன்றுரைத்தாள்விருத்தகிரித்தாயே." என்றும், திருமந்திரம். "நடுவுநின்றார்க்கன்றிஞானமுமில்லை, நடுவுநின்றார்நல்லதேவ ருமாவர், நடுவுநின்றேசிவன்சிறசிவனாசியா, நடுவுநின்றார்வ ழிநானுநின்றேனே." என்றும், பரமாசாரியார். "அத்தனுமெஞ் ஞானியருமுரைத்தவாறே யாகமுடியிடையசையத்தறிபோ லாக்கிப், பத்திரங்கோமுகம்வீரம்பதுமத்தோடுபகர்கூர்மவா சனத்திற்படிந்தேகாந்த, முத்திரைசாம்பவியானநோக்கதாகு முயல்கருந்தைகநிலையிலிருந்திடாரை, மித்தகையசிவயோக த்திருப்பார்ஞானி யினியவர்க்குப்பிறவியு முண்டென்னலா மே," என்றும், பட்டினத்துப்பிள்ளையார். "மோகாந்தமா னமுலைமகளைக்கைவிட்டு; ஏகாந்தமானவிருப்பிடந்தான சேர்ந்திரோ." அன்றியும், "கட்டவுடலெடுத்தகாரணமெலாந் தீர, வெட்டவெளியானவீடுபுகுந்தீரோ." என்றும், போரூர் முறை. "கலியுகந்தோறுங்கற்பெலாநிறைந்தகன்னியர்நுவ ப்பான்மகிழ் [illegible], நிலைபெறுமபுரப்பரிமிசைத்தோன்றிநிற்பரி பூரணசுகமே, யிலையுளதென்னுமிரண்டின்மத்தியத்தினொமூ சொரூபத்தெனையிருத்தாய், தலைமைகொடவத்தோர்நிலவியு போரூர்சரவணபிரணவப்பொருளே." என்றும், மெய்க்குரு வினை. "மெய்க்குருவைத்தேடும்வெறித்தவெளிகாட்டும், பொ ய்க்குருவைத்தேடிநீபோகாதே - நெக்குருகி, நாணுமனுடு

வெளியிலேநிற்கக், கோணமறக்காட்டுங்குரு.” எ-ம், வரும். மற்றும்வருவனவற்றுற்காண்க. விடயங்களை விட்டமாத்திரத்திற்றானே சொரூபநிலையாமென்றதற்குதாரணம்: சிவஞானபோதச்சூர்ணிகை. தம்மையிந்திரியத்தின் வேறுவான்காணவே தமதுமுதல் சிற்பாதத்தையணையுமென்றது. அவைதாநாசற்கயிற்றுற்றாயத்தைபேயுயர்ந்தணையான. அன்றியும், வெண்பா. “சிறைசெய்யநின்றசெழும்புனலினுள்ளாஞ், சிறைசெய்புலனுணர்விற்றீர்ந்து-சிறைவிட், டலைகடலிற்சென்றடங்குமாறுபோன்மீளா, நிலைவிலரன்பாதத் ததையுற்று.” என்றும். திருவாசகம்.[1] “மாறிநின்றென்னைமயக்கிடும்வஞ்சப்புலனைந்தின்வழியடைத்தமுதே, யூறிநின்றென்னுளெழுபரஞ்சோதியுள்ளவாகாணவந்தருளாய்த், தேறலின்றெளிவேசிவபெருமானே திருப்பெருந்துறையுறைசிவனே, யீறிலாப்பதங்களாயவைகடந்தவின்பமேயென்னுடையன்பே.” அன்றியும், “நெடுந்தகைநீயென்னையாட்கொள்ள யானைம்புலன்கள்கொண்டு, விடுந்தகையேனைவிடுதிகண்டாய்விரவார்வெருவ, வடுந்தகைவேல்வல்லவுத்தரகோசமங்கைக்கரசே, கடுந்தகையேனுண்ணுந்தெண்ணீரமுதப்பெருங்கடலே.” என்றும், பதிபசுபாசவிளக்கம். “கண்பலபொருளைப் பற்றிக்கதிரினைப்பிழந்துநிற்குங், கண்பலபொருளைப்பற்றுதாயிடிற்கதிரைக்கூடும், புன்புலன்பற்றியாவிப்புனிதனைப்பிரிந்துநிற்கும், புன்புலன்பற்றுதாயிற்புனிதனைச்சேருமன்றே.” என்றும், எதிர்காலத்திரங்கல். “துச்சப்புலனூற்சுழன்றுதிரியாம, லுச்சிக்கதிர்ப்படிகமொவ்வுநாளெந்நாளோ.” என்றும், சிவஞானசித்தியார். “பன்னிறங்களவை

காட்டும்படிகம்போலுள்ளம், பலபுலன்களினிறங்காட்டும்பரி
சுபார்த்திட், டன்னிறங்களென்னிறமன்றெனறுதன்றன், னெ
ழினிறங்கண்டருளிறைவின்னிறத்தின்வேறாய்ப், பொய்ந்நிறவை
ம்புலனிறங்கள்பொய்யெனமெய்கண்டான் பொருந்தியவ
சிவத்தனொடுமபோதான்பின்னர், முன்னிறைநீர்சிறைமுறிய
முடுகியோடி, முன்னீர்சேர்ந்தன்னீராய்ப்பின்னீங்காமுறை
போல்." எ-ம், வரும். மற்றும்வருவனவற்றுற்காண்க. (௬௩)

மேலிரண்டுசெய்யுளான் மனமிறத் தோன்றுஞ் சொ
ரூபமானது மனம் உற ஒழியுமாகையாலிறந்த மனத்தைத் தழு
விச்சுட்டாது அங்ஙநிலைக்குட்சுட்டறநிற்கவே சொரூபநி
லையென்று அச்சொரூப நிலையை வற்புறுத்திக் கூறுவானெடு
த்துக்கொண்டருளியது.

ஒருபொருணினைவுபோய்ப் பின்னொருபொரு
ணினையுமுன்னாய், மருவிடைவெளியிலேயுன்மனநி
லையாகையாலே, சொருபநீதானாய்த்தோன்றுந்நிலைம
னங் கொண்டங்குன்னி, லொருதிரிபிடியுமுண்டா
யொழியுமச்சொரூபமென்றும்.

இ-ள்.—ஒருபொருளைநினைந்து நீங்கியதற்குப்பின்னும் ம
ற்றோர்பொருளைநினைவதற்குமுன்னுமாய்ப் பொருந்தாநின்ற
விடைவெளியிலே யுன்மனதுண்டோவென்னவதற்கங்கண்ப
ற்றுதற்கோர்பொருளுமின்றிச் சுத்தவெறுவெளியாய்நிற்கை
யால் அதுசற்றுந்தோன்றவில்லை யென்பை யாகையாலே ஆ

ங்குச்சொரூபமே நின்னைவிழுங்கி நீ தானேயாய்விளங்காநி(ற்)கும் இங்ஙனமுன்னைவிழுங்கித் தானேயொளிர்கின்ற சொரூபத்தை நீயொருமுதலாய்நின்றுதோன்றுதொழிந்த மனத்தைத் தழுவிக்கொண்டு சுட்டிக்காணப்போவையாகில் அஃது நீயாகியஞாதுருவு மனதாகியஞானமுந் தோன்றுமையாகிய ஞேயமுமெனனு மொருத்திரிபுடியு முண்டாய்நின்று அச்சொரூபமுஞ்சுட்டுதற்கெட்டாததூஉ மெனறுகூறிமேலுமருளிச்செய்வான்.—எ-று.

இதனுணமனதானதொருபொருளைநினைந்ததைவிட்டு மற்றொருபொருளைநினைவதற்குமுன்னாய் நின்றவிடைவெளியிலே தானொழிந்துநிற்கையால அங்குச்சொரூபானுபவமே விளங்காநிற்கும் அதனை யொழிந்தமனதைத்தழுவிக்கொணடு சுட்டிக்காணப்போவையாகில் ஃதொழியுமாகையால ஆங்குச்சுட்டற்றுநிற்கவேண்டுமென்பதேகருத்தாயிறறு. இதற்குதாரணம்:பாடுதுறை: "ஓராதபோதுளராவானே யோரிலொளிப்பாசுணானே." என்றும், ஞானமணமாலை. "என்றனைமாணவகாவிதெனறுசுட்டாதே,பன்னருமுண்மைதனைப்பாராதே-நின்றனிலே, யொன்றிலதுயொன்றுதங்குன்றனையொன்றுயே, லொன்றுமிரண்டல்லாதவொன்று." அன்றியும், "கட்டுங்கருவிகழிந்தாலுநின்றனிலே,கிட்டவரியானுமுனைக்கிட்டானே-விட்டகலாச்,சுட்டறிவானின்னிழப்பிற்காட்சிவருமுத்திதனி, லெட்டுணையுஞ்சுட்டாதிரு." என்றும், சிவானந்தமாலை. "உன்னையறிந்திடவு முன்பாலின்பம்பெறவு, மென்னபிழைநாடினேனெங்கோவே-முன்னறிவி,லுனென்றனியில்லைநாடிலதுபோ

ளகி. சாணென்று ஞானனேதான்." என்றும், மூதுரை. "ந ன்றென்றுந் தீதென்றும் நானென்றுந்தானென்று, மனமென றுமாமென்றுமாகாதே-நின்றநிலை, தானேதான்தத்துவத்தைச மைபோதத்தங்காக்கைக்குப், போகூர்போற்றேறும்பொருள்." எ ன்றும், தனிகையாற்றுப்படை. "அத்தகுருபெருமானருள்வி ளையாடலைச், சாறிதுகேண்மதிதவமேம்படுன, விச்சொன்றி ன்றிவினைவுபிககாகலியும், விச்சுமிக்கிருப்பவினைவுமுழுதொழி த்த, மௌனிசலைவளர்ப்பவொளிகளைத்தகர்த்து, மருகுகினைக் கழுவவருக்கினையேற்றிய, முறுநதொழிலாளர்க் குறுநுசே ணைகன்றும், வறுநதொழிலாளர்க்குவர்றுடன்கலந்தும், விதி த்தகல்விதிகளை விலக்கெனவுவர்த்தும், விலக்கினைவிதியென மேதகநயந்து, மித்தருதொழின்மைசித்தலுமியற்றிப், பெற றபேரின்பருள்பெற்றியனஃதான்று." என்றும், திருவம்மா னை. "சத்தியமான துசத்தேகாணமமானை, தற்போதமற்றவிட நதற்பரங்காணம்மானை." என்றும், திருமந்திரம். "மனம்விரி ந்துகுவிந்ததுமாசவ, மனம்விரிந்துகுவிந்ததுமன்னுயிர், மன ம்விரிந்துகுவிர்ததுவாயுவா, மனம்விரிந்துகுவிந்ததுமாண்டி டமுத்தயே." எ-ம், வரும். மற்றும்வருவனவற்றுற்காண்க. கஅ

மனமாருபொருளினுப்பண் மனமிறவோங்கிமே
லாய்த், துன்னுமச்சொரூபந்தன்னைத்தொலைந்தொழி
மனந்தழிஇப்பின், ஞன்னியங்கெகிரிட்டுப்பார்த்துழு
துயர்க்கடல்வீழ்ந்தேங்கா, தந்நடுநிலையைச்சுட்டாத
மூந்தலேசொரூபமென்றும்.

இ-ள்.—உன்னெதிராய்ச்சேராநின்ற விரண்டுபொருள்ளிடையேயுனமனத்தைக்கக்காணாதபடியினாலே சமானாதிகமின்றியுயர்ந்து தானேசருவத்துக்கு மேலாய் நிலைபெற்றுநிற்கின்ற சொரூபானுபவமே விளங்காநிற்கும் அச்சொரூபானுபவத்தை முன்னோன்றுதொழிந்த மனத்தைத் தழுவிக்கொண்டு பினருஞ்சுட்டியாங்கண் எதிரிட்டுப்பார்த்து ஒன்றாந்தோன்றவில்லையென்னுங்கிலேசத்தினால் உறுகின்றதுயர்க்கடலிலழுந்தியேக்கறவுறாது அந்தநிலையினிடத்துச் சுட்டுணர்வகன்று ஆங்கெத்தன்மைத்தாயிருந்ததோ அத்தன்மைத்தாயழுந்தி யுன்போதஞ்சற்றுந்தோன்றாமனிற்றலே யச்சொரூப நிலையாமென்றுங்கூறி மேலுமருளிச்செய்வான்.—எ-று.

அந்தநிலையைச்சுட்டாது நிற்றன்மாத்திரமே சொரூபமென்னின் அமையாதோ; அழுந்தலேசொரூபமெனவுங் கூறவேண்டுமோவெனில், ஆங்குச்சுட்டற்று நிற்றன்மாத்திரமேயாயிற் காண்பானுங்காட்சியுமாய்விளங்கிக் காண்பானாகியசுத்தஞாதுருவுங் காட்டுவதாகியசுத்தஞானமுங் காண்பதாகிய சுத்தஞேயமுமே தோன்றும். இங்ஙனந்தோன்றுஞ் சுத்ததிரிபிடியுநீங்கிநிற்றலே சொரூபநிலையென்பது இருநூற்றுணிபாகையால் அவையுநீங்குதற்கேதுத் தற்போதஞ்சிறிதுந்தோன்றாது அந்தநிலையில் அழுந்தி நிற்கவேண்டுமாகலிற் றற்போதஞ்சிறிதுந்தோன்றாதழுந்திநிற்றற் பொருட்டழுந்தலே சொரூபமெனவுங்கூறினார். இதனான்மோட்சநிலையின் முற்கூறிய சுத்தத்திரிபிடியுமாகா தந்தநிலையிற் றற்போதஞ் சிறிதுந் தோன்றாது ஆங்கு எத்தன்மைத்தாயிருந்ததோ அத்தன்மை

த்தாயழுந்திநிற்கவேண்டுமென்பதேகருத்தாயிற்று. உன்னை திராய்சசேராநின்ற விரண்டுபொருளினிடையே மனமிறந்துநின்றதென்றும் அந்நிலையேசொரூபநிலையென்றுங் கூறியதற்குதாரணம்: ஞானவாசிட்டம். "சொருபம்விட்டகலமோகமாம்வேறுசொல்லிடமுன்புபின்பில்லை, யொருபொருணினைவையொழித்துமேலப்பாலொருபொருணினைவுறிலந்த, விருபொருளிடையேநினைவறவிருக்கு மிதுசொரூபத்தியல்பிதுதான், மருவுகற்பனைமாண்டசைவில்கற்போலாய்வருஞானச்சுமுத்திதிரவடிவம்." என்றும், விருத்தாம்பிகைதுதி. "அறிபொருளறிவோனறிவினைக்கொடுப்போ ருயமுப்பொருளுமோர்விடையம், பொறியுறப்பிடித்தாலுளவிதைவிடுத்தோர்பொருளொடுதன்முனரிடையே, பிறிவறத்தோன்றுஞ்சொரூபமிங்கிதனிற்பேசுமுப்பொருள்களுமிலவாங், ஒறியறவறிதியென்றனள்விருத்த கிரியமர்பெரியநாயகியே." என்றும், ஞானவிளக்கம். "ஒருபொருளைநீத்தங்கொருபொருளைப்பற்றி, யிருபொருளும்போக்கியிடையே-யொருபொருளு, மற்றநிலையேதோ வஃதுதன்னிலையென்றான், குற்றமற்றஞானக்குரு." எ-ம், வரும். மற்றும்வருவனவற்றுற்காண்க. அந்நிநிலையிற்சுட்டற்றுநிற்கவேண்டுமென்றதற்குதாரணம்: சிவானந்தமாலை. "பற்றிலிழப்பாயகலும்பார்க்கிலிவனுண்டாகுமுற்றுணரில்வேறுகுமொன்றுமெனின் - முற்றும், பிறியாப்பொருள்பிரியும்பேசுமுறைக்கெட்டாக், குறியாக்குறியாங்குறி." என்றும், ஒழிவிலொடுக்கம். "இருட்கேவலத்தின்றெழுப்பியெதிரிட்ட, மருட்கேவலசகலமாற்றித்-திரிச்சுடர்

போற், றன்னறிவுதின்னிக்குத் தானுணவாய்ப்போயதல்லா லுன்னுதலேயொட்டுதல்காணும்.'' என்றும், மெஞ்ஞானதீப ம. "சுட்டற்றுச்சும்மாவிருவென்றுசொன்னக்கார், ரொட்டுக் கொளுவாய்துடைத்திட்டாய்-விட்டுவிடச், சொன்னாலுநகே ளாய்சுதந்தரவீனநதன்னேப், பன்னுயிதென்னபயன.'' எ-ம், வரும். மற்றும்வருவனவற்றுற்காண்க. மோட்சநிலேயின்முற கூறிய சுத்தத்திரிபுடியுமாகா தெனறதற்குதாரணம்: சிவநெ றிப்பிரகாசம்."ஞானமுடன்ஞேயஞாதுருவென்றுமூன்று நா டாமதற்றுணதுவாய்நண்ணியிடுமேனே-யூனமிலா,வுன்மனேக்கு மேலானமுத்தியுறநின்மலதுரியா தீதமெனவுரைப்ப, ரா னவிதேசுத்தமாமுத்தியாகு மன்றிவேறுளாக்குமுத்தியவைக ளெல்லா, மீனமாமுத்தியதுதன்னேயெல்லா மியம்புவாமறிந்த தன்னேயிசையாவாறே."என்றும், சிவஞானசித்தியார். "சன்மா ர்க்கஞ்சகலகலேபுராணவேத சாத்திரங்கள்சமயங்கடாம்பல வுமுணர்ந்து, பன்மார்க்கப்பொருள்பலவுங்கீழாகமேலாம்ப திபசுபாசந்தெரித்துப்பரசிவனேக்காட்டு, நன்மார்க்கஞானத் தைநாடி ஞானஞேயமொடுஞாதுருவுநாடாவண்ணம், பின்மா ர்க்கச்சிவனுடனும் பெற்றிஞானப்பெருமையுடையோர்சிவ னேப்பெறுவர்காணே.'' என்றும், ஏகம்பவாணரானந்தக்களிப் பு. "ஆனந்தமானந்தந்தோழி- கம்பராடுந்திருவிளையாட்டினே ப்பார்க்க, ஞானமுஞேயப்பொருளும்-பற்று, ஞாதாவுமில்லே யென்பார்க்கரியாராம், ஞானமுஞேயப்பொருளும், பற்று- ஞாதாவுமாய்ப்பகுப்பார்க்குமெட்டாராம்.'' என்றும், சிவ போகசாரம். "வாக்குமனக்காயத்தால் வந்தபொருளத்த

னையும், வாக்குமனக்காயத்தான் மாயுமே - வாக்குமனக், கா
யமுடலிருந்துகாணுஞாதுருஞான, ஞேயமொழிந்ததிலை."
எ-ம், வரும். மற்றும்வருவனவற்றுற்காண்க. ஆநந்தநிலை
யிறந்போசஞ்சிறிதுந்தோன்றா தங்கேதத்தன்மைத்தாயி
ருந்ததோ வத்தன்மைத்தா யழுந்திநிற்கவேண்டு மென்ற
தற்குதாரணம்: சிவபோகசாரம். "தன்னையிழந்திடத்தே
தானேசுகவடிவா, யின்னபடியென்றறியாவெங்கோனுள்-
பின்னைமற, நின்றநிலைதானுந்தெரியாதேநிறவங்கட், கன்
றேபிறப்பறுக்கலாம்." என்றும், தேவாரம். "ஒமப்படிந்
தகண்ணாருந்தானுகச்சி மயானத்தான்வார்சடையான்மா
சொன்றில்லா, னொப்புடையனல்லனொருவனல்லனோரூரன
ல்லனுவமையில்லி, யப்படியனவ்வுருவனவ்வண்ணத்தனவ
னருளேகண்ணாகக்காண்பதல்லா, லிப்படியினிவ்வுருவனிவ்
வண்ணத்தனிவனிறைவனென்றெழுதிக்காட்டொணாதே." எ
ன்றும், திருவாசகம். "ஏனையாவருமெய்திடலுற்றுமற்றி
ன்னதென்றறியாத, தேனையானெய்யைக்கரும்பினின்றேற
லைச்சிவனையென்சிவலோகக், கோனைமானனநோக்கிதன்கூ
றனைக்குறுகிலேனெடுங்காலே, மூனையானிருந்தோம்புகின்றே
ன்கெடுவேனுயிரோயாதே." என்றும், திருமந்திரம். "அ
ண்ணலிருப்பிடமாருமறிகில, ரண்ணலிருப்பிடமாய்ந்துகொ
ள்வார்களுக், கண்ணலழிவின்றியுள்ளேயமர்ந்திடு, மண்ணலை
க்காணினவனிவனாமே." அன்றியும், "கரியட்டகையன்கபா
லங்கையேந்தி, யெரியும்மிளபிறைசூடுமெம்மானை - யரியன்
பெரியனென்றுட்பட்டதல்லாற், கரியன்கொல்செய்யன்கொ

ல்காண்கின்றிலேனே." அன்றியும், "ஈதென்றறிந்திலேனித்
தனைகாலமு, மீதென்றறிந்தபின்னேதுமறிந்திலே, னீதென்ற
றியுமறிவையறிந்தபின், னேதென்றறியுமியல்புடையோனே."
என்றும், சிவானந்தமாலை. "எம்மானிருந்தபடியெப்படி
யோவென்பார்க்குச், சும்மாவிருப்பதல்லாற்சொல்லுவதென்-
செம்மலர்த்தா, ளன்றுங்காணப்பெற்றிலேனடியேனப்பொ
ருளை, யின்றுங்காணப்பெற்றிலேன்." என்றும், அம்மைதிரு
வந்தாதி. "அன்றுந்திருவுருவங்காணாதேயாட்பட்டே, னின்று
ந்திருவுருவங்காண்கிலே - னின்றுந்தா, னெவ்வுருவோநின்பி
ரானென்பார்கட்கென்னுரைக்கே, னெவ்வுருவோநின்னுருவ
மேது." என்றும், பொன்வண்ணத்தந்தாதி. "பொன்வண்
ணமெவ்வண்ணமவ்வண்ணமேனிபொலிந்திலங்கு, மின்வண்
ணமெவ்வண்ணமவ்வண்ணம்வீழ்சடைவெள்ளிக்குன்றந், த
ன்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணமால்விடை தன்னைக்கண்
டா, லென்வண்ணமெவ்வண்ண மவ்வண்ணமாகிய வீசனு
க்கே." என்றும், சித்தராந்தாதி. "அன்னையையிங்கெனையாளு
டையானையரவிந்தத்துப், பொன்னையடைந்துய்த்து மென்று
கொண்டேசென்றுபுக்கதற்பின், றன்னையுங்காண்கின்றிலேன்
சரணம்புயத்தாள்பணிந்த, வென்னையுங்காண்கின்றிலெனெ
ன்னமாயம்வெளிப்பட்டதே." என்றும், ஆனந்தருத்திரேசர
ந்தாதி. மீட்சியில்லதோரானந்தப்பெருங்கொளிவீட்டிடைக்குடி
யேற்றி, யாட்சிகொண்டருளானந்த ருத்திரேசத்தமரறவோ
னைக், காட்சிகொள்ளலுங்காணுருதிருத்தலுங்கரிசெனக்கண்
டாங்கே, மாட்சிகொண்டவக்காட்சியினயர்த்தனன்வளர்ந்த

தபெரும்போகம்." என்றும், திருவாய்மொழி. "பற்றிலனீசனுமுற்றவுநின்றனன், பற்றிலையாயவன்முற்றிலொடுங்கே." அன்றியும், உள்ளமுரைசெயலுள்ளவிம்மூன்றையு, முள்ளிக்கெடுத்திறையுள்ளிலொடுங்கே." என்றும், திருவுந்தியார். உள்ளமுருக்கியுடனாவதல்லது, தெள்ளவரியதொன் றுந்திபறச் சிற்பரச்செல்வனொன றுந்திபற." என்றும், ஞானமணமாலை. "கெட்டேனத்சயமோகேள்வியற்றநாட்டாரோ? திட்டாந்தமீதொன்றுசெப்பக்கே - ட்டாமற், றுனென்னையுள்விழுங்கித் தாக்கறறசீதத்தே, தானுமில்லைநானுமில்லைத்தான்." என்றும், சிவவாக்கியம். "மவுனமானமந்திரத்தின்வாசியேறியூடுபோய், வானெலாம்பரந்தசோதிமண்டபம்புகுந்தபின், னவனுநானுமெய்முயங்கியனுபவிக்குமளவிலே, யவனுமில்லைநானுமில்லையாருமில்லையானதே." என்றும், தேவாரம். "முன்னமவனுடையநாமங்கேட்டாள், மூர்த்தியவனிருக்கும்வண்ணங்கேட்டாள், பினனுமவனுடையவாரூர்கேட்டாள், பெயர்த்துமவனுக்கேபிச்சியானாள், ளன்னையையுமத்தனையுமன்றேநீத்தா, ளகன்றாளகலிடத்தாசாரத்தைத், தன்னைமறந்தாடன்னாமங்கெட்டா, டலைப்பட்டாணங்கைதலைவன்றாளே." எ-ம், வரும். மற்றும்வருவனவறறுற்காண்க. (௧௫)

இவ்விரண்டுதிருவிருத்தத்தானுஞ் சொரூபநிலையாகிய மோட்சமுடிவை வற்புறுத்திக்கூறி மேற்றிருவிருத்தம் மூன் மோட்சநிலைகூறுவான் றொடங்கியெடுத்துக்கொண்டமுன் னராதலாலொருவொருண் மன்னிருவென்னுஞ் செய்யுணன்கி

னுங் கட்புலனிறுதியுமனநினைவிறுதியு மோட்சநிலையென்று கூறியதுபோல மற்றையபுலன்களினிறுதியினும் அந்நிலைவிளங்கக்கண்டுகொள்ளுதியென்றோர் திட்டாந்தமுகத்தா னருளிச்செய்வா னெடுத்துக்கொண்டது.

ஒருபதந்தனைப்பதம்பார்த்துலையடுமடிசிற்கெல்லா
மருவுமப்பாகமதாயேமதித்துணர்வார்கள்போலப்
பெருகுகட்புலனிறுதியிற்பிறங்கியசொரூபமற்றும்
விரிபலபுலனினீற்றும்விளங்குறக்காண்டியென்றும்.

இ-ள்.—அடுதொழிற்செய்வோ ரமுதினைப்பக்குவம்பார்க்குமிடத்து ஓரமுதினைப்பக்குவம்பார்த்து உலையினிடமாய்ச்சமையாநின்ற அமுதினுக்கெல்லாம் பொருந்தாநிற்கும் அந்தப்பக்குவமேயெனநிச்சயித்தறிந்து கொள்ளுவார்கள் அவர்களைப்போல நீயும்விளங்காநின்ற கட்புலனிறுதியிற் பிரகாசியாநிற்குஞ் சொரூபானுபவத்தைக்கண்டுகொண்டதுபோல மற்றைய மெய் வாய் மூக்குச் செவியென விரிந்தபலபுலன்களின் இறுதியினுமச்சொரூபானுபவமே விளங்காநிற்கும் அதனையையந்திரிபறநன்றாய்த்தோன்ற நிச்சயித்தறிந்துகொள்ளுதியென்று மருளிச்செய்தார்.—எ-று.

விளங்குறக்காண்டியென்றதனாற் கண்ணாகியஞாதுருக திரொளியாகியஞானத்தைப்பொருந்திக் காண்புலனாகிய ஞேயத்தைச்சுட்டி யெதிரிட்டறிதலை விட்டவிறுதியின்கண் அக்கண்ணும் அக்கதிரொளியையன்றிநீங்கி *நிற்றற்குத்தனக்கு

வேறொரிடமுமின்றிச்சுட்டுணர்வுமகன் றெதிரீடு அற்று அத்துவிதமாய்த் தன்னொளியுந்தோன்றாமல் அக்கதிரொளியேயாய்நின்றாற்போல மற்றையபொறிகளுந் தத்தம்புலன்களைவிட்ட இறுதியிற் றத்தஞ்ஞானத்தையன்றி நீங்கிநிற்றற்குத்தமக்கு வேறொரிடமுமின்றிச் சுட்டுணர்வுமகன் றெதிரீடற்று அத்துவிதமாய்த்தமது அறிவுந்தோன்றாமற் றத்தஞ்ஞானமேயாய்நிற்குமெனவும், ஆன்மாவுமிவைகளைப்போலப் பஞ்சப்புலன்களைவிட்டவிறுதியின்கண் அப்பஞ்சப்புலன்களையுந் தனக்குணர்த்திய சொரூபஞானத்தை யன்றிநீங்கிநிற்றற்குத் தனக்கு வேறொரிடமுமின்றிச் சுட்டுணர்வுமகன்றெதிரீடற்று அத்துவிதமாய்த் தற்போதஞ்சிறிதுந்தோன்றாமல் அச்சொரூபஞானமே யாய்நிற்குமெனவும் விளங்குறக்கண்டுகொள்ளுதியென்பதாயிற்று. இதற்குதாரணம்: உண்மைவிளக்கம். "வானிடமாய்நின்றுசெவி மன்றுமொலியதனை, யீனமிலாத்தோல்காலிடமாக – வூனப், பரிசந்தனையறியும்பார்வையிற்கண்ணங்கி, விரவியுருவங்காணுமே." அன்றியும், "நன்றாகநீரிடமாய்நாவிரதந்தானறியும், பொன்றாமணமூக்குப்பூவிடமாய் – நின்றறியு, மென்றேதமன்றேயிவையாகமமிதனை, வென்றோர்சென்றாரின்பவீடு." என்றும்; திருவாசகம். "எரும்பிடைநாக்கூறெனப்புலனாலரிப்புண்டலர்ந்த, வெறுந்தமியேனைவிடுதிகண்டாய் வெய்யகூற்றொடுங்க, வுறுங்கடிபோதவையேயுணர்வுற்றவரும்பரும்பர், பெறும்பதமேயடியார்பெயராதபெருமையனே." அன்றியும், "ஆனைவெம்போரிற்குறுந்தூறெனப்புலனாலலைப்புண், டேனையெந்

தாய்விட்டிடுதிகண்டாய்வினையேன்மனத்துத், தேனையும்பாலையுங்கன்னலையுமமுதத்தையுமொத், தூனையுமென்பினையுமுருக்காநின்றவொண்மையனே." என்றும், பதிபசுபாசவிளக்கம். "பளிங்கினிலவன்னம்பற்றும்பகலவன்பக்கஞ்சாரிற், பளிங்கின்னில்வன்னம்பற்றுப்பகலவனுச்சிசாரில், விளங்குயிரிறையைக்காணுவேலையிற்புலன்கள்பற்றும, விளங்குயிரிறையைக்காணும்வேலையிற்புலன்பற்றுவே." அன்றியும், "மனனையுமறந்துமிக்கவனசவடிவமாகித், தன்னையுமறந்திருந்ததனயுனைப்போன்றுநீயு, மென்னையுமறந்தைம்போதவெயினாதம்வடிவேயாகி, யுன்னையுமறந்தாய்நீயென்னுருவெனவுணாந்துகொள்ளே." என்றும், திருவாய்மொழி. "புலனைந்துமேவுபொறியைந்துநீங்கி, நலமந்தமில்லதோர்நாடுபுகுவீ - ரலமந்து, வீயவசுரரைச்செற்றான், பலமுந்துசீரிற்படிமின்றொவாதே." என்றும், சிவஞானபோதம். "பன்னிறங்காட்டும்படிகம்போலிந்திரியந், தன்னிறமேகாட்டுந்தகைநினைந்து - பன்னிறத்துப், பொய்ப்புலனைவேறுணர்ந்துபொய்பொய்யாய்மெய்கண்டான், மெய்ப்பொருட்குத்தைவதமாம்வேறு."எ-ம், வரும். மற்றும்வருவனவற்றுற்றாண்க. (௧௬)

இங்ஙனங்கட்புலனிறுதிபோன் மற்றையபுலன்களினிறுதியினு மவ்வனுபநதோன்றநகண்டு கொள்ளுதியென்றருளிச்செய்த மேலு மாறுதிருவிருத்தத்தான் ஞானநூல்களிற் பலவிதமாய்க்கூறு மோட்சநிலைகளும் அந்தநிலையனுபவமேயாம் அவைகளினடையாளங்களையும் அந்தநிலையனுபவத்தி

விடத்தே தோன்றநிச்சயித்துப் புத்திபண்ணிக்கொள்ளுதி யென்றருளிச்செய்கின்றார்.

உருவநாமம்பொய்யென்றே யொருவிடிற்புலம் போம்போனன், மருவுறுபொறிபோம்போனல்வளர் கரணம்போம்போனல், விரிகளிருள்போம்போனு ல்விளங்குசுற்றமும்போமுற்று, மொருவிடஞ்சொரூ பமென்றேயுறைதருமிடமதென்றும்.

இ-ள்.—ஆன்மாவானவனுமரூபங்களாய்விரிந்த பிரபஞ் சத்தைபபொய்யென்றுகண்டுநீங்கவே யவனுக்குச்சத்தாதி யாகியபுலன்களிங்கு மவைநீங்கவே யவைகளைமருவாநின்ற பொறிகளிங்கு மவைநீங்கவே விருத்தியாநின்றவந்தக்கரண ங்களிங்கு மவைநீங்கவே விரியாநின்ற வித்தியாதத்துவங்க ளிங்கு மவைநீங்கவே விளங்காநின்ற சிவதத்துவங்களுநீங் குமாகையாற் றத்துவங்கண்முழுவதுநீங்கியவிடமே சொரூ பநிலையென்று ஞானநூல்களிற்கூறுநிற்குமிடமும் முற்கூறி யவாகநேநிலையிடமேயா மவ்விடத்து இத்தத்துவங்களனைத்து நீங்கிநிற்கையாலிதனை யாங்குநீநன்றாய்நிச்சயித்தறிந்து பு த்திபண்ணிக்கொள்வாயாகவென்றுகூறி மேலும் அருளிச்செ ய்வான்—எ-று.

இதனிலொருவிடஞ் சொரூபமென்றது முற்றுமொரு விடஞ்சொரூபமென்றதனுல் ஆன்மாவானவ னுமரூபங்களா ய் விரிந்தபிரபஞ்சத்தைப் பொய்யென்றுகண்டு நீங்கினவிட

த்து ஆன்மாவுக்குச்சத்தாதிவிடயங்களாகிய பஞ்சப்புலன்கண்
மேல் இச்சைசெனிக்கும் அதுசெனிக்கவே சோத்திராதிபஞ்
சப்பொறிகளு மவ்விடயங்களை யபகரியாது நீங்கும் அவை
நீங்கவே முன்னமபகரித்த டோது வசன கெமன தான விச
ர்க்க ஆனந்தங்களை விடையீகரிக்கும் வாக்காதிகளொந்து நீங்
கும் அவைநீங்கவே யப்பத்திந்திரியங்கட்கு மிடமாய்நின்ற பூ
தங்களிங்கும் அவைநீங்கவே விடயங்களைப்பற்றி நிச்சயித்
து அபிமானித்துச்சிந்தித்து நிற்குமந்தக்கரண வாசனைபொறி
யும் அம்மொழியவே விடயங்களைப் புசித்தற்கோ ரெல்லையு
ம் அவ்வெல்லையிலுண்டாம் விடயப்பயனும அவ்விடயப்பய
த்தைப் பொசிக்கும்போதோர் காலங்களினு மறியாததுபோ
லப் புதுமையும் இனிமேலு மிவ்விடய மநுபவிக்கவேணு
மென்றுங் கருத்துமுண்டாக்குங் காலதத்துவ நீங்கும் இது
நீங்கவே விடயங்களைப்பொசிக்கும் போதிவனுக்கிவ்வளவு
பொசிப்பென்னுமட்டறிந்து வரைந்துநிற்கு நியதிநீங்குமி
து நீங்கவேயான் மாவிடயங்களை யிச்சித்துப்பகுத்தறிந்து
பற்றியநுபவிக்க வவ்வான்மாவுக்கிச்சா ஞானக் கிரியைகளை
யெழுப்பவும் இராசம் வித்தை கலையென்னும்மூன்று நீங்கும்
இவைநீங்கவேயான்மாவைப்பஞ்சேந்திரியங்களினுங் கூறங்கு
யோற் கொண்டுசெலுத்தும் புருடனீங்கும் இதுநீங்கவே விடய
ங்களைப் பொசிக்குமிடத்தவ்விடய மென்றுநதாளொன்று மிர
ண்டறுமயக்கிநிற்கு மாயைநீங்கும் இங்ஙனம் வித்தியாதத்
துவங்க ணீங்கவே யிவை யிற்றைப்பிறேரகம் பண்ணுஞ் சுத்
ததத்துவங்க ளொந்துநீங்கு மிங்ஙனமான்மாவைப்பந்தித்து

நின்றதத்துவ முப்பத்தாறு நீங்கினவிடத் தான்மாவின் இச்சை பெத்தத்தில் விடயங்களிற் செனித்ததுபோலாங்குச்சொரூபத்தின்மேற் செனிக்கும் ஞானம் விடயானந்தம் அசுத்தம துக்கம் அனித்தியமென்றாலுஞ் சொரூபானந்தஞ் சுத்தம் சுகம் நித்தியமென்றும் ஆங்குப்பகுத்தறிந்து கொண்டுநிற்குங் கிரியை முனபு விடயங்களிற் சென்றதுபோல வாங்குச் சொரூபத்தினமேற் சென்றுநிற்கும் இங்ஙனமிச்சாஞானக்கிரியைகள் மூன்றுஞ் சொரூபமுகமாய்த்திரும்பிநிற்கவே யான்மாவுமவையே வாயிலாகத்தாழுமச்சொரூபானந்தத்தில் அழுந்திச்சற்றுந் தோன்றாது அதிலிரண்டறக்கலந்து அதீதப்பட்டுநிற்பனென்பது பெறப்பட்டது. நாமரூபங்களாய் விரிந்தபிரபஞ்சத்தைப் பொய்யென்று கண்டுநீங்கவே தத்துவமுப்பத்தாறு நீங்கியானமாச் சொரூபஞானத்தைப்பெறுகையாலிச்செய்யுளி னாமரூபங்களை முன்வைத்துக்கூறினார். உருவநாமம் பொய்யென்றதற்குக்காரணம்: அத்துவிதவுண்மை. "நாமரூபந்தனைநோக்கிநாடனமனமும்புறமுகமு,நாமரூபந்தனைநீக்கிநாடலறிவுமுண்முகமு, நாமரூபத்தெவ்வளவுநாட்டஞ் சொரூபந்தோன்றாது, நாமரூபநாட்டம்விடி னமதுசொரூபந்தோன்றியிடும்."என்றும், போரூர்ப்பிள்ளைத்தமிழ். "ஒருபொருளிடத்தினிற்சச்சிதானந்தமுட னுருவநாமமுமுள்ளதென்றுணாதந்துமுன்னர்பினரொன்றாய்விளங்கியுறபிரியமாயுளமூன்றுமே, மருவிரியவருமெய்மையுருவநாமம்பொய்மைவன்பழுதையுரகவுருவின், மாருதற்நககுத்தபின்பழுதைதான்றாய்மதித்தவர்க்கரவின்மையி னிருளறும்பிடமமேனிகழுமற்றொருபொரு

ளாமெதிரிட்டிலங்காதென, வேழ்பிறவிவாரிதியிலாழுமெனை வாவென்றெடுத்தருளளித்தகுரவ, தெருளுறுங்கலைமுனிவர்ப ரவுபோரூர்முருக சிறுதேருருட்டியருளே, சிமையமொய்த்திடுமிமையமயில்வயிற்றுதையமணிசிறுதேருருட்டியருளே." என்றும், திருவண்ணாமலையயாதசகாரியம். "அழிபொருளும் பொய்பபொருளுமளப்பிலவேயாதலினால், கழிபொருளாய்க் கைவிடுவாயொருக்காலுங்கருதாதே, யழிபொருளிலடங்காதவைந்துபெரும்பொருள்களையே, கழிபொருளாய்க்கருதாமலெப்பொழுதுங்கருதாயே." எ-ம், வரும். மற்றும்வருவனவற்றாற்காண்க. தத்துவங்கண் முழுவதுமென்றதற்குதாரணம்: தேவாரம். "எண்பதும்பத்துமாறுமென்னுள்ளேயிருந்துமன்னிக், கண்பழக்கொன்றுமின்றிக்கலக்கநானலக்கழிந்தேன், செண்பகந்திகழும்புன்னைச்செழுந்திரட் குரவம்வேங்கை, நண்புசெய்சோலைசூழ்ந்தநனிப்பள்ளியடிகளாரே." என்றும், திருமந்திரம். "முப்பதுமுபபதுமுப்பத்தறுவருஞ், செப்புமதிலுடைக்கோயிலுள்வாழ்பவர், செப்புமதிலுடைக்கோயில்சிதைந்தபி, னொக்கவனைவருமோடலுற்றாரோ." என்றும், திருவண்ணாமலையயாதசகாரியம். "மண்ணொடுசெவிபேசத்தம் வாக்காதியையைந்தாகு, மெண்ணியமனமேயாதியீரண்டிவைநாலாறே, கண்ணியகாலமோடுகருதிடிலேழுங்காணே, திண்ணியசுத்தவித்தையாதியனைவந்தாந்தேரோ." அன்றியும், "இந்திரியங்கடன் மாத்திரைகளாடிகள்வாயுக்க, ளொந்தாடப்பத்துப்பூதமோராந்தமனையையைந்தே, யைந்துசுத்தமுமேழ்வித்தையாங்காரமூன்றுமூன்றும், வந்திடுகுணங்களான்காம்

வாக்கந்தக்கரணநான்கே." என்றும், தத்துவரத்தினகரம். "ஆகியதொண்ணூற்றாறும்பொதுவதர்மாறுறென்ன, வாகிய தத்துவஞ்சைவர்கொள்வதாம்வேதாந்திக்கங், காகியநாலே ழாகுமையைந்தாமாயாவாதிக்; காகியநாலாறும்வைணவ ர்க்கறையுங்காலே." எ-ம். வரும். மற்றும்வருவனவற்றாற்கா ண்க. முற்றுமொருவிடஞ்சொரூபமென்றதற்குதாரணம்: பதி பசுபாசவிளக்கம். "காணுமலங்கள்போகக் கரிசறுமனம் போம்போது, லாணவமபாகும்போக வாருயிர்ப்போதம் போகுஞ், சேணுறுமொளிக்குமேலாஞ் சிவப்பிரகாசந்தோ ன்று, மாணனேயிதுவேமுத்திநிலையெனமதித்திடாயே."என் றும், உய்யவந்ததாயனார்புராணம். "பொருளுமனையுமறமறந் துபோசமறந்துபுலன்மறந்து, கருவிகரணமலவமறந்து கால மறந்துகலைமறந்து, தருமமறந்துதவமறந்துதன்னைமறந்துத ற்பரத்தோ, டுருகியுருகியொருநீர்மையாயேவிட்டாருய்யவந் தார்." என்றும், பிரபுலிங்கலீலை. "புலன்களையொழித்தபோ தேபொறிகளும்பூதமைந்துங், கலங்குறுகரணநான்குங்கலா தியுஞ்சுத்தமைந்தும், விலங்குறுமடியில்லைசதவெறுங்குடந தன்னின்மேன்மீமன், மலங்குறவொருங்கடுக்கு மட்கலம்வீழ் தலேபோல்."அன்றியும், "பூதநீயலைபொறிகளுமலையலைபுந்தி, யேதுநீயலையிவற்றினைமயங்கியானென்னும், போதநீயலை யென்றிவையனைத்தையும்போக்கிச், சோதியாகியபிரமமேநீ யெனச்சொல்லி." என்றும், பட்டணத்துப்பிள்ளைநாயனார். "பூதங்களற்றுப்பொறியற்றுச்சாணாம் புலன்களற்றுப், பே தங்குணமற்றுப்பேராசைதானற்றுப்பின்முனற்றுக், காதுங்

கரணக்கரையற்றவானந்தக்காட்சியிலே, யேதங்களினின்றி
ருப்பேனிறைவாகச்சிவேசம்பனே." என்றும், சிவானந்தமா
லை. "எல்லாமிறந்தவிடமேகாந்தமானவிடம், புல்லாதபேயரி
ன்பம்போனவிட - மெல்லைபடச், சொன்னவிடமேதலைவக
ளெல்லாந்துறந்தவிட,மென்னறிவுதின்னிக்கிடம்." என்றும்,
நெஞ்சொடுமகிழ்தல். "மண்[illegible]நீரிரந்து வளியிறந்து
வொளியிறந்து, விண்[illegible]லேமேவினையே - நெ
ஞ்சமே.' என்றும், சிவானுபூ[illegible]கம், "மண்முதலாம்பூத
வகுப்பனைத்துந் தம்பிரான், கண்ணிலடங்கியிடக்காணவாந்தா
னதே." என்றும், சந்தரலங்காரம். "வரையற்றவுணாசிரம
ற்றுவாரிதிவற்றச்செற்ற, புரையற்றவேலவன்போதித்தவா
பஞ்சபூதமற், றுரையற்றுணர்வற்றுளமற்றுயிரற்றுபாயம
ற்றுக், கரைபற்றிருளற்றெனதற்றிருக்குமக்காட்சியதே." எ
ன்றும், திருவாசகம். "வான்கெட்டுமாருதமாய்ந்தழனீர்ம
ண்கெடினுந், தான்கெட்டலின்றிச்சலிப்பறியாததன்மையனு
க்,கூன்கெட்டுயிர்கெட்டுணர்வுகெட்டென்னுள்ளமும்போய்,
நான்கெட்டவாபாடித் தெள்ளேணங்கொட்டாமோ." என்
றும், அஞ்ஞானநிவிர்த்தி. "ஊனிறந்துயிரிறந்துணர்விறந்து
ளமிறந்து,,தானுயர்பரமிறந்துதகுமனமுதலிறந்து, வான்மு
தல்முழுதிறந்துவளரொளியாகிநின்ற, தானிறந்திருந்தவின்ப
நந்தனையுரைசெய்யலாமே." என்றும், தத்துவராயர். "ஊனுமு
யிருமுணர்வுமுடனிறந்து, யானுமிறந்துபரனிறந்து-கோனெ
வடிவோதுமாறின்றிவாக்கிறந்துநீயிப், படியோவிருக்கும்ப
டி." என்றும், விருத்தாம்பிகைதுதி. "விரிவுறுமுருவாமமத

கற்றின்விடயங்கள் விளங்குறுவதனுனை, மருவுறுபொறிபோ மபொறியறக்கரணமாய்நடுவுகரணமாய்தலினற், புருடனை முன்னேழுஞ்சுத்த மோனாநதம்போமிதாற்சச்சிதானந்தங், கிரியையறறிலங்குமென்றனர்விருத்தகிரியமர்பெரியநாயகி யே. என்றும், மற்றும்வருவனவறறுற்காணக. (கஎ)

அற்புறுமாயைதந்த வளவிறத்துவங்களீங்கி
வற்புறுமலமதென்னும் வல்லிருளகன்றுமேலாரு
சிற்பரவெளியிற்போதந் தீர்ந்துசுட்டறநிற்பாயேற்
றற்பரமாவையென்று சாற்றிடமுமதேயென்றும்.

இ-ள்.—அன்மாவாகிய நீ இருளினுக்கு விளக்குபபோல அன்பைவிளையாநின்ற மாயையினிடத்துக் காரியப்பட்டுவரும் எண்ணிறந்த தத்துவக் கூட்டங்களை விட்டுநீங்கி அதற்கு மேல் நின்னைத் தோன்றுமன்மறைத்துநின்று வலிமையுற்ற ஆணவ மலமென்னும் பேரந்தகாரமுநீங்கி யிவைகளைநீக்குதற் கேதுவாய் உயிர்க்குயிராய்ப் பெரும்பிரகாசமும் பெருந்தட்பமுமாய்ப் பெருஞ்செல்வமும் பேரானந்தமுமாய்ச் சருவத்திற்குமேலாய் விளங்காநிற்குந் திருவருளாகிய ஞானகாயத்திற் சுட்டறவுன்போதமானது அணுவளவுந் தோன்றுமற்களைந்துநிற்பையாகில் ஆங்குவிளங்காநிற்கும் பேரானந்தச்சொரூபமாகிய பரமசிவமேயாகுவையென்றுங் கூறுநின்றவனுபவநிலையும் அந்நடுநிலையனுபவமேயாம் அவ்விடத்து இத் தத்துவங்களும் அஞ்ஞானமுஞ் சுட்டுதலைச்செய்யுந்தற்போத

முமின்றி நிற்கையால் இவ்வடையாளங்களை அந்நடுநிலையினி டத்து நீ நன்றாய்த்தோன்ற நிச்சயித்துப் புத்திபண்ணிக்கொ ள்வாயாகவென்றுகூறி மேலும் அருளிச்செய்வான்.—எ-று.

சிற்பரவெளியிற்போதந்தீர்ந்துசுட்டறநிற்பாயே லென்றதைச் சிற்பரவெளியிற்சுட்டறப்போதந்தீர்ந்துநிற்பாயே லெனக்கூட்டுக. அனைவிறத்துவங்கணீங்கியென்றதனால் ஆசாரியர்சீடரைநோக்கிப் பிருதிவிமுதல்நாதமீறுகக்கூறுநின்ற தத்துவங்களனைத்தையும் நீ யறிந்தாயோ அவைகளுன்னை யறிந்ததோவென்று வினவ அவைகளென்னை எக்காலத்தும் எவ்விடத்துஞ் சற்றும் அறியமாட்டா அவைகளை யானே அறிந்தேனென்று விண்ணப்பஞ்செய்ய ஆனால் அவைகள் சடமாயுனக்கன்னியமாய் நீங்கிற்றோ இன்றோவென்ன நீங்கிற்றென்ன இங்ஙனமே தத்துவங்களனைத்தினையுநீங்கி நில்லென்றருளிச்செய்தாரொன்பதூஉம் வற்புறுமலமதென்னும் வல்லிருளகன்றென்றதனால் அங்ஙனங்கருவிகரணங்களை நீங்கிநின்ற உனதுவடிவியாது உன்னைத்தோன்றவறிந்தனையோ என்றுவினவ சுவாமீ பேரந்தகாரமாயொன்றுந் தோன்றவில்லையே கருவிகரணங்கழன்றுங்கழலாவிருளின் பெருமையிதென் நம்பேர் தெரியவில்லையேயென்று கிலேசித்தசீடனை நோக்கி உன்னையநாதியாய்ச்செம்பிற்காளிதம்போற் பற்றிமறைத்துநின்று எல்லாக்கருவிகளும் இறந்தவிடத்திற்றானேமிகுதியாய் விடிகைக்கிருண்டமிகுதிபோற் றன்மடிகைக்கிருண்ட ஆணவமாகியது இதுதேயென்ன ஆனாலிவ்வாணவம் வானிலிரவிவர வல்லிருள்போமாறுபோ லென்னைவிட்டுநீ

ங்குவ தெந்தக்காலஞ் சுவாமியென்ன நீபயப்படாதே உன்னையறுதியேமறைத்து நின்றுசென்னமரணத் தழுத்தியவாணவத்தை வேறுசெய்வோங்காணென்று நீபேரந்தகாரமாயொன்றுந்தோன்றவில்லை யென்றுகூறினையே அப்பேரந்தகாரதனதயும் தோன்றுமையையு மறிவாய்நின்று கண்டியோ அறியாமையாய்நின்றுகண்டியோவென்ன அறியாமையாய்நின்றால் நிழலினிழற்சென்று ஒன்றியதுபோல அதனேடொன்றுய்ப்போவதன்றி அதனைவேறுபிரித்துக்காணமாட்டேன் ஆகையால் அறிவாய்நின்றே கண்டேனென்ன அவ்வறிவேசொரூபமாய் நின்றவிடத்து அவ்வறியாமையைப்பாரென்ன மிருந்தவக்கினியினிடத்துச் சலமுஞ் சலத்தினிடத்துப் புழுதியுந்தோன்றுததுபோல அறிவென்றென்னையறிந்தமாத்திரத்தில் அவ்வறியாமையாகிய பேரந்தகாரவிருளைக்காணேனென்ன இம்முறைமையிலே மலமாகிய வல்லிருளையகன்றுநில்லென்று அருளிச்செய்தாரென்பதூஉம், மேலாஞ்சிற்பரவெளியிற்போதநீர்ந்து சுட்டறநிற்பாயேற் றற்பரமாரவையென்றதனுல் இங்ஙனஞ்சகலகேவலங்களைநீங்கிநின்ற யவ்வண்ணமநிற்கின்றுயென்னச் சுத்தவறிவுச்சொரூபிய் நிற்கின்றேனென்ன நீயேசுத்தவறிவுச்சொரூபியானுல் இந்நெடுநாட்பாசத்துழலாயே உழலுகையால் நீயே அறிவுச்சொரூபியன்று உன்னறிவுக்கறிவாய் அறிவிப்பதோர்திருவருளுண்டென்ன. "எல்லாம்பொய்யென்றிங்கிருந்தேனுநானன்றே, நல்லாயெனையறிந்தே னன்றே-சொல்லாரி, நான்பிரமமன்றிநடுவேயுணர்த்துதற்கு, வான்பிரமம்வேறு

ண்டோவென்ன." இல்லையாயின் முன்னமேநீயே யறியவே
ண்டும் முன்னமொன்றுந்தோன்றவில்லையென்று இப்போது
நானேயறிவனென்கை யிரவிலொன்றுந்தோன்றாதவன் இர
விவந்திருளை நீக்கிக்காட்டச் சிதேயுமவ்விரவிச்சகாயந் தோ
ன்றாமல்தானே கண்டேனென்கைபோலும் முன்னம்பேரந்
தகாரமாயொன்றுந்தோன்றவில்லையென்ற நீ இப்போது அப்
பேரந்தகாரமாகிய விருணீங்கியறிவாய்நிற்கச் சிதேயும் அப்
பேரந்தகாரத்தைநீக்கி யுன்னையறிவாக்கிவைத்த திருவருட்ச
காயத்தை மறந்தாயென்ன சுவாமீ முன்னமறியாமைநின்ற
துமெய்யே யிப்போது அவ்வறியாமைநீங்கி அறிவுதயமா
னதுமெய்யே ஆகையால் திருவருளறிவித்தாலன்றியானேய
றிவ னென்றதுபொய்யேயென்ன இப்பொய்யைநீங்கி அம்
மெய்யாகியதிருவருளில் உன்போதத்தை ஒப்புவித்து நில்
லென்ன அஃதெங்ஙனஞ் சுவாமியென்று இரந்துகொண்
டேனை நோக்கி "உணர்விலுணர்வொன்றியொடுங்குமாறே
தென், றுணருமுணர்விலொடுங்கி - யுணர்வு, மருவிமருவிவ
ரிலுள்ளுணர்வை, விரவிவிரவிவிட்டுவிடு." என்றுகூறி மேலு
ம், "சீரார்கதிரொளியிற்சென்றொடுங்குங்கண்ணொளிதா, னே
ராமொழியூராயிறந்ததோ-பாரொன்ன, நின்றவொளியின் நிரு
பிக்கிற்கண்ணொளியே, நின்றெனவென்றென்றியங்கியே."
நீயும் அத்தன்மைத்தாய் உன்னுயிர்க்குயிராய் நின்றுவிளக்
காநின்ற திருவருளிலே உன்போதத்தை யொப்புவித்துச் சு
ட்டுணர்வகன்று ஆங்கத்திருவருளேயாய் நிற்பையாயில் தி
ருவருட்சூத்தாரகமாயுள்ள பேரானந்தசொரூபமாகிய பரம

சிவமேயாகுவை. அஃதெங்ஙனமென்னில், தொழிலுதயமெ
ல்லாந்துக்கமயமேயென்றால, தொழிலறுதியே சுகமயமெ
னபது நாம்சொல்லவேண்டுவதில்லையே வேதங்களுஞ் சங்
கந தெத்துவா சுகீ பவாவெஃறும் அகந்தெத்துவாசுகீபவா
வென்றுங் கூறியதூம் இக்கருத்தைப்பற்றியன்றோ ஆகையா
ல கருவிக்கூட்டங்களையும் அஞ்ஞானத்தையும் நீங்கி மேலா
கியதிருவருளிலே யுனபோதத்தையும் ஒப்புவித்துத் தொழி
லறுதியாய் நிற்கையால் அத்திருவருட்குத் தாரகமாயுள்ள
பேரானந்தசொரூபமேயாய் விளங்குகைக்கு ஓருணுவள
வேனும் ஐயமேயின்று இதனை. உன்னனுபவித்தும் நன்
றாய்த்தெளிந்து கொள்ளுதியென்றருளிச்செய்தானென்பது
உந் தோன்றுகின்றது இருளினுக்குவிளக்குப்போல் அன்
னைவிளையாநின்ற மாயையென்றதற்குதாரணம். சிவஞா
னபோதம். "மாயாதனுவிளக்காய்மறறுள்ளங்காணுதே, லா
யாதாமொன்றையதுவதுவாய்-வீயாது, வன்னித்தைத்தன்னு
ண் மறைத்தொன்றுங்காட்டம்போற், றன்னைமலமன்றனை
தலான." என்றும், சிவஞானசித்தியார். "பருதியையுமுகின்
மறைப்பப்பாதியாளிபதங்கிறைற்போ லுருவுயிர்மறைக்கின்
ஞானக்கிரியைகளொளிக்குமாகுங், கருதிடுமிச்சாஞானக்
காரியங்காயம்பெறாறால், மருவிடுமுயிர்க்குக்காயம்வந்திடா
விடின்மறைப்பே." என்றும், தணிகைப்புராணம் "விளக்கது
தானேதோற்றுதலில்லைவிழிவிளககாக்குமாறறியாத், துளக்
கிருளிரியவிளக்கினையொருவன் றோற்றுவித்தளித்தென வா
க்லக, யளக்கரும்பிரமனளித்தலும்விளக்கினலர்விழிப்பொரு

ளினுற்றுங்கு, களச்குறும்வினையிற்கதித்துடலீட்டிக்கறங்கெனச்சுழல்வனவுயிரோ." என்றும், திருவருட்பயன். "விடிவாமளவும்விளக்கனையமாயை, வடிவாதிகன்மத்துவந்து." எ-ம், வரும். மற்றும்வருவனவற்றுற்காண்க: "தத்துவக்கூட்டங்களைவிட்டுநீங்கியென்றதற்குதாரணம்: திருமந்திரம். "ஆறுநின றன்மையறியாதிருந்தேனுக், காறுநின்றன்மையறிவித்தான் பேர்நந்தி, யாறுநிற்றன்மையறிவாலறிந்தபின், னூறுறுக்கப்புறத்தாகிநின்றேனே." என்றும், திருப்புகழ். "சுட்டதுபோலாசை விட்டுலகாசாரத் துக்கமிலாஞானச் சுகமேவிச், சொற்கரணாதீத நிர்க்குணமூடாடு சுத்தநிராதார வெளிகாண, மொட்டலர்வாரீச சக்கரசடாதார முட்டவுமீதேறி யதுமீதாய், முப்பதுமாறாறு முப்பதும்வேறான முத்திரையாமோன மடைவேனோ." என்றும், உண்மைநெறிவிளக்கம். "மண்முதற்சிவமதீறாய் வடிவுகாண்பதுவேரூப, மண்முதற்சிவமதீறாய்மலஞ்சடமென்றல்காட்சி, மண்முதற்சிவமதீறாய்வடிவினிற்றானல்லாது, கண்ணுதலருளானீங்கல்சுத்தியாய்க்கருதுமன்றே." என்றும், அம்பலவாணையர்தசகாரியம். "தத்துவமனைத்துநோக்கித்தனித்தனிச்செயல்கள்காண்ட, லொத்ததன்னுருவமாகுமொன்றையொன்றுணராதீது, சத்தியஞ்சடமேயென்னத்தானறிந்திடுதல்காட்சி, நித்தியமன்றுசின்னுணீங்குதலென்றல்சுத்தி." எ-ம், வரும். மற்றும்வருவனவற்றுற்காண்க. நின்னைத்தோன்றமன்மறைத்துநின்றவாணவமலமென்னும்பேரந்தகாரமுநீங்கியென்றதற்குதாரணம். ஞானவாசிட்டம். "சுத்தமித்தையேயாதலினகங்காரந்தலைந்துபோமெஞ்

ஞானத், தத்துவந்தனைநினைதலாற்சித்திலேசாற்றகங்கரமெங்
ஙக, மெத்துநீரிலேபுழுதியுங்கனலிலேமேவுதோயமுமுண்
டோ, நித்தரூபத்தைநினைத்துவனொன்னுநிச்சயமறநிற்பாய்."
என்றும், சிவஞானதீபம். "எண்ணியமுற்பொசிப்பகலாமா
யாபோகத்திதமகிதமறுகையிறைற்றிரோதாயிநட்ட, நண்ணுமி
ருவினைதொலையொப்பாதலாலேநாடியமாயையுமைந்தொழி
லுநட்டம், பண்ணுமவனவளதுவாமுன்னிலைச்சுட்டொழியி
ற்பற்றுருங்கன்மமலநட்டமாகுந், திண்ணமிகும்வடிவகல
மாயைநட்டஞ்சிவபோகம்விளைநிடவிட்டகன் றிடுமாணவ
மே." என்றும், சிவப்பிரகாசம். "ஏகமாய்த்தங்காலவெல்
லைகளின்மீளுடை ன்னரியசத்தியதா யிருளொளிரவிருண்டு,
மோகமாய்ச்செம்பிலுறுகளிம்பேய்ந்துநித்த மூலமலமாயறி
வுமுழுதினையுமறைக்கும், பாகமாம்வகைநின்றுதிரோதாயி
சத்திபண்ணுதலான்மலமெனவும்பகர்வரதுபரிந்து, நாகமா
நதிமதியம்பொதிசடையானடிக்கணணுகும்வகைக்கருணையி
கநயக்குந்தானே." என்றும், ஆனந்தருத்திரேசரந்தாதி. என்
றூழும்வெண்மதியும்விலகியேகுமெழிற்காமகோட்டம் வா
ழ்காஞ்சிமூதூர், மன்றூடுகாப்புநடமாடுமுக்கண்வள்ளலுயு
ரானந்தருத்திரேசன், வென்றுடுமலவலியையறுத்தலோடுமே
லானேனதுசுத்தத்திருளாமென்றூன், றன்றாளிலிருந்துதொ
ழில்புரியப்புக்கென்றகுதியின்மைகாட்டினான் றணிந்துய்ந்
தேனே." என்றும், திருவருட்பயன். "ஒருபொருளுங்கா
ட்டாதிருளுருவங்காட்டு, மிருபொருளுங்காட்டாதிது." அ
ன்றியும், "புன்மொழிகளென்னுணரும்பான்மைதெரியாத

தன்மையிருளார்தந்தது." என்றும், சிற்றம்பலநாடியார். "ஆற்றவரிதாற்றவரிதந்தோகோவாணவநோய், வேற்றுவிகாரமிகக்கொடிது-மாற்றுதற்குத், தேசிகர்கோனென்றளவிற் சிற்றம்பலநாடி, மாசிதுவோவென்றுரைத்தாள்வந்த." அன்றியும், "செங்கமலத்தாள்வழங்குஞ்சிற்றம்பலநாடி, யங்கமலமறுத்தவாச்சரியம் - பைங்கிளியே, யாருயிரைக்காட்டியதிலாருயிரைக்காட்டி, யதிலாருயிரைக்காட்டியேயாங்கு" என்றும், கலசையந்தாதி. என்னையுந்தனையுங்காட்டாதென்றுளோ ரன்றுதொட்டுத், தன்னியமலவீரத்தின்றொடக்கறுத்தறிவுகாட்டிப், பன்னருகதுரியாதீதப்பராபரநிலையிற்சேர்த்தா, யன்னிலைபிறழாவண்ணமளித்தருள்கலசைவாழ்வே." எ-ம், வரும், மற்றும்வருவனவற்றுற்காண்க. உயிர்க்குயிராய்ப்பெரும்பிரகாசமும்பெருந்தட்பமுமாய்ப் பெருஞ்செல்வமும்பேரானந்தமுமாய்ச் சருவத்துக்குமேலாய்விளங்காநிற்குந்திருவருளென்றதற்குதாரணம்: வாரணசியையா."இரவிசதகோடிகளிருட்டென்னவிளவெயிலெறிக்கும் பிரசண்டபானு வெண்ணிலாமதிவட்டையென்னவெகுளிர்நிலாவெழுகின்றசந்திரோதய, மரிபிரமரிந்திராதி செல்வநல்குரவெனு மளவிலாப் பெரியசெல்வ மண்டகோடிகளையணுவென்றகுலமேருகிரியமுதைவேம்பென்றவமுதம், பெரியபிரமப்பிரளயஞ்சிறியதுளியென்றுபேசுங்கிருபாம்புராசி பிரவஞ்சமதனிலுளதெய்வமெல்லாமும்பிறந்தலையுமேனநகைத்தே,யுருவினுளறுதியே முத்தசித்தரூபியாயுறைகின்றபரதெய்வமேயான்றுகியானந்தவுருவாகியென்னுயிர்க்குயிரானபரமசிவமே." என்றும், சி

வாசகாரீத் தரிசனம். "எல்லாநாளுள்ளசாகத்சாலனெல்லாத்
துள்ளுமாகிச, சொல்லாதபொருளும்ஙிதொல்லையாயெல
லையின்றி, யல்லாதோர்வடிவொன்றன்றியானந்தவடிவேயா
கிக், கல்லாதகாட்சியாகிக்கலந்ததானினறசன்றே." எனவும்,
திருவருட்பயன். "அருளிற்பெரியதகிலத்தில்வேண்டும், பொ
ருளிற்றலையிலதுபோல." அன்றியும், "பெருக்கநுகர்வில்லைபொ
ருளாயொ..., மருக்கனெனநிற்குமருள்." எனவும், தத்துவ
ராயர். "வானிலேபறக்கமணன்லேநுழையவானஙாவணங்
சமறவொருவ, ருணிலேபுகுதவரவாதங்களனைந்தனிலினோது
அழுவைக்கப, போனதோருயிரைய ருப்பவெண்பித்தபுகன
றதெல்லாங்கைபில்வரினு, ஞானமேயிரலையாயினனனவனா
சுயினுஙகடையெனாடே." என்றும், மோகவதைப்பரணி.
"யாதுமாயறிவிறந்தவிருளொன்றுமிலதே, யாதுமாயறிவிற
ந்தவெளியானதுமுளதே." அன்றியும். "தெரியாதென்ப
தாந்தெரிந்தவிடத்தல்லாற றெரியாததுரியாதீதமயிதுகாணை சு
ம்மேலொசும்முலக்காய்." என்றும், திருவாசகம் "பொய்யாயி
னவெல்லாம்போயகலவந்தருளி, மெய்ஞ்ஞானமாகிமிளிர்கின்
றமெய்ச்சுடரே." எ-ம், வரும். மற்றும்வருவனவற்றுற்காண்க.
ஞானசரீயத்திற்சுட்டறவுன்போதமானதனுவளவுந்தோன்று
மறகைரந்துநிலலென்றதற்குதாரணம்: ஞானசாகரவெண்பா.
இந்திரியக்கள்வரிருட்காலம்பேருறக்கம் வநதிடுமோவென்
றுவழியார்ப்பா-முந்தி, யமையாமனுளுமகல்ஞானக்கண்ணி
லிமையாமனோக்கியிரு." அன்றியும், "ஏரியுநீரிலிருநாரைக்
கஞ்சிநடு, வாரியுறுமீன்பொலவல்வினைகள்-சாராயல், மன்னு

ருவமெஞ்ஞானவாரிநடுவேபுதைந்து, நின்றுருவந்தோன்றும
னில்." அன்றியும், "குறைவினிறைபுனலிற்கூடுங்கடாம், நிறை
யநிறையநிறைய-மறையபபோ. மன்னிலைமைநல்லோரகம்பு
றமென்றுமலருண், மன்னியதனுள்ளொடுங்குமாறு." என்று
ம், சிவானந்தமாலை, "சுட்டற்றகாட்சியினலனறிச்சொருபத்
தைக்கிட்டக்கிடையாதுகேட்டியேல்-வெட்டனவே, விண்ணி
ற்கதிரவன்பால்வேறற்றகாட்சியல்லாற், கண்ணிற்குமுண்
டோகருததது." அன்றியும், "ஆருறுக்கபாலாமாணந்தமாககட
ரு, ஒருறுநீந்தியணைந்தாலும்-வேறாகி, யான்முழுகில்வறறி
யிடும்யாதொன்றுஞ்செய்யாக்கா, ரூன்முழுதுமேலிடுமேதா
ன்" அன்றியும், "நின்செயலற்றெப்போதுநம்மு-ளாய்நிற்குநி
லை, யுன்செயலற்றோதியிடவுற்றுக்கே-ளெஞ்சுயடங், கொன
றுமறவொன்றுசியொத்துடனொன்பெத்தத்தி, னின்றதுபோன்
முத்தியினுநில்." அன்றியும், "மித்தையுடற்கட்டறத்துமெய்ய
றிவாய்மெய்யொழிக்குந், தத்துவமுங்கேவலமுஞ்சார்வகற்றி
ச்-சுத்தத், தனியாகித்தானும்போய்த்தற்பரமாய்விட்டாற, செ
னியாணிதுசத்தியம்." என்றும், ஒழிவிலொடுக்கம். "அறிவா
யிரீர்மயக்கமாகாதசையில், விறிசாய்விடாதேகவிகற்பம்-பிறி
யாத், த்ராசுநுனிபோற்சமாதிவரின்ஞான, விராசனுமக்கொ
ப்பாரொவர்.'' என்றும், பட்டணத்துபபிள்ளைநாயனா. "வாச
ற்படிகடந்துவாராதபிச்சைக்கிங், காசைப்படுவதில்லையண்ண
லே!யாசைதனைப். பட்டிறந்தகாலமெல்லாம்போதுமபரமே
ட்டி, சட்டிறந்தஞானத்தைச்சொல்." என்றும், திருவம்மானை.
"தத்துவமோனதுவித்தைகாணம்மானை, தானந்தமானதேயா

லந்தமம்மானை." என்றும், அஞ்ஞவதைப்பரணி. "ஒழித்தேயுள்ளமுணர்வடையவொழியாவொருவன்வருமளவும், விழித்தேயுறங்கும்விளங்கிழையீர்,மேவுங்கபாடந்திறமினோ." என்றும், பஞ்சாக்கரப்பஃறொடை. "பொன்னுடரிந்திரனும்பூமகனுமாதவனு, மென்னுடுமெந்நாளுமேநாடித்-துன்னுத. வேதமுடிவின்விளங்குமொளியுயிரின், போதமுடிவிற்பொருந்துமொளி." என்றும், இளசையந்தாதி. "என்னைமுழுக்கவிழந்தவிடத்தே, தன்னைவிளக்கியசாலிளசைக்கோன், மன்னமுதத்தினைவானவருண்ண, வுன்னுவிடத்தினையுண்டமையென்னே". அன்றியும், "என்னையெரித்துவிழுங்கியெனக்கே, தன்னையளித்தருடத்துவநாதன், மின்னிளசைப்பதிமேவியிடத்தே, கன்னியைவைத்ததணக்கிதுவென்னே.' என்றும், பஞ்சாக்கரந்தாதி. உளநின்றுசாணிலொளிப்பனங்கேயென்னுளமொளிக்கில், வெளிநின்றுகாணப்படுவன்விரிகடற்றெள்ளமுதந், தெளிநின்றதேறலுங்கைப்பவென்சிந்தையெல்லாமினிப்பன், பளகறுத்தாண்டபஞ்சாக்கரநாதபசுபதியே." என்றும்,சிவக்கியானசுவாமிகள். "நாதக்குழல்சரியாநானெனுஞ்சாந்தங்கரையப், போதக்கலைவிழப்புந்திவலைதெறிப்பப், பேதப்படாதிருகப்பெற்றணையவாசைகொண்டேன், சிதப்புனற்சென்னைசென்னமல்லியீச்சுரனே." என்றும்,திருவாய்மொழி. வாரிக்கொண்டுன்னைவிழுங்குவன்காணிலென், றார்வுற்றவென்னையொழியவென்னின்முன்னம், பாரித்துத்தானென்னைமுற்றும்பருகினான்,காரொக்குங்கார்க்கரையப்பன்கடியனே." என்றும், ஞானசூரியன். "சாக்கிரசொற்பனத்[illegible]ணடிப்போ

னுற், சூக்கமாஞ் சுழுத்தியந்துதொன்னிருளாகிநிற், யாக்கமு
மழிவுமில்லாவறிவினுருவதாகும்போனாற், போக்கொடுவரவுமி
ல்லாப்பூரணப்பொருளவதெய்தும்." என்றும், அவிரோதவு
ந்தியார். "எம்மதத்தோரெவ்வகைநிட்டைசொலினுஞ்சமம
தமேயெமக்குநதீபரக், தற்போதமாய்க்குமேலுநதீபர." எ
ன்றும்; திருப்புகழ், "அருவுபுணைதருபுனிதருமவழிபட மழ
லைமொழிகொடுதெளிதரவொளிதிக ழறிவையறிவதுபொரு
ளெனவருளியபெருமானே." என்றும், கூர்மபுராணம். "ஏனை
யுமுப்பொருளின்றன்மையியம்பிருமலங்களைவலா, முன்
னிணக்கயவொன்றோர்வித்தொழித்தறிவுருவமாக்கி, நின்றநிற்
பாவொன்றுன்மநிலையினையுணர்த்தியீசே, வன்றுணையாகிநின்ற
மல்குதன்னருளைக்காட்டி" அன்றியும், "சென்றுபுல்குறுவத
ன்றிச்சேர்ந்துநிற்பதுவுமன்றி யொன்றிரண்டென்பதன்றியு
ணர்வுசுட்டொழிந்தநீயா, யென்றுநின்றிடுமென்றன்னையி
ருந்தவாகாண்டியென்று, தன்றுதன்னிலைசொல்லாதசொல்
லினா லுணர்த்திக்காட்டி." என்றும், தணிகைப்புராணம்.
"இருண்மலப்பந்தநீங்கியிருமையுங்கான்றசோற்றி, னருவ
ருத்தகலத்தள்ளியருளொடுமளவளாவிப், பருதியிற்கலந்துநி
றகும்பரவொளிவிழியேபோலத், தெருளுறக்கலந்துநிற்குஞ்
செல்வர்தம்மடமுமுண்டால்." என்றும், காஞ்சிப்புராணம்.
"உணர்பொருளுமுணர்வானு முணர்வுமெனும்பகுப்பொழி
யாதொழிந்துபானுப், புணர்விழியுநீர்நிழலுந்தீயிரும்பும்புன
லுரும்பருதிமீனுந், துணையவிரண்டறுகலப்பினெம்முடனா
ய்ப் பேரின்பந்துய்த்துவாழ்வா, ரினைக்கிலாத்தமலக்கோதா

யவர்வடிவே யெமக்கெளியகோயிலாமால்." என்றும், சிவஞா
னதீபம். "பொறிபுலன்கரணங்கலென்மறைந்தகருவெல்லாம்லென்
புகலரியகலாதிகளுநானல்லேன்பொலிவா, ரறிகருவிநானல்லேன்
னிவைசடமென்றிவற்றை யறிந்ததில்வேறாய்நின்றவறிவு
யிரொன்றறிக, நெறிகருதத் தவஞ்சடமாராமலவென்றவற்
றைநீயறிந்து நீங்குதற்குநின்னுயிருக்குயிராய்ப், பிரிவறநி
ன்றுணர்த்தியிடுமொளியருளாமுலகிற் பிறவருளிற்கொளி
யதுவுமிருங்கதிரோப்பெனவே." என்றும், கச்சியப்பசுவா
மிகள். "வன்பளிக்குங்கொடும்பாசத்தொறைநீக்கியொளிர்பருத்
தமாறுநின்றங், கின்பளிக்குமுதலொன்றென்றருமருளுயி
ர்க்கருளினியல்புகாட்டித், தன்பளிகருமமாயபோகத்தொ
டர்நீக்கித்தனைதடிக்கிழந்த துன்னலைவந்திட், டன்பளிக்குமா
னததருத்தி சேர்ச்சியுளாத்தமுத்திவாழ்வாம்." என்றும், சிவ
ஞானசித்தியார். "அறியாமையறிவகற்றியறிவினுள்ளே யறி
வுதனையருளினாலறியாதேயறிந்து, குறியாதே குறித்தந்தக்
கரணங்களோடுங் கூடாதேவாடாதேகுழைந்திருப்பையா
யிற், பிறியாதசிவன்றானேபிறிந்துதோன்றிப் பிரபஞ்சபேத
மெலாந்தானாய்த்தோன்றி, நெறியாலேயிவையெல்லாமம
லவாகி நின்றென்றுந்தோன்றிடுவனிராதாரனாயே." என்று
ம், வீராகமம் "சமயவாதங்களணைக்கலிக்கந்துவமிந்தை, யாக்கி,
நமையருவிருளோட்டிநானெனுமையநீக்கி, தமாதாயெ
ன்னுண்மன்னுறான்னருட்சோதிகாட்டி, யமைவிலாவினைப
வெள்ளத்துமுத்தினனென்னையாசான்." என்றும், கிட்டை
ளக்கம். "மாயகம்போலையுமாயாமலமெனும்மாதனையும்,

வீயவிட்டோட்டிவெளியேபுறப்பட்டுமெய்யருளாற், தாயுடன்சென்றுதன்றனைக்கூடிப்பின்றனைமறந், தேயுமதேநிட்டையென்றானெழிற்கச்சியேகம்பனே." என்றும், சிவப்பிரகாசம். "பொறிபுறுகருவியாவும்புணராமேயறிவிலாமைச், சொற்பெறுமதீதம்வந்துதோன்றாமேதோன்றிநின்ற, சிற்பரமதனுளுள்ளச்செயலறுத்திடவுதிக்குந், தற்பரமாகிநிற்றல்சாக்கிராதீதந்தானே." எ-ம், வரும். மற்றும்வருவனவற்றுற்காண்க. பேரானந்தசொரூபமாகியபரமசிவமென்றதற்குதாரணம்: சிவபோகசாரம். "என்னையறிவென்றனையறிவிலானந்தந், தன்னைச்சிவமென்றன்சந்ததமு - மென்னையுன்னைப், பாராமறைத்ததுவேபாசமென்றுமிம்மூன்று, மாராய்ந்தவர்முத்தராம்." அன்றியும், "நானங்காய் நீயிங்காய் நாட்டமறவைத்தற்பின், நானெங்கேநீயெங்கேநாதனே, வானெங்கு, மோனமாகிநின்றவுணர்வுநீயுன்னறிவி, னன்றாகத்தோன்றுசுகமாம்." எனறும், ஆனந்தருத்திரேசர்வண்டுவிடுதூது. "மறைக்கேர்வணத்தான்மறைச்சிலம்பான்மாவான், மறைக்கோவறிவரியமாண்பா-னெறிக்கொள், ளுயிருக்குயிரானுயிரறிவுக்கெட்டான், பயிலுயிர்க்கேயின்பருளும்பண்பான் பயிலுநர்க்குக் கண்ணுமானந்தங்கனிவாயுமானந்தம் வண்ணவதனமுமானந்தந் தண்ணறல்சேர் வேணியுமானந்தம்வியன்மார்புமானந்தம்பூணுமானந்தம்புயங்கரந்தா ளுணுடையு மானந்தமானந்தமானந்தமானந்தமானந்த மெய்வுறுப்புமானந்த[illegible]னந்தன காஞ்சியுமானந்தமாய்க் காணநிற்பானத்தகையின்வாஞ்சையுறுமானந்தவள்ளறன்." என்றும், திருவிசைப்

பா. "ஒளிவளர்விளக்கேயுலப்பிலாவொன்றேயுணர்வுசூழ்க டந்ததோருணர்வே, தெளிவளர்பளிங்கின்றிரண் மணிக்குன் றேசித்தத்துட்டித்திக்குந்தேனே, யளிவளருள்ளத்தானந்தக் கனியேயம்பரமாடரங்காக, வெளிவளர்தெய்வக்கூத்துகந்தா யைத்தொண்டனேன்விளம்புமாவிளம்பே." எனறும், துக ளறுபோதம். "அண்ணலுமானந்தமருளுமானந்தமுயி ரெண் ணிலாவானந்தமெவ்வுலகும் - பண்ணி யளித்தழிப்பராதி யமரருமானந்தங்களித்ததுவேயெங்குமெனக்காண்." என் றும், ஒழிவிலொடுக்கம். "வேதாந்தம்போலிருக்கும்வேதா ந்தசித்தாந்தம், நாதாந்தபோதம்நழுவினர்க்குச்சேர்தி, தனை க்கழனறுதற்போதச்சார்புழியுஞ்சந்தி, லுனக்கறிவானந்த முதிக்கும்." என்றும், சிற்றம்பலநாடியார். "ஆனந்தமே செவியம்புயத்தாளிணையங்கைகளு, மானந்தமேதிருக்கண் ணுஞ்செவ்வாயருண்மேனியெல்லா, மானந்தமேதிருச்சிற் றம்பலவரருட்பொருளு, மானந்தமேயவன்றில்லையுங்காழி யுமானந்தமே." என்றும், கச்சியப்பசுவாமிகள். "பொருள் கொழிக்குநெடுங்கடல்சூழ்பெரும்புவியிலெஞ்ஞான்றும் பூத் துமாய்ந்து, மருள்கொழிக்குங்கடுந்துயரக்கடலமுந்துஞ்சி றியேனையில்லைவாவென், றிருள்கொழிக்குமலநீக்கிப்பேரின் பப்பெருவீட்டிலிசையவைத்திட், டருள்கொழிக்குமானந் தருத்திரோசனையுள்ளத்தமுதிவாழ்வாம்." எனறும், ஆனந் தருத்திரோசரந்தாதி. "உய்ந்தாமென்றமராதொழுதாடனோ க்கமுறுத்தவர்கள்வேட்டவரமுதவுநாதன், பந்தாடும்பூண்முலை யாள்பாகத்தண்ணலை பணியினர்சூழானந்தருத்திரேசன், பிச்

தாதவிருண்மலமும்யானும்பிறதப் பெயர்த்துமலமறுத்தாங்கு த்திருக்கினேனை, முந்தைதவகைதெரித்துத்தான்முன்றாகிமு டியாதவின்பவெள்ளத்தழுத்தினானே." என்றும், அவிரோத வுந்தியார். "சொன்னவின்றுருவுபாயங்கொடுதொடர்ந்தன் னமெய்ந்திட்டடைசேர்ந்துந்திபற, வானந்தம்பெற்றிடென்றுந் திபற." என்றும், திருவாசகம். "தினைத்தனையுள்ளதோர் பூவினிற்றேனுண்ணாதே, நினைத்தொறுங்காண்டொறும்பேசு ந்தோறுமெப்போது, மனைத்தெலும்புண்ணெகவானந்தத்தே ன்சொரியுங், குனிப்புடையானுக்கேசென்றூதாய்கோத்தும் பீ." அன்றியும், "கடலினுணாய்நக்கியாங்குன்கருணைக்கடலி னுள்ளம், விடலரியேனைவிடுதிகண்டாய்விடலில்லடியாரு— லிலேமன்னுமுத்தரகோசமங்கைக்கரசே, மடலின்மட்டே மணியேயமுதேயென்மதுவெள்ளமே." என்றும், சிவஞா னசித்தியார். "இரும்பைக்காந்தம்வலித்தாற்போலியைந்து ருயிரையெரியிரும்பைச்செய்வதுபோலியனைத்தானாக்கி, ய ரும்பிக்கிந்தனந்தையனலழிப்பதுபோன்மலத்தையறுத்தமல னப்பணைந்தவுப்பேபோலணைந்து, விரும்பிப்பொன்னிளைக்கு ளிகையொளிப்பதுபோலடக்கியொளித்துத்தானெல்லாம்வே திப்பானாக்கிக், கரும்பைத்தேனைப்பாலைக்கனியமுதைக்கண் டைக்கட்டியையொத்திருப்பனைந்தமுத்தியினிற்கலந்தே." எ ன்றும், போரூர்முறை. "மன்னராவாருறுசுகமும் வானோர்ம கிழ்ந்தபெறுசுகமு மணிப்பைநாகத்தவர்சுகமு மற்றையோ ர்களடைசுகமும், பன்னுமிடத்திற்சிவத்தெழுந்தபரமானந் தலேசமெனப் பகர்ந்தாய்த்திருவாயெழுந்தருளிப் படிறேன்

மறந்திங்குழல்கின்றேன், கன்னலெழுந்ததெளிசாறே கட்டுமாவின்றீங்கனியே கதலிககனியேநறபலவின் கனகச்சுளையேகதிமுளையே, பொன்னம்பொருப்பேயென்விருப்பே போதச்சுகமேகிஞ்சுகமே பிரணவொளியேயுள்ளொளியே போரூர்முருகப்பெருமானே." என்றும், திருவருட்பயன் "இன்புறுவார் துன்பாரிருளினெழுஞ்சுடரின், பின்புகுவார்முன் புகுவாரின்." அன்றியும், "இன்பதனையெய்தவார்க்கியுமவர்க்குருவ, மின்பகனமாதலினுல்." அன்றியும், "இன்புருவமன்றியெழிலுருவம்வேறுளவோ, வின்பருவமேயிறைக்குமெண." என்றும், பட்டினத்துப்பிள்ளைநாயனார் "அட்டாங்கயோகமுமாதாரமாறுமவத்தையைந்தும், விட்டேறிப்போனவெளிதனிலேவியனொன்றுகண்டேன், மட்டாங்யானந்தத்தேனூறலுண்டுமதிமயங்கி, யெட்டாதபேரின்பமெனவிழுங்கியிருக்கின்றதே. எ-ம், வரும். மற்றும்வருவனவற்றுறகாண்க. (கஅ)

கயிற்றினிலரவுங்கட்டைக்கள்வனும்போலமாயா, மயக்கறன்முத்தியென்னும்வைதிகமுடிவுமான்மா, முயற்சிபோய்சசுகாதீதத்துண்மொழிதமோமயம்போற், போத, மயர்த்தன்முத்தியதென்றேதாகமமுடிவுமதேயென்றும்.

இ-ள்.—உள்ளகயிற்றினிடத்து இல்லாத பாம்புகற்பிதமாய்த்தோற்றுதல்போலும் உள்ளகட்டையினிடத்து இல்லா

த கள்வன்கற்பிதமாய்த்தோற்றுதல்போலும் உள்ளபிரமத்தினிடத்து இல்லாதமானபகற்பிதமாய்த் தோன்றுதென்றறிந்து இம்மாயாமயக்கஞ்சிறிதுந்தோன்றாது இறந்தமாத்திரத்தில் வீடென்றுகூறும் வேதாந்தத்துணிபினதுஅனுபவமும் ஆன்மாவாயது முயற்சியிறந்து ஆனந்தாதீதத்தினுள்விளம்பாநின்ற பெத்தத்திசையில் ஆணவராகி யிருப்பானைப்போலும் அஞ்ஞானத்தாலெழுந்தற்போதஞ் சிறிதுந்தோன்றாது இறந்துநிற்றலே வீடென்றுகூறுமாகமமுடிவினது அனுபவமுமாகிய இவ்விரண்டனுபவமும் அந்தநிலையனுபவமேயாம் ஆங்குமாயையாலெழுங் கருவிப்போதமும் ஆணவத்தாலெழுந்தற்போதமும் இன்றிநிற்கையால் இதனைநீநன்றாய்நிச்சயித்துப் புத்திபண்ணிக்கொள்வாயாகவெனறுகூறி மேலுமருளிச்செய்வான்.—எ-று.

அவித்தியாகதமாயிருந்த சீவனானது புன்மையறிவாயிருந்தும் நானென்று எதிரிடுமாயாபோதஞ்சிறிதுந்தோன்றாது ஒழியவே அப்புல்லறிவொழிந்து சீவசாட்சியாயிருந்தபிரமமே தானாகலான் வைதிகமுடிவும் அந்தநிலையனுபவமேயாமென்றும் ஆணவமயமாயிருந்த வான்மாவானது புன்மையறிவாயிருந்தும் நானென்றெதிரிடும் அஞ்ஞானபோதஞ் சிறிதுந்தோன்றாது ஒழியவே அப்புல்லறிவொழிந்து ஆணவமயமாயிருந்ததுபோலத் தனக்குமுதலாகிய சிவமயமேயாம் ஆதலால்ஆகமமுடிவும் அந்தநிலையனுபவமேயாமென்றுகூறினார். கயிற்றினிலரவுங்கட்டைக் கள்வனும்போலமாயா மயக்கறன்முத்தியென்றதற்குதாரணம்: சிவாகமார்த்ததரிசனம். "சட்டெ

ணத்தெளிந்தான்சர்ப்பிரச்சுவிற்காணாதாற்போற், கட்டினபா சம்விட்டாற் கண்டிலன்பெத்தம்பின்பு, சிட்டநற்சுபாவமே யாஞ்சீவன்முத்தன்றேசத்தை, விட்டபின் பரமமுத்தன்வி யோமம்போற்கடநாசத்தில்." என்றும், சித்தாந்தசிகாமணி: "கயிற்றரவிப்பிவெள்ளிகுற்றியிற் கள்வன்மிக்க, வெயிற்படு கானற்றெண்ணீர்விண்ணிற்கந்தருவவூர்போல், இறப்புறநித்த சச்சிதானந்தசிவத்தின்கண்ணே,செய்ப்பீடுபொருளாய்த்தோ ன்றுஞ்செப்பியவுலகமன்றே." என்றும், விருத்தாம்பிகை துதி. "பழுதையென்றுணரினதின்முனர்த்தோன்றும்பாம்பும ப்பழுதையானதுபோல், முழுதுணரறிவாந்தன்னையேகாணி ன்முனுறுசராசரமெவையு, மெழுதருமறிவாய்விளங்குமெ ன்றிசைத்தென்னெழுபவந் துடைத்தெனையளித்தாள், கெழு மணிமுத்தாநதிசெறிவிருத்தகிரியமர்பெரியநாயகியே." என் றும், காசிகண்டம். "கானலிடத்தெண்ணீருங்கயிற்றினில் வாளரவுமலைகடலிற்பட்ட, கூனமுது கிப்பியிற்றோன்றும் வெள்ளியுமம்முதலுண்மைகுறுகிற்றீரு, மானவைபோனினை யுணரிற்றோன்றுசெகமனைத்துநில்லாதகலுமாற்றாற், றேனல ர்பூங்கடுக்கையணிசெல்வநினதறைகழற்றாள் சென்னிசேர்ப் பாம்." என்றும், போரூர்முறை "பாம்பாகத்தோன்றிற்பழு தைசற்றுந்தோன்றாவாம், பாம்பின்றாந்தோன்றிற்பழுதையே மேம்பாடாய்ப். பொய்தோன்றின்மெய்தோன்றாப்போரூரா நின்னருளான், மெய்தோன்றிற்பொய்தோன்றாவீடு." எ-ம், வரும். மற்றும்வருவனவற்றாற்காண்க. ஆன்மாமுயற்சிபோ ய்ச்சுகாதீதத்துண்மொழிதமோமயம்போற்போதம்யர்த்தன்

முத்தியென்றசற்குதாரணம்: பருணதகட்டியம் பலவாணர். "பெத்தனுக்குமுத்தனுக்கும்பேதமுண்டோவம்பலவா, பெத்த னுக்குமுத்தனுக்கும்பேதமில்லை-பெத்த, னவத்தைவிட்டுநீங்கான துபோலஞானி, சிவத்தைவிட்டுநீங்கான்றினம்." என்றும், சிற் றம்பலநாடியார். "முத்தியும்பெத்தமுமொன்றுகக்காட்டிமுழு துநிறை, சத்தியுங்காட்டிச்சதாசிவங்காட்டிச்சதுவிரண்டு, சி த்தியுங்காட்டுஞ்சிற்றம்பலநாடிசிராபுரத்தோன், பத்தியுஞான முமில்லாதவென்னைப்பரித்தெடுத்தே." என்றும், திருமந்திர ம். "அறியாமையென்றுமறியாதவெம்பிறை, யறியாமையே யறிவாயிருந்தேனை, யறியாமைநீக்கியறிவாக்கிவிட்டபின், ன றியாமைபோலேயமர்ந்திருந்தேனே." என்றும், எதிர்காலத் திரங்கல். "ஆணவமதோடத்துவிதமானபடிமெய்ஞ்ஞானத்,தா ணுவினோடத்துவிதஞ்சாருநாளெந்நாளோ." என்றும், அவி ரோதவுந்தியார். "ஒன்றியகேவலமென்றேயுனத்தருந், தன் திருவொன்றிலனுந்தீபற, சுத்தமதாயதென்றுந்தீபற." என் றும், சிவப்பிரகாசம். "ஒன்றிரண்டாகியொன்றியொன்றுமை யாமிருமையாயிரண்டின்றியொன்றாகியுமொன்றதெனிலொ ன்றாகாதியி, ரெண்டிரும்புறழின்ன்றுமுயிரினைத்தொழிலும் வேண்டு மொன்றினைணருமுணமைக்குவமையாணவத தோடொன்றே." எ-ம,வருமு. மறறும்வருவனவற்றுற்காண்க.

இளையறுநீர்போற்சிந்தை தெளிதன்மும்மலங்க ணீங்கல், களைவுறத்தேய்ந்துதேய்ந்தொன்றுதன்முப் பாழ்கடத்தல், புளையறுசாக்கிராதீதந்திரிபிடியும்போ

க்கல், வரைவுறுமுத்தியென்ன வழங்கிடங்களுமதென்றும்.

இ-ள்.—ஞானநூல்களில ஆன்மாவானது அலையற்றசாசரம்போலச் சித்தம் அசைவறத்தெளிந்து நின்றவிடமேமோட்சமென்பதும் போதத்துக்கு மறைப்பைச்செய்யும் ஆணவமும் மயக்கத்தைச்செய்யுமாயையுஞ் சலனவிகாரங்களைச் செய்யுங்கன்மமும் என்னுந்திரிமலங்களும் நீங்கிநின்றவிடமே மோட்சமென்பதும் உள்ளத்தெழுகின்ற ஞாயிற்போன்ற பேரொளியைநினைப்பறநினைந்து அஃதன்றிவேறொன்றுமின்றி நிறைந்தவனுபவத்தினிடத்தழுந்த வழுந்திப்பரமாணுவாய்க்கரைவுறத்தேய்ந்துதேய்ந்து அத்துவிதமாய்ப் பேரொளியேயாய் நின்றவிடமே மோட்சமென்பதும் மலையமாறியவிடத்துச் சிவனுமென்றுஞ் சீவன்மாறியவிடத்து பரமமென றும் பரமாறியவிடத்துச் சிவமாமெனறுஞ் சிவமாறியவிடத்துச் சுயம்பிரகாசமாய் விளங்குமென்றும் இங்ஙனங்கூறுகின்ற சீவப்பாழ் பரப்பாழ் சிவப்பாழென்னு மூன்றுபாழையுங் கடந்துநின்றவிடமே மோட்சமெனபதும் குற்றங்களீங்கிய சாக்கிரத்துக்கதீதப்பட்டு நின்றவிடமே மோட்சமென்பதும் காண்பானாகியஞாதருவுங் காட்டுவதாகிய ஞானமுங் காண்பதாகியஞேயமும் என்னுந் திரிபிடியுநீங்கிநின்ற விடமே மோட்சமென்பதும் ஆக இங்ஙனம் அறுவிதமாய்க்கண்டித்துக்கூறிய மோட்சநிலைகளும் அந்தநிலையனுபவமேயாம். ஆங்குச்சித்தக்கலக்கமின்றிச் சுபாவத்தெளிவேயாய் நிற்கையானு

மறைப்புமயக்கவிகாரங்களின்மையானும் போதமானது அணுவளவுந்தோன்றாமற் பரைக்குநிற்கையானுஞ் சிவன் பருஞ் சிவமென்னுங்கெற்சிதமகன்று நிற்கையானுஞ் சாக்கிரங்கடந்து அதீத நிற்கையானும் உணர்வானும் உணர்வும் உணர்பொருளுமின்றி நிற்கையானும் இவ்வடையாளங்களை அந்நிலைக்குள்தோன்றநீ நன்றாய்நிச்சயித்துப் புத்திபண்ணிக்கொள்வாயாகவென்றுகூறி மேலுமருளிச்செய்வான்.—எ-று.

அலையற்றசாகரம்போலச்சித்தமசைவறத்தெளிந்து நின்றவிடமே மோட்சமென்றதற்குதாரணம்: திருமந்திரம். "உரையற்றவொன்றையுரைசெய்யுமூமர்காள், கரையற்றதொன்றைக்கரைகாணலாகுமோ, திரையற்றநீர்போலச்சிந்தைதெளிந்தார், புரையற்றிருந்தான்புரிசடையோனே." என்றும், வயிராகசதகம். "கண்டவைம்புலக்காட்சிபோய்க்காட்சியாற்கலந்தவாதனையாவும், விண்டுமூடமற்றலையிலாக்கடலெனவிளங்கினையெனிநெஞ்சே, யுண்டுகொன்னமக்கொருதுயராங்குவீடுளங்கையிற்கனியேயாம், பண்டைமேவியபயமெலாமறுங்குருபதத்தினும்புகலாமே." என்றும், திருவாசகம். "வைத்தநிதிபெண்டீர்மக்கள்குலங்கல்வியெனும், பித்தவுலகிற்பிறப்போடிறப்பென்னுஞ், சித்தவிகாரக்கலக்கந்தெளிவித்த, வித்தகத்தேவர்க்கேசென்றூதாய்கோதும்பீ." என்றும், தேவாரம். "சித்தந்தெளிவீர்காளத்தனாரூரைப், பத்திமலர்தூவ, முத்தியாகுமே." எ-ம், வரும். மற்றும்வருவனவற்றுற்காண்க.

போதத்துக்கு மறைப்புமயக்கவிகாரங்களைச் செய்யுந்திரிமலங்களு நீங்கிநின்றவிடமே மோட்சமென்றதற்குதாரணம்: சி

வபோகசாரம். "எங்குமிருக்குமறிவுநீயேகமா, யங்கங்குணர்த்துமறிவுநாம்-பொஙகு, மலமறைத்தல்மாயைமயக்கல்விகாரப, பலமனைத்துங்கன்மமலம்பார்." என்றும், சிவாகமார்த்ததரிசனம். "மூடிமுன்னிருந்ததீபம்மூடினகும்பம்போனா, வீடுமுன்னேளியாயெங்குநிகழ்ந்ததாங்காத்துமாவு, மூடிமுன்மறைந்திருந்தமும்மலம்விட்டபோது, வீடுதன்சொரூபமாகிநிகழ்ந்துதான்விளங்குமன்றே." என்றும், தணிகைப்புராணம். "இரண்டறப்பண்டேகலந்திடுமனாதிமுத்தனாலிருண்மலமாயை, திரண்டவன்கரும மறுத்தவன்றனையுந்தரிசித்துத்தன்னையுங்கண்டு, முரண்டகுமுலகிறாயின்றால்குறங்குமூமூர்த்தவப்பொருள்வயின்வீழ்த்தோ, னரண்டகவாண்டவமலனேநேயமாகியவருஞ்சிவயோகி, என்றும், திருமந்திரம். "கருடனாருவங்கருதுமளவிற், பருவிடந்தீர்ந்துபயங்கெடுமாபோற், 'குருவினுருவங்குறித்தவப்போதே, திரிமலந்தீர்ந்துசிவனவனாமே." அன்றியும். "செத்தார்பெறும்பயனாவதேதெனிற், செத்துநீர்சேர்வதுசித்தினைக்கூட்டிடல், செத்தாரிருந்தார்செகத்திற்றிரிமலஞ், செத்தார்சிவமாய்சித்தாந்தர்தாமே. என்றும், சிவப்பிரகாசம். "ஆரிவையரின்புறமுத்திகர்தமைந்துமறுமுத்திதிரிகுணமுமடங்குமுத்தி, விரிவுவினைகெடுமுத்திமலம்போமுத்தி, விக்கிரகநித்தமுத்திவிவேகமுத்தி, பரவுமுயிர்கெடுமுத்திசித்திமுத்தி, பாடாணமுத்தியிவைபழிசேர்முத்தி, திரிமலமுமகலவுயிரருள்சேர்முத்தி, திகழ்முத்தியீதுமுத்தித்திறத்ததாமே, எ-ம், வரும். மற்றும்வருவனவற்றாற்காண்க. உள்ளத்தெழுகின்ற ஞாயிறுபோன்றபேரொளியினிடத்

தக் கனாவுறத்தேய்ந்து தேய்ந்தொன்றாதலே மோட்சமென்றதற்குதாரணம்: திருவாசகம், "இன்றெனக்கருளியிருளகடிந்துள்ளத்தெழுகின்றஞாயிறேபோன்று, நின்றநின்றன்மைநினைப்பறநினைந்தேனீயலாற்பிறிதுமற்றின்மை, சென்றுசென்றணுவாய்த்தேய்ந்துதேய்ந்தொன்றாந் திருப்பெருந்துறையுறைசிவனே, ஒன்றுநீயில்லையன்றியொன்றில்லையாருன்னையறியகிற்பாரே." என்றும், திருவாய்மொழி. "நின்றவொன்றையுணர்ந்தேனுக்கதனுண்மையதுவிதுவென், றொன்றுமொருவாக்குலையலாகாவுணர்ந்துமேலுங்காண்பரிதாய்ச், சென்றுசென்றுபரம்பரமாயாதுமின்றித்தேய்ந்தற்று. நன்றுதீதென்றறிவரிதாய்நன்றாஞானங்கடந்ததே." என்றும், நெஞ்சொடுமகிழ்தல். "நீரொடுதண்ணளிவிண்டுநீரானவாறுபோல், ஊரொடுபேரில்லானொடொன்றினையேநெஞ்சமே." என்றும், தாயுமானார். "சென்றுசென்றேயணுவாய்த்தேய்ந்துதேய்ந்தொன்றாக, நின்றுவிடுமென்றநிலைநேருநாளெந்நாளோ. என்றும், தேவாரம். "பாஞ்சபூதிகத்துண்ணின்றபண்பனை, யாய்ந்தவாய்ந்துவறிவாலறிந்தபின், றேய்ந்துதேய்ந்துசிவமல்லதில்லையென், றோய்ந்துபோனதென்னுள்ளமுமெள்ளவே." எ-ம், வரும். மற்றும்வருவனவற்றாற்காண்க. சீவப்பாழ்பரப்பாழ்சிவப்பாழென்று மூன்றுபாழையுங்கடந்துநின்றவிடமே மோட்சமென்றதற்குதாரணம்: போதரத்தினாகரம். "மத்தமாம்புலன்மாறியவிடத்தேமன்னுயிர்வெளிப்படுமதுபோய்ப், பெத்தமாமுயிர்மாறியவிடத்தேபெரும்பரம்வெளிப்படுமதுபோ, யத்தமாம்பரமாறியவிடத்தேயமலருஞ்சிவம்வெளிப்படுமதுபோய்ச், சுத்த

மாந்திவமாரியவிடத்தேதோன்றிடுஞ்சுயம்பிரகாசம்." என்றும், தணிகையந்தாதி. "மாருதசிவஞானப்பேறளிக்கும்வலியனைத்தும்வாலித்தாக்கிப், பாருதவினைவலியுமுப்பாழுக்கப்பாலாம்பாழினின்று, வேறாகவொருவுமவர்தாமன்றேவுலகமெலாம்விரியத்தோற்று, மாறாறுங்கடந்ததிருந்த தணிகைவள்ளியாரக்குரியவடிமையாவார்." எனறும், சிவிக்கியானசுவாமிகள். "முப்பாழுக்கப்பால்முதற்பாழ் மனையகத்தே, தப்பிமலென்னைத்தனியேயழைத்தருளி, யொப்பாமமரியிலேயொன்றுபடச்சேர்வதென்றோ, செப்பாப்புகழ்ச்சென்னைச்சென்னமல்லிச்சுரனே." என்றும், திருவள்ளுவர். "எந்தவூரென்றீரிருந்தவூர்கேளீர், நந்தவூர்ச்செய்தியறியீரோ-வந்தவூர். முப்பாழும்பாழாய்முடிவிலொருசூனியமா, யப்பாலும்பாழென்றறி." என்றும், வேதசிரோதயம். "சும்மாயிருக்கச்சுகமுதயமாகிடு, நம்மானைநம்மானைநம்மானை-யம்மாகேள். முப்பாழுமபாழாயமுடிவிலொருசூனியமா, யப்பாலும்பாழென்றறி." எ-ம், வரும். மற்றும்வருவனவற்றாற்காண்க. சாக்கிரத்துக்கதீதப்பட்டுநின்றவிடமே மோட்சமென்றதற்குதாரணம், சிவஞானசித்தியார். "சாக்கிரத்தேயதீதத்தைப்புரிந்தவர்களுலகிற்சருவசங்கநிவிர்த்திவந்ததபோதனராகளவர்கள். பாக்கியத்தைப்பகர்வதுவெனனிம்மையிலேயுயிரின் பற்றறுத்துப்பரத்தையடைபராவுசிவரன்றே, வாக்குமுடிகவித்தரசாண்டவர்களிவையரோடனுபவித்தங்கிருந்திடினு மகப்பற்றற்றிருப்பர், நோக்கியிதுபுரியாதோர்புறப்பற்றற்றாலு முழைவர்பிறப்பினில்வினைகளுங்கிடாவே." என்றும், சிவப்பிரகாசம். "நீக்க

மிலதீதமாகு நிறைந்தகேவலமாநீர்மை, சாக்கிரங்கலாதிசேர்ந்தசகலமாந்தன்மையாகு, மூக்கமிவிரண்டுங்கூடாதொழியவோர்நிலையினீடு, சாக்கிரவதீதஞ்சுத்தத்தன்மையதாகுந்தானே." என்றும், தணிகையாநாதி. "நில்லாதநீடுலகவெட்டுவிசும்பினெழுத்தென்னநீங்கக்காட்டி, யொல்லாதமலமறிவுமுயிரறிவும்பொறிவாயொளிராநிற்பக், கல்லாரகிரிமுருகன்கலந்தளித்தசாக்கிராதீதத்துண்மை, வல்லார்களைந்தொழிலுமைந்தொழிற்காரணநிலையுமருவார்மாதோ." என்றும், சிவஞானபோதம். "வினைவிற்பாத்தையறிவுறுதற்கவத்தைபுலன்வினைமாறியே, நனவிற்சுழுத்திநிலைவரினப்பொருட்டிகழுநலனுகவே." என்றும், திருமந்திரம். "சாக்கிராதீதத்திலாணவந்தானுண்மை, சாக்கிராதீதத்துரியத்துத்தானாகுஞ், சாக்கிராதீதமாணவமிடைத்தான்விடச், சாக்கிராதீதமாயானுண்மைதங்குமே" என்றும, உபதேசமாலை. "நோக்காதுநோக்கிநெடிகொட்டுமன்னேரஞ், சாக்கிராதீதநிலைசாதித்தோ—ாக்கைச், சுமையெடுத்துநாளுந்துயருழ்ர்சொன்னே, னுமைபங்கனுனையுவந்து." எ-ம், வரும். மற்றும்வருவனவற்றுற்காண்க.

காண்பானுங் காட்டுவதுங் காண்பதுமாகிய திரிபுடியு நீங்கிநின்றவிடமேமோட்சமென்றதற்குதாரணம்: வினுவெண்பா. "காண்பானுங்காட்டுவதுங்காண்பதுவுநீத்துண்மை, காண்பார்கணன்முத்திகாணுர்கள்-காண்பானுங், காட்டுவதுங்காண்பதுவுந்தன்றடங்கைச்சம்பந்தன், வாட்டுமெறிவாராதவர்." என்றும், பிரமகீதை. "ஆனதாகத்தெய்வமதேயடையும்விடயமிந்திரியமாய்த், தானுமாகித்தனைத்தன்னுற்றுனேதுகருக்

தன்மையது, வூனமாகுஞாதாதியொழித்தேயுள்ளவறிவதனா
ற், ஞேயாகக்கண்டிருத்தல்சத்தாயுள்ளபூசையது." என்று
ம், ஞானவாசிட்டம். "முடிவுகனவஞ்ஞானமில்லாநீடுமிலது
வாமும்மையாகு, மடர்தருஞாதுருஞானஞேயமெழுந்தொடு
ங்குநிலையதுவேயாகுந், திடவிசும்பன்றுயிருந்தும் விசும்பர்
னநிலையதுவாஞ்சித்தம்புந்தி, படர்மனம்போய்த்தாவர வுள்
ளறிவுபெறிலெலாப்பாமப்பரமரூபம்." அன்றியும், "ஓங்குசின்
மாத்திரப்பொருளாமோங்காரத்தையுண்ணினைந்து, தாங்குதி
யானபரனாகித்தொடர்சங்கற்பமெல்லாம்போ, யாங்குதொழி
லேடணையைமனனஞானஞேயமிலை, தாங்குஞாதாவனைத்
துமறத்தனிச்சித்திரம்போனெடிதிருந்தான்." எ-ம், வரும். மற்
றும்வருவனவற்றுற்காண்க. (௨௦)

சகலகேவலங்கணீங்கற்குமனேலயமாயோங்கல்
பகர்சுகாதீதமாதல்பயிலுமுக்குற்றந்தீர்த
லிகறுறவெனதுயானென்னிருஞ்செருக்கறுத்தலின்ன
தகவுறுமுத்தியென்றேசாற்றிடங்களுமதென்றும்.

இ-ள்.—ஞானநூல்களிலான்மாவானது சகலகேவலமெ
ன்னும் பிணைப்புமறைப்புநீங்கிநின்றவிடமே மோட்சமென்ப
தும் மென்மைபொருந்தியமனேலயமாயுயர்ந்துநின்றவிடமே
மோட்சமென்பதும் விளம்பாநின்றபேரின்பத்தில் அழுந்தப்பட்
டவிடமே மோட்சமென்பதும் பொருந்தாநின்றகாமம் வெகு
ளி மயக்கமென்னு மூக்குற்றங்கணீங்கிநின்றவிடமே மோட்ச

மென்பதும் வலிமையுறத்தலுகரணங்களை யாவொன்றும் புவனபோகங்களையெனதென்றும் அபிமானிக்கும்படி மயக்குகிறகும்பெரியமயக்கத்தை யொழிந்துநின்றவிடமே மோட்சமென்பதும் இவைகள்மேன்மை, பொருந்தியமுத்தியென்று விளம்பாநின்ற விவ்வைவகைமுத்திநிலைகளும் அநந்நிலையனுபவமேயாம். ஆங்குநினைப்பு மறப்பின்மையானு மறைவிருத்தியின்மையானும் ஞானதாரிதமாகையாலும் விருப்புவெறுபபுமயக்கின்மையானுந் தேகபோகவபிமானமின்மையானும் இவ்வுடையாளங்களை அந்நிலைக்குள் தோன்ற நீநன்றாய் நிச்சயித்துப்புத்திபண்ணிக்கொள்வாயாக வென்றுகூறிமேலுமருள்செய்வான். — எ-று.

சகலகேவலனீங்கினவிடமே மோட்சமென்றதற்குதாரணம்: திருமந்திரம். "அறிவறியாமையிரண்டுமகற்றிச், செறிவறிவாயெங்குநின்றவனைப், பிறிவறியாதபிரானென்றுபேணுங், குறியறியாதவர்கோனறியாரே." அன்றியும், "இரவும்பகலுமிலாதவிடத்திற், குரவஞ்செய்கின்றகுழலியையாடி, யரவஞ்செய்யாமலவளுடன்றூங்கப் பருவஞ்செய்சாங்கிரப்பாலனுமாமே." என்றும், பட்டணத்துப்பிள்ளைநாயனார். "சினந்தனையற்றுப்பிரியமுஞ்சானற்றுச்செய்கையற்று,நினைந்ததுமற்றுநினையாததுமறநின்மலமாய்த், தனந்தனியேயிருந்தானந்தநித்திரைதங்குகின்ற, வனந்தலிலென்றிருப்பேனத்தனேகயிலாயத்தனே." என்றும், தேவிகாலோத்தரம். "சித்திரையும்பராக்கினையுநீக்கிச்சித்தமொருநிலையுஞ் சேராமனிறுத்திக்கொண்டாற், சித்தமொருபொருளினையுஞ்சேராதாகி

ச்சேரும்வகைசேராமற்செல்லநின்று, மத்த
தையொன்றுமருவாதவகைநிற்குமதுவேயா
யென்றுமறையிடைவிடாதுமுறையிடவுமாக
யுங்காணே." என்றும், சைவசமயநெறி. "
லாதவிடத்தே, பரமசிவம்பாராமற்பார்த்து." என
ம்மானே. "உற்றநினைப்புமறப்பற்றனம்மானே, 
தத்தேயொத்தேன்காணம்மானே." என்றும், மோகவ
ணி. "ஆங்குணராமைபுமுணர்வுமாகியகோளறவிருந்து, உ
னர்காண் சுகமடைவர்சும்மேலோசும்முலக்காய்." என்றும்,
அஞ்ஞவதைப்பரணி. "அறிவறியாமையழிந்தனரோ, யறிவ
றியாமையழிந்தனரோ, பிறிவறியாமைபிறந்தனரோ, பிறிவறி
யாமைபிறந்தனரோ." என்றும், திருப்புகழ். "அறிவுமறியாமை
யுங்கடந்தறிவுதிருமேனியென்றறிந் தருணசரணாரவிந்தமென்
றடைவேனோ." எ-ம், வரும். மற்றும்வருவனவறருற்காண்க.
மனோலயமானவிடமே மோட்சமென்றதற்குதாரணம்: பிரபு
லிங்கலீலை. "மனதைதயடக்கமனநதனையாகும், பினைத்தனை
யின்றதுபெறறனனுக்கிற், றனிச்சிவமேயொருதானெனவாழ்வ,
னினைத்துமறநதுநிலத்துழலானே." அன்றியும், "மட்டறவோடு
மனத்தைநிறுத்திக், கட்டுதல்வீடுவிடுத்திடல்கட்டுஞ், ஒரு
ட்டியபண்பினுமை ... பர், சிட்டனவட்கருள்செய்தன
னன்றே." என்று ... சப்பா. "பூதமுங்கணமும்பொ
றிகளும்புலனும்பொருந்தியகுணங்களோர்மூன்று, நாதமுங்
கடந்தவெளியிலேநீயுகானுமாய்நிற்குமாறுளவோ, வாதமுஞ்
சமயபேதமுங்கடந்தமனோலயவின்பசாகரனே, வேதமொ

ன்செயலேயிறைவனேயேகநாயகனே." என்று சிவஞானசித்தியார். "அலையுமனத்தையகத்தடக்குந்தோறு, மலையுமனத்தையகத்தடக்குமவனிற்தோறு, மலையுமனத்தையகத்தடக்குமவனு, மலையுமனத்தையகத்தடக்குமவனேஞா" எனறும், திருமந்திரம். "மனமாயைமாயைமானமாயைதான்மாயமறவொன்றுமில்லை, பினைடாம்பிதற்றவும்வேண்டாந், தனையாய்நதிருப்பதுதானே." எ-ம், வரும. மறறும்வருவனவற்றுறகாண்க. சித்தமானவிடமே மோட்சமென்றதற்குதாரணம்: ஞானசுகாதீதமணமாலை. "உனனுந்தேடாதேயூனறியொருமந்திரங்கள், பன்னுதேசாத்திரஙகள்பாடதே-யென்னாளுமப்பாருமுப்புவமையானசுகாதீதத்தே, யெப்போதுஞ்சுமமாவிரு." என்றும், ஒழிவிலொடுக்கம. "சுகாதீதம்வேண்டித்தொழிலசெய்வோமென்று, கைகாரோதுயில்வார்நடந்தோ-விகாரமெனச், சாதகிர்மும்பூசைச்சமாதிகளுஞ்சார்போதக், கோதிரங்காண்மாயைக்குழாம்." எனவும், துகளறுபோதம் "இநதச்சுகத்தையினிகவ்ழியாம, லந்தவறிவிலயர்ந்ததுபோற்-றுந்தமறப், போதாயிதுவேசுகாதீதம்பொய்யற்றோர்ந், காதாரமானவருள்." "அன்றியும், ஒனறுஞ் [illegible] குளளானதம்பிரா, னனறியொருபொருளுமாகா [illegible] நதிச், சொல்லரியவின்பச்சுகததுக்கதீதமாய், [illegible] மேதில்." எ-ம், வரும், மறறுமவருவனவற்றுறகாண்க. முக்குற்றந்தீர்ந்தவிடமே மோட்சமென்றதற்குதாரணம்: சித்தாந்தசிகாமணி. "வெ

ய்யகாமம்வெகுளிமயக்கமா, மையுலாமதயானைவளர்ந்தெழு, செய்யமாசிவஞானமடங்கன்முன், னுய்யுமோநின்செருகணமேனுமே" என்றும், பகவற்கீதை. "அறிவினையழகிதாகவறிநதெலாவவாவுநீக்கி, வெறிதருவெகுளிகாமமயக்கநீத்தின்பதுன்பம், வறிதெழும்பொழுதில்வாட்டமகிழ்ச்சியென்றிவையுமாய்த்துப், பொறிதருபுகழுந்தீங்கும்போற்றல்போற்றலைமபோக்கி." என்றும, பிரபுலிங்கலீலை. "வீடுவனகாமம்வெவ்வெகுளிமாலிவை, தொடுவனகுருசிவசரங்கடொல்பவங், கடுவெனவெருவியகருத்துளார்க்கிவ, ணடுவனவெனப்புலனட்டவாற்றலாய்." என்றும், திருவள்ளுவர். "காமம்வெகுளிமயக்கமிவைமூன்றி-னாமங்கெடக்கெடுநோய்." எ-ம், வரும். மற்றும்வருவனவற்றுற்காண்க. என்னதுயானென்னுஞ்செருக்கற்றவிடமே மோட்சமென்றதற்குதாரணம். சிவஞானசித்தியார். "யான்செய்தேன்பிறர்செய்தாரென்னதுயானென்னுமிகேகோணைஞானவெரியால்வெதுப்பிநிமிர்த்துத், தான்செய்வேநின்றிடவத்தத்துவன்றானேசேதனையளித்தமுன்னிற்கும்வினையொளித்திட்டோடு, நான்செய்தேனெனுமவாக்குத்தானங்கின்றிநண்ணுவிக்கும்போகத்தைப்பண்ணுவிக்குங்கன்ம, மூனசெய்யாஞானிதானுதிப்பினலலாலொருவருக்கு யியானெனதிங்கொழியாதன்றே." என்றும, பிரபுலிங்கலீலை. "யானெனதென்பதிருந்[illegible]று, ஞானமுறுனதாணணிலனுயிற், றனிலையாதசகந்திசழ்கிற்குந், தீனமிலாதசிவந்திகழா்ந்த." என்றும், திருவாய்மொழி. "நீர்நுமதென்றிவைவேர்முதன்மாய்த்திறை, சேர்மினுயிர்க்கதனேர்நிறையில்லே." என்றும், ச

ம்பலநாடியார். "யானெனதுநீக்கியிறைநிறைவிலொன்று, யானெனதுநீக்காதிருத்திறன்-யானெனது, தங்காதவ பாற்றுஞ்சண்பைச்சிற்றம்பலவன், மங்காமற்காத்தாண்டு."என்றும், இளசையந்தாதி. "என்னதுயானெனுமிந்தமக்கைத், தன்னருளாலொழிக்கும்பிளசைக்கோன், கன்னியத்தொடுகைகவளேகட்கே, கொன்றுறுமேனி குழைந்தமையென்னே. என்றும், அவிரோதவுந்தியார். "யானெனதென்செருக்கிர்த்தமகன்கொண்மெஞ் ஞானியென்றேதியவுந்தீபற, நான்மறையாதியவுந்தீபற. என்றும், திருவள்ளுவர். யானெனதென்னுஞ்செருக்கறுப்பான், வானோர்க்குயர்ந்தவுலகம்புகும்."எ-ம், வரும். மற்றும்வருவனவற்றுற்காண்க. (உக)

சஞ்சலமில்லாச்சித்தந்தான் சுத்தசிவமாயோங்கல்
விஞ்சுயிர்க்கரணங்கெட்டுவெறுஞ்சிவகரணமாத
றுஞ்சுறுபாவனுதிதஞ்சுமாவிருத்தலின்ன
வெஞ்சுறுமுத்தியென்றேயியம்பிடங்களுமதென்றும்.

இ-ள்.—ஞானநூல்களில் ஆன்மாவானது போதச்சேட்டையின்றியசைவறநிற்றலே நின்மலமாகிய சிவமயமாய்விளங்காநின்ற மோட்சநிலையென்பதும், விருத்தியாநின்றசிவகரணங்கெட்டுமுழுவதுஞ் சிவகரணமேயாய்த் தற்செயலற்றுச் சுதந்தர ஆனியாய்நின்றவிடமே மோட்சநிலையென்பதும், நிலைபெற்றபாவனையைக்கடந்துநின்றவிடமே மோட்சநிலையெனபதும், போதவிகற்பங்களீங்கினவிடத்து இருந்தபடி சும்மாவிருத்தலே மோட்சநிலையென்பதும், ஆகிய விந்நான்குநிலைக

ளூங் குறைவின்றிய பூரணமோட்சநிலையென்று கூறுமிடங் களும் அந்நடுநிலையனுபவமேயாம். ஆங்குப்போதச்சலனையின் றித் தம்பித்துநிற்றலானுஞ் சீவகரணமேசற்றுந்தோன்றாதி ருத்தலானும் அணுவளவேனு மோர்பாவனைக்குறியின்றி நிற் றலானும் கிரியைவிகற்பமின்றி யிருந்தபடியிருத்தலானும் இவ்வடையாளங்களை அந்நடுநிலைக்குள் தோன்ற நீ நன்றாய் நிச்சயித்துப் புத்திபண்ணிக்கொள்ளுவாயாகவென்றுகூறி மேலுமருளிச்செய்வான்.—எ-று.

முன்னர்க்கூறிய மூன்றுஞ்செய்யுண் முதலிற் றிரையற நீர்போற் சிந்தைதெளிதலென்றும் ஈண்டுச் சஞ்சலமில்லாச் சித்தந்தான் சுத்தசிவமாய் ஓங்கலென்றுங் கூறினமையால், இவ்விரண்டின்கருத்தும் ஒன்றுபோற்றோன்றிக் கூறியது கூ றலென்னுங் குற்றமாகாதோவென்னின், ஆகாது. அஃதெத்தா லென்னில், ஆண்டுச்சித்தந்தெளிந்துநிற்றன்மாத்திரத்தே மோ ட்சமென்பார் திரையறுநீர்போற் சிந்தைதெளிதலென்றும்; ஈண்டுச் சித்தம் அசைவற்று நிற்றன்மாத்திரத்தே மோட்ச மென்பார சஞ்சலமில்லாச் சித்தந்தான் சுத்தச்சிவமாயோங் கலென்றுங்கூறியகருத்தாலெனக்கொள்க. சஞ்சலமில்லாச் சித்தந்தான் சுத்தசிவமாயோங்கலென்றதற்குதாரணம்: தி ருவம்மானை. "சித்திரதீபத்தே யொத்தேன் காணம்மானை, சி த்தஞ்சலித்திடஞ்சென்மங்காணம்மானை." என்றும், தேவி காலோத்தரம். "ஆராதசித்தமியாதோர்காலத்திலடங்குமா னற், பேராமல்வருந்திக்காத்துப்பின்னர்ச்சிந்தனைகள்சென் று, சாராமல்வல்லவாறுதடுத்துச்சார்வானவெல்லாஞ், சே

மயக்கநீக்கித்திரமாகச்செய்துகொள்வான்." என்றியு
மருவியபொருண்மேலன்பாய் வானரம்போற்சரித்துத்,
புமச்சித்தந்தனைத் திரித்துச்சூனியத்தே நின்றால், மருவி
ர்பிரிதலின்றிவானவாறிதேக்கெட்டாப், பொருவிலாநித்த
தப்பொருளினையடைவரன்றே." என்றும், சந்திரசேகர
க்கியம். "சத்தம்பிறக்கச்சகலகலையும்பிறக்கு, மத்தனுணா
ததறியாயோ - வன்றுணாத்த, சத்தமேசததஞ்சஞ்சலமொ
ன்றிலலாத, சித்தமேசுத்தச்சிவம்." எ-ம்,வரும். மற்றும்வரு
வனவற்றுற்காண்க. சீவகரணங்கெட்டுச்சிவகரணமாய்நின்
றவிடமே மோட்சமெனறதற்குதாரணம்: சிவஞானசித்தியா
ர். "இந்நிலைதானில்லையெல்லாமீசனிடத்தினிலுமீசனெல்லாவி
டத்தினிலுநின்ற, வந்நிலையையறிந்தந்தக்கரணங்களடக்கிய
றிவதொருருநிகுருவி னருளினாலறிந்து, மனனுசிவன்றனைய
டைந்துநின்றவன்றன்னாலே மருவுபசுகரணங்கள்சிவகரண
மாகத், துன்னியசாக்கிரமதனிற்றுரியாதீதந்தோன்றமுயல்சி
வானுபவஞ்சுவானுபூதிசமாம்." என்றும், சிவநெறிப்பிரகாச
ம். "தேசிகனாரருள்வன்செய்தவாறேசிதாநந்தமேனியாஞ்
சிவமேதோன்ற, வாசதுவாமலமாயையருங்கன்மமனைத்தும
கன்றிடத்தான்சிவானுபவத்தழுந்தியதுவேயாய்க், காசமி
லாவிழியருக்கனொளியினூடே கலந்துநின்றேமற்றொன்றுங்
காணுவாபோ, லேசுறுமுற்பசுகரணஞ்சிவகரணமேயாயிசை
ந்திருந்துதேகாந்தத்தெங்கணு மாயிடுவர்." என்றும், ஞான
மணிமாலை. "நின்போதமுண்டாயினீகூடாய்முத்திதனி, ன
ன்போதங்கெட்டாலுநன்றாகா - நின்போதங், கெட்டுன்

## முத்திமுடிவுரை.

கொடாழுலேநின்றநிலைகேட்டியேற், கட்டலரிமுன்சசிபோற்காண்" என்றும், இருக்களிற்றுப்படியார். "பாலைநெய்தல்பாடியதும்பாம்பொழியப்பாடியதுங், காலனையன்றேவிக்கராங்கொண்ற-பாலனை, மரணந்தவிர்த்ததுவுமற்றவர்க்குநந்தங்:கரணம்போலல்லாதுகாண்". எ-ம், வரும். மற்றும் வருவனவற்றுற்காண்க. பாவனாதீதமாய்நின்றவிடமே மோட்சமென்றதற்குதாரணம்: சிவஞானசித்தியார். "பாவிப்பதென்னிற்பாவம்பாவகங்கடக்கிற்பாவம், பாவிக்குமதுநானென்னிற்பாவகம்பாவங்கெட்டுப், பாவிப்பதென்னிற்பாவம்பாவனையிறந்துநின்று, பாவிக்கப்படுவதாகும்பரம்பரனருளினாலே." என்றும், திருப்பல்லாண்டு. "சேவிக்கவந்தயனிந்திரன்செங்கண்மாலெங்குந்திசைதிசையுங், கூவிக்கவர்ந்துநெருங்கிக்குழாங்குழாமாய்நின்றுகூத்தாடு, மாவிக்கமுதையென்னார்வத்தனத்தினையப்பனையொப்பமரர், பாவிக்கும்பாவகத்தப்புறத்தானுக்கேபல்லாண்டுகூறுதுமே." என்றும், ஞானமணமாலை. "சுட்டுக்கடங்காதுசுட்டற்றவப்பொருடான், மட்டுக்கடங்காதமாயாது - திட்டங், கனியிரதம்வெம்மையனல்கான்மலர்வீணை, யிசைமருவுமீசனியல்பு." அன்றியும், "ஆராவமுதாகவானசிவானந்தவெள்ளம், வாராமல்வந்தனக்குவாய்க்குமே - யாராலுங், காணரியவுண்மைமீதனிற்காட்சியிற்பற்றற்றநீ, யாணவர்போனில்லாயதில்." என்றும், அமுதசாரம். "யோகத்தபாவமெனும்யோகமதுகைகூடி, யேகப்பொருளதனுலெய்தியிடு - மேக, மதுவாமிதுவென்றெனுதகண்டமான, வதுவாகைமாயோகமாம்." என்றும், தி

ரம். "குறியாக்குறியினிற்கூடாதகூட்டத், தறியா
லுகந்தேகசித்த, நெறியாம்பரானந்திநீடருட்டோன்
செறியாச்செறிவேசிவமெனலாமே." என்றும், அவி
தவுந்தியார். "பாவனைநீதநினைவின்மையுண்டெனிற்பா
னையாகுமென்றுந்தீபற, பன்னாற்கருத்தமீறுந்தீபற." எ
றும், திருவாய்மொழி. "யாவையுமெவருந்தானாயவரவர்
சமயந்தோறுந், "தோய்விலன்புலனைந்திற்குஞ் சொலப்ப
டானுணர்வின்மூர்த்தி, யாவிசேருயிரினுள்ளான்யாதுமோர்
பற்றிலாத, பாவனையதனைக்கூடிலவனையுங்கூடலாமே." எ
ன்றும், ஞானவிளக்கம். பாவனைதீதம்பரமசிவமென்றாற், பா
வித்துநீயதனைப்பாராதே-பாவித்த, போதேநீயுண்டாவைபுத்
திமுதற்றத்துவங்க, ளதொன்றவுண்டாநதெளி." எ-ம்,வரும.
மற்றும்வருவனவற்றுற்காண்க. 'இருந்தபடிசும்மாவிருத்த
லே மோட்சமென்றதற்குதாரணம்: எதிர்காலத்திரங்கல்.
"இம்மாநிலத்துயிருந்தபடியேயிருந்து, சும்மாவருளைத்தொ
டருநாளெந்நாளோ." என்றும், கந்தரலங்காரம். "தடுங்
கோண்மனத்தைவிடுங்கோள்வெகுளியைத்தானமென்று, மி
டுங்கோளிருந்தபடியிருங்கோளெழு பாருமுய்யக், கொடுங்
கோபச்சூருடன்குன்றந்திறக்கக் குனித்தவைவேல், விடுங்
கோனருளவந்துதானேயெமக்குவெளிப்படுமே. என்றும், க
ந்தரனுபூதி. "செம்மான்மகளைத்திருடுந்திருடன், பெம்மா
ன்முருகன்பிறவானிறவான், சும்மாவிருசொல் லறவென்ற
லுமற், றம்மாபொருளொன்றுமறிந்திலமே." என்றும், தா
யுமானர், "சும்மாவிருக்கச்சுகஞ்சுகமென்றுசுருதியெல்லா,

மம்மாநிரந்தரஞ்சொல்லவுங்கேட்டுமறிவின்றியே, பெம்மான் மவுனிமொழியையுந்தப்பியென்பேதைமையால், வெம்மாயக் காட்டிலலைந்துவிட்டேனென்விதிவசமே." என்றும், பஞ்சாக்கரந்தாதி. "பாடுதும்பஞ்சாக்கரவனையென்றுபடர்தலொடும், கூடுவதன்னவன்பாதமதுவந்துகூடுதலு, நீடுவதின்பமனவக்குக்காயநிகழ்செயலற், றோடுவவாளாநங்கிருப்பதல்லாற்பின்னையொன்றில்லையே." என்றும், திருக்களிற்றுப்படியார் "அன்றிவருமைம்புலனுநீயுமசையாம, னின்றபடிநிற்கமுன்னிற்குஞ் - சென்று, கருதுவதன்முன்னங்கருத்தழியப்பாயு, மொருமகடன்கேள்வனுனக்கு." என்றும், ஞானமணிமாலை. "முத்திச்சிவானந்தமுட்டாமன்மேன்மேலுந், தத்திக்கரைபுரண்டதானாலும் - நித்தியமும், முன்னாலுமுழுகிலதுவுன்னைவற்றியிடு, மென்னாணைசும்மாவிரு." அன்றியும், "பாராதேதீண்டாதேபத்தியுறமெய்ப்பொருளை, நேராகப்பூண்டுநினையாதே - பேராத. போதமற்றுநிட்டையற்றுப்பூரணமாமுண்மைதனி, லேதமற்றுச்சும்மாவிரு." என்றும், சிவானந்தமாலை. "ஓடியுழன்றிந்தவுடம்பையொருதேகீ, பாடிமிடற்றைப்புண்படுத்தாதே - கேடிலியை, யும்மால்விளையாதேயொன்றுடனுந் தாக்காதே, சும்மாதேகாணுஞ்சுகம்." என்றும், ஒழிவிலொடுக்கம். 'சும்மாவிருக்கவைத்தசூத்திரமாஞ்சாத்திரத்தை, விம்மாசதறுவதும்வேலைகளுந் - தம்மறிவி, னிட்டிப்பிடித்திருக்கும்நிட்டைகளும்ஞானிகண்முன், காட்டும்பரியாசகம்.'' அன்றியும், "கிரியைக்கிளைத்துவந்துகேட்டவர்க்குச்சும்மா, திரியச்சுகம்விளைத்தசீமான் - குருவன்றிச், சற்றேபதைப்புத்தரினுஞ்

சகம்படைக்கக், கற்றானுங்காலனுமாங்காண்." என்றும், சிவபோகசாரம். "அருளறிந்துதானு மறிவறிந்தே யாங்குப், பொருளறிந்துதானடங்கிப்போத-விருளகல, விம்மாதிருந்து விகற்பமறவொன்றாகிச், சும்மாவிருக்கச்சுகம்." எ-ம், வரும். மற்றும்வருவனவற்றாற்காண்க. (௨௨)

உருவமற்புறுகயிற்றினிற்றிரையறுசகலசஞ்சல மென்னுமிவ்வாறுதிருவிருத்தானும் பலவிதமுத்திகளைக்கூறி இவைகளினனுபவமனைத்தும் அந்நடுநிலைக்குட்டோன்றுமனுபவத்துளடங்கும் அதனை நீ நன்றாய் நிச்சயித்துப் புத்திபண்ணிக்கொள்வாயாகவென்றருளிச்செய்து மேற்றிருவிருத்தம் இந்நூற்குக் காரணப்பெயர்கூறுவானெடுத்துக்கொண்டது.

இன்னமும்பலவாய்நூல்களியம்பிடுமுத்தியெல்லா, ம
ன்னடுநிலையினோங்கு மனுபவமாதலாலே, சொன்ன
மந்நிலைக்குநாமந் தொடுமுத்திமுடிவென்றித்தை, யுன்
னனுபவத்துங்கண்டே யுறுபவமொழிதியென்றும்.

இ-ள்.—இங்ஙனங்கூறிய மோட்சநிலைகளுமன்றி யின்னும் ஒன்றாகூறியபடி யொன்றாகூறாமற் பற்பலவிதங்களாய்ப் பற்பலநூல்களிற் கூறாநிற்குமோட்சநிலைகளெல்லாமும் அந்நடுநிலையினிடத்து விளங்கித்தோன்றும் அனுபவமேயாம். ஆகையினாலே பலவிதமுத்திகளையுந் தன்னிடத்துத்தொகுத்துநிற்கின்ற முத்திமுடிவென்று அந்நடுநிலைக்குத் திருப்பெயர்சாற்றினோம். அப்பெயரோயந்நடுநிலையைப்பிரதானமாக வுடை

யவிர்ஞாற்கும்பெயராயிற்று. இங்ஙனம் பலவிதமுத்திகளும் அந்நடுநிலைக்குளடங்கிநிற்கு மித்தன்மையினை யுன்னனுபவத்தினிடத்தும் விளங்கக் கண்டுகொண்டுன்னைச்சூழாநின்ற சென்னதுக்கங்களையொழித்துக்கொள்ளுதியென்று மேலுமருளிச்செய்வான்.—எ-று.

இங்ஙனங்கூறிய மோட்சநிலைகளுமன்றி இன்னும்பலவாய் நூலகளியம்பிடு முத்தியெல்லாம் அந்நடுநிலையினோர்க்கு மனுபவமென்றதனால் அந்நடுநிலையாவது ஓர்விடயத்தைவிட்டதற்குபபின்னு மற்றோர்விடயத்தைப் பற்றுதற்குமுன்னுமாய் நின்றவிடைவெளியேயாம். ஆகையால் அதனை நடுநிலையெனறுந் தராசுநிலையென்றுஞ் சமநிலையென்றுங் கூறுநிற்பர்கள். ஆங்குச் சற்றும்விகற்பமின்மையானிருவிகற்பமே மோட்சமென்பதுவும் அறிவுமாத்திரமாய் நிற்கையாலறிவாயிருப்பதே மோட்சமெனபதுவும் பொய்யாகிய பிரவஞ்சமொழிந்துநிற்கையான் மெய்யாகியவுண்மைநிலையே மோட்சமென்பதுவும் வாசனைநீங்கிநிற்கையால் வாசனாட்சயமேமோட்சமென்பதுவும் அசைவறவாகாயம்போற் பூரணமாய்நிற்கையான் ஞானமயமாயிருப்பதுவே மோட்சமென்பதுவும் யாவுந் தோனுண்மையாயுள்ளவனுபவ முண்டாயிருக்கையாற் சத்தாயிருப்பதுவே மோட்சமென்பதுவும் பரமசுகமே மேலிடுகையால் ஆனந்தாதீதமே மோட்சமென்பதுவுங் குறியொன்றுமின்றிநிற்கையாற் குறியாக்குறியேமோட்சமென்பதுவும் வாக்கிறந்துநிற்கையால் வேதாந்தமே மோட்சமென்பதுவும் சிந்தனையற்றுநிற்கையாற் சித்தாந்தமே மோட்சமென்பதுவும்

தத்துவமகன்றுநிற்கையாற் றத்துவாந்தமே மோட்சமென்ப துவும் பஞ்சகலைமுதலியசடாத்துவாக்களும் நீங்கிநிற்கையாற் கலாந்தமே மோட்சமென்பதுவுந் தசவிதநாதங்களுமொழிந்துநிற்கையால் நாதமுடிவாகியயோகாந்தமே மோட்சமுடிவென்பதுவும் போதநீர்ந்துநிற்கையாற் போதாந்தமே மோட்சமென்பதுவுங் ஆகிய இவைகளனைத்துமடங்காநிற்கும் இவைகளன்றியும் இங்ஙனமின்னும் பற்பலநூல்களிற் பற்பலபிரகாரமாயொன்று கூறியபடியொன்றுகூறுமற் றெண்டர்முகந்தத்துறையறிவோமே யென்றதற்கொக்க வெகுவிதமாய்க்கூறுநிற்கும் மோட்சநிலைகளும் அந்தநிலையனுபவமே யாமென்பதூஉம் பெறப்பட்டது. அதனால் அந்நூல்களினும் இந்நூல்சிறப்புடைத்தென்பதாயிற்று. இதற்குதாரணம்: சிவஞானசித்தியார். "ஓதுசமயங்கள்பொருளுணருநூல்களொன்றோடொன்றெவ்வாமையுளபலவுமிவற்றுள், யாதுசமயம் பொருணூல்யாதிங்கென்னிலிதுவாகுமதுவல்லவெனும்பிணக்கதின்றி, நீதியினாலிவையெல்லாமோரிடத்தேகாணநின்றதியாதொருசமயமதுசமயம்பொருணூ, லாதலினாலிவையெல்லாமருமறையாகமத்தேயடங்கியிடுமவையிரண்டுமரனடிக்கீழடங்கும்." என்றும், உபதேசமாலை. "சித்தாந்தம்வேதாந்தஞ்செப்புதத்துவாந்தம், புத்தகலையாந்தமொடுபோதாந்தஞ்-சுத்தமா, நாதாந்தமென்றிவைகளாறுமவையென்றே, நீதானும்தேடிவிடு." எ-ம், வருமீ. மற்றும்வருவனவற்றுற்காண்க. உன்னனுபவத்துங்கண்டேயுறுபவ மொழிதியென்றதற்குதாரணம்: சுவானுபவத்துதி. "தத்துவங்களாறும்பின்

விட்டப்பாற்றந்துவாதீதமாந்தன்னைக்கண்டு, பற்றொன்றுமி லலாதபரையைக்கண்டுபரிந்துபரிநாளுருகியதிலொடுங்கி, வெற்றவெறுமானந்தவுருவங்கண்டுவிளையாமல் விளைந்தப் பால்வெளியைக்கண்டு, நாறநீமெலாமறநீத்தங்கறிவாய்நின் றுரும்பிட்டேனென்பிறவியின்விட்டேனே." எ-ம். வரும். ம ற்றும்வருவனவற்றுற்காண்க. (௨௫).

மேற்றிருவிருத்தம் அந்நடுநிலையின்சிலாக்கியத்தைவற் புறுத்திக்கூறி யாங்கண் உன்னுடைய செனனதுக்கங்கணீங் கும்படிக்கு உரைநது நிற்றியென்று அருளிச்செய்வீரெனடு தனக்கொண்டது.

முத்தியின்முடிவதன்றி மொழியின்மேலில்லையாகுஞ்
சித்தமங்கிலேயன்றித் தெளியின்வேறில்லையாகும்
வைத்திடுபவங்கள்போக்கும்வகையுமதன்றியின்றுஞ்
சத்தியஞ்சொன்னோமங்கண் டளர்வறவுறைதியென்
றும்.

இ-ள்.—முத்தியின்றீர்வாகிய முடிந்தமோட்சநிலை அந் நடுநிலையிடமேயல்லாமற் கூறுமிடத்து அதற்குமேலாகிய வி டமேயில்லையாகுமெனவும் நிச்சயமாய்முடிந்தபொருளா யெக்காலத்து மழியின்றிநிலைபெற்று நிற்கின்றதென்று கூறு கின்றவிடமும் அந்நடுநிலையிடமேயன்றி விசாரித்துத்தெளிய வறியுமிடத்து வேறோரிடமுமில்லையாகுமெனவு முனக்கு அ ளவின்றிவைத்திருக்கின்ற செனனதுக்கங்களை யொழிக்கும் வகையாகிய மார்க்கமும் அந்நடுநிலையிடமேயன்றிவேறிலை

யெனவு நிச்சயமாகக் கூறினேன் இதனை நீ நன்றாய் நிச்சயித் தறிந்து அந்நடுநிலையினிட்டு உனது செனனதுங்கங்களை நீ க்கும்படிக்கு உனபோதஞ்சிறிதுந் தோன்றாது ஆங்கணிலை பெற்றுச்சற்றுஞ்சோர்வுதலின்றி நிற்றியென்றுமருளிச்செ ய்தனன்.—எ-று.

அந்நடுநிலையையன்றி முத்தித்திர்வு மேலில்லையெனவும் நிச்சயம்வேறில்லையெனவுஞ் செனனங்களையொழிக்கும்வ கையுமின்றெனவும்இங்ஙனங் கூறினமையால் அந்நடுநிலையை விட வேறோர்நிலையும் அந்நிலைக்கொவ்வாதோவெனனில ஒவ் விலும் அஃதும் அந்நடுநிலைக்குள்ளாயடங்குகையால் அதனை யேயீண்டுச்சிறப்பித்துக்கூறியதெனக்கொள்க. இதற்குதார ணம்: அம்பலவாணையாதசகாரியம். "முத்தியுமீதுவேயாகுமு டிவும்வேறில்லையாகுஞ், சித்தமுமீதுவேயாகுந்தெளிவுமேலி ல்லையாகும், பித்துமின்றொழிவேயாமேறபேறிதற்கில்லையா கு,மொத்தவிவ்வுடலுமிந்நாலுருவதுமில்லையாமே." என்றும், சருவக்கிஞானோத்தரம். "நித்தனார்வியாபகத்தைநிகர்வியா பகம்வேறில்லை, சித்தியாஞ்சிவயோகம்போற் சித்திகள்பிறி தொன்றில்லை, யுத்தமம்பொறுமைக்கொப்பாயொன்றும்வே றில்லையிந்த,; தத்துவஞானத்திற்குச்சரியானஞானமின்றே." எனறும், துகளறுபோதம். "உற்றபரமானந்தத்தோன்றுயதி லுறங்கி, முற்றுவதேமுத்திமுடிவெனறுணர்க்குவ - குற்றமி லா,வைதிகசைவம்வழிநூற்புராணமற்றுஞ்,செய்தவர்நூலெ ல்லாந்தெளி." எ-ம், வரும். மற்றும்வருவனவற்றுற்காண்க. சத்தியஞ்சொன்னோமென் றதற்குதாரணம்: விருத்தகிரிப்பு

ராணம். "உத்தமசத்தியமிக்கதகைமெய்யென்றுணராதா, ரத்தலைவெட்டுண்டாயிரசின்னப்பொடியாய்ப்போ, யத்தலையெரிவாய்நரகம்புகுதுவர்நம்மாணை, சத்தியமிதுவேசத்தியம்வாணோரானீரோ." என்றும், சிவானந்தமாலை. "தானுவினோடத்துவிதஞ்சாதிக்குமாணவனை, யாணவத்தோடத்துவிதமாக்கினரார்-கோணறவே, யென்றனையென்றனையென்றனையேகமிரண், டென்றுமற்சும்மாவிரு." என்றும், ஒழிவிலொடுக்கம். "என்றனையென்றனையென்றனையேகமிரண,டென்றுமற்சும்மாவிருவென்று-சொன்னான், றிருஞானசம்பந்தன்சீகாழிநாட, னருளாளன்ஞானவினோதன்." என்றும், ஞானமணமாலை. "சற்றுலுமாணவகசங்கையற்ற சத்தியத்தைப், பெற்றோநாமென்றல்பிழையாமே-பற்றச, மன்றுதேநீங்காதேவாய்த்த்சிவானந்தந்தி, லென்றனைசும்மாவிரு." எ-ம, வரும். மறறும்வருவனவற்றுற்காணக. அங்கண்டனாவறவுறைதுயென்றதற்குதாரணம்: பட்டணத்துப்பிள்ளைநாயனார். "உழப்பினவாராவுறுதிகளுளவோ, கழப்பின்வாராக்கையுறவுளவோ." என்றும், சோயிற்புராணம். 'கன்றமரன்பாலான்பால்கவர்தருகாலமேனும், வென்றிகொளம்புலீழும் வேலையாயினுமிமைப்புச், சென்றுறுமமையமேனுந்திருவடிதெளியநோக்கி, நின்றவாகாணநின்றார்நீள்பவங்கங்கினாரோ." என்றும், மெய்ம்மொழிச்சரிதை. "சத்தியமுரைக்கநாளுஞ்சகலபல்லுயிர்கட்கெல்லா, நித்தலுமிதமேசெய்கதினைப்பதுசிவத்தையென்று, மத்தன்வேதாகமத்தினருளியபொருளிம்மூன்று, மெத்திறச்சமயத்தோர்க்குமெம்ம

தங்களுக்குமிட்டம்.'' என்றும், பிரமகீதை. "உலத்தலின்றி யொழிவற்றபொருண்மையதுவாஞ், சலித்தலின்றியதவத் தினவர்தங்கணெதிரோ, திலத்திலெண்ணெயரணிக்கனறதிக்க னிகழ்நெய், நிலத்தினிசொனாகிழ்ந்துவெளியாகிநிலையாம்.'' என்றும், குகைநமசிவாயர். "சும்மாவிடைக்குமோசோணுச லன்பாத், மம்மால்விரிஞ்சனறிகிலார் - நம்மா, லிருந்தக தைசொன்னக்காலென்னகுநெஞ்சே, பொருந்தநினையாத போது." என்றும், நெஞ்சுவிடுதூது. "சும்மாவிருக்குஞ்சு கமுமிதென்றலின்கீ, ழெம்மான்முனிவர்க்கியம்புமிதைத-த ம்மா, லுழைத்தவர்க்கேயல்லாலுழையாமல்வீணிற், கழப்பி னர்க்கெக்காலுங்கைகூடா." என்றும், ஞானசாகரவெண்பா. "சாத்திரங்களோதித்தலைவனடிகூடாமற், சாத்திரங்களின்ப ந்தருமோதான்-சாத்திரத்தைக், கற்றறிந்துவிட்டாற்கதியாகா தப்பொருளைச், சற்றிருந்துபாராய்தனித்து." எ-ம், வரும். மற் றும்வருவனவற்றுற்காண்க. (உ௯)

மேற்றிருவிருத்தமிங்ஙனம்பலபிரகாரத்துந் தெளிவித் துச் சென்னங்களைநீக்கியஞானாசாரியனைவியந்துகூறுவானெ டுத்துக்கொண்டது.

இன்னணம்பலவாற்றானுமெங்குருநாதன்றேற்றித்,து ன்னுமந்நடுநிலைக்குட்டியமறவெனையிருத்தி, மன்னிடு ஞ்சொரூபமாக்கிமலிபவமொழித்தானன்றேன்,பொ னனருள்வாழியாண்ட பூங்கமலத்தாள்வாழி.

இ-ள்.—இந்தப்பிரகாரமாயனுக்கிரகிப்பான்றொடங்கியெடுத்துக்கொண்ட ஞானகுரு ஞானமென்னுஞ்செய்யுண்முதல முத்தியின் முடிவதன்றியென்னுஞ் செய்யுளீறாகக் கூறிய இருபதுசெய்யுட்களின் பொருள்களாகிய பலவிதவேறு திட்டாந்தமார்க்கங்களினு மொன்றுக்கும்பற்றாதவென்னையுமொருபொருளாகக்கொண்டருளிய வெமதிருநாதனாகிய ஞானாசாரியன் எனது மயக்கவிகற்பங்களைநீக்கி யானுமவ்வனுபவத்தைப்பெறும்படிக்குத் தெளிவித்தருளி அத்தெளிவினிடத்து எக்காலத்தும் அழிவின்றிநித்தியமாய் நிலைபெற்றுநிற்கும் அந்நிநிலையனுபவத்துள்ளேமுன்னந்தமியனேன் பவம்வெரீஇ அடிதாழந்துருகியேத்திடத் தன்னடிமுடிசூட்டியொளிவளரத்தமத்தகஞ்செய்து அருளினற்பவாந்தாதாரமுத்திமுடிவையறைகுதுங்கேட்டியென்று அருளியபடியே அடியேன செனனதுக்கங்கணீங்கும்படிக்கு என்னைநிலைபெறவிருந்தி ஆங்குப் பொருந்தாநின்ற சொரூபத்தினிடத்துக் காட்டத்தினிடத்தக்கினி போலும் புனலினிடத்துவர்போலுந் தேனினிடத்திரதம்போலும் புட்பத்தினிடத்துக்கந்தம்போலும ஆகாயத்தினிடத்துவாயுபோலுங் கதிரொளியினிடத்துக் கண்ணொளிபோலும் என்போதஞ் சிறிதும்பிறிவுற்றுத்தோன்றாது இரண்டறக்கலபித்து அச்சொரூபமயமேயாக்கியென்னைபிருதியாய்ச்சூழாநின்ற செனனங்களையெல்லா மொழித்தருளினன் அன்றேனுடைய பொன்போன்று கிடைத்தற்கரியபெருங்கருணையானது நீடூழிகாலம் வாழக்கடவது அடியேனையாண்டருளிய வழகுபொருந்திய செந்தாமரைமலர்

போன்றதிருவடிகளும் நீடூழிகாலம் வாழ்கக்கடவதென்று வியந்துபுகழ்ந்துரைத்தது.—எ—று.

என்றும் பேரானந்தச்செல்வனாய் வாழாநின்ற பெருவாழ்வுடையனாகிய ஞானாசாரியனைப் பொன்னருள்வாழியாண்ட பூங்கமலத்தாள்வாழியென்று அவனுக்கிவன் வாழ்வுகூறியதென்னேவெனின் ஓர்மகாராசாவினிடத்து ஓர்மிடியன்சென்றிரந்தமாத்திரத்தில் அவன்மிடிதிரும்படிக்குப் பெருஞ்செல்வத்தையளிப்ப அம்மிடிதீர்ந்துபெருஞ்செல்வத்தைப் பெற்ற மகிட்சியால் ஒன்றுந்தோன்றாமற்றன்னையு மறந்து அம்மகாராசனையேமகாராசனாயிருக்கக்கடவையென்றாற் போல வினுஞ்சிற்றின்பமாகிய விடயநுகர்ச்சியால் விளையாநின்ற செனனதுக்கமாகிய மிடிதிரும்படிக்கு அவனை யிரந்தமாத்திரத்தில் அவனும்பெருங்கருணையாய்த் திருவடிசூட்டி அதத மத்தகசையோகஞ்செய்து இவன் சனனதுக்கமாகிய மிடிதிரும்படி மோட்சானந்தமாகிய பெருஞ்செல்வத்தை யளித்து அருளால் அச்செனனதுக்கமகனீங்கி அம்மோட்சானந்தமாகியபெருஞ்செல்வத்தைப் பெற்றமகிழ்ச்சியால் இவனும்பிரபஞ்சந்தோன்றாமற் றன்னையுமறந்து அப்பெருவாழ்வுடையோனைப்பொன்னருள்வாழியாண்ட பூங்கமலத்தாள்வாழியென்றுகூறியதெனக்கொள்க. காட்டம் புனறெண் புட்ப மாகாயங் கதிரொளி யிலைவகளினிடத்து அக்கினி உவர் இரதம் கெந்தம் வாயு கண்ணொளிகளைப்போலும் என்போதஞ்சிறிதும் பிரிவுறத்தோன்றாதிரண்டறக்கலப்பித்து அச்சொருபமயமேயாக்கி யென்னைமிகுதியாய்ச்சூழாநின்ற செனனங்களையெல்லா

ம் ஒழித்தருளினனென்றதற்குதாரணம்: சிவபோகசாரம். "இ
ந்தனத்திலங்கியெரியுறுநீர்தேனிரதங்; கந்தமலர்ப்போதுவா
ன்காலொளிகண்-சந்ததமு,மத்துவிதமானதுபோலான்மாவுமீ
சனுமாய், முத்தியிலேநிற்குமுறை." என்றும், திருமந்திரம்.
"ஒழிந்தேனபிறப்பையுறவென்னும்பாசங், கழிந்தேன்கடவுளு
நானுமொன்றனே, னழிந்தாங்கினிவருமாக்கமும்வேண்டே
ன், செழுஞ்சால்புடையசிவனைக்கண்டேனே." அன்றியும்,
"ஒடுங்கிநிலைபெற்றவுத்தமருள்ள, நடுங்குவதில்லைநமனுமங்
கில்லை, யிடும்பைகளில்லையிராப்பகலில்லை, கடும்பசியில்லைக
ற்றுணர்ந்தோர்க்கே." அன்றியும், "ஆராலுமென்னையமட்
டவொண்ணுதினிச், சீராரூர்பிரான்வந்தென் சிந்தைபுகுந்தன
ன், சீராடியங்கேகிரிவதல்லாலினி, யார்பாடுஞ்சாராவறிவ
றிந்தேனே." என்றும், பட்டணத்துப்பிள்ளையார். "வி
ட்டேனுலகம்விரும்பேனிருவினைவீணருடன், கிட்டேனவரு
ரைகேட்டுமிரேன்மெய்கெடாதநிலந், தொட்டேன்சுகதுக்கம
ற்றுவிட்டேன்றொல்லைநான்மறைக்கு, மெட்டேனெனும்படி
யென்னிடத்தேவந்திங்கெய்தியதே." என்றும், திருவாசகம்.
"நானேயோதவஞ்செய்தேன்சிவாயநமவெனப்பெற்றேன்,
றேனாயின்னமுதமுமாய்த்தித்திக்குஞ்சிவபெருமான், றானே
வந்தெனதுள்ளம்புகுந்தடியேற்கருள்செய்தா, னூனாருமுயிர்
வாழ்க்கையொறுத்தன்றேவெறுத்திடவே." அன்றியும். "உண்
டோரொண்பொருளென்றுணர்வார்க்கெலாம, பெண்டிரா
ணலியென்றறிவொண்கிலை, தொண்டனேற்குளவாவந்துதோ
ன்றினாய், கண்டுங்கண்டிலனென்னகண்மாயமே." ௫-ம், வ

ரும். மற்றும்வருவனவற்றாற்காண்க. அன்றேன்பொன்னரு
ள்வாழியாண்டபூங்கமலத்தாள்வாழி யென்றதற்குதாரணம்:
வயிராகதீபம். "ஒருவனுக்கிருளறறுரியசிற்சொரூபமுள்ளவா
விளங்கினன்றறுமிப், பருவரலுருவப்பற்றுமற்றதுகோபடும
னவிறைபுரிதருமைங், கருமமெவ்விடத்துங்கண்டுதற்செய
லைக்கைகவிடுத்தச்சமாதியவுண், மருவுறுதகற்றித்தவஞ்செய
வழக்கால்வாழியெங்குரவனீடூழி." என்றும், வீராகமம். "மா
றிநாளின்மதிமுன்னரம்பையி, னீரமாறவுலர்த்தியெரித்தமு,
-தாரலூட்டுவபோலென்னவாவினைச், சார்வுநீத்தருடந்தவன்
வாழியே." என்றும், திருவாசகம் "நமச்சிவாயவாழ்கநா
தன்றாள்வாழ்க, விமைப்பொழுதுமென்னெஞ்சினீங்காதான்
றாள்வாழ்க, கோகழியாண்டகுருமணிதன்றாள்வாழ்க, வா
கமமாகிநின்றண்ணிப்பான்றாள்வாழ்க, வேகனனேகனிறை
வனடிவாழ்க, பல்லோருமேத்தப்பணிந்து." என்றும், அஞ்
ஞவதைப்பரணி. "பாசமலமறவருளும்பார்வையான்வா
ழியே, பாடுமறைமுடிவினடமாடுவான்வாழியே, வாசம
லமொனமுழுதுமேவினான்வாழியே, மாகரறிவரியவிருதாளி
னான்வாழியே." அன்றியும், "வினையுமாறுதின்றிநின்றில
குசோதிவாழியே, நேசமோடுமீசனென்னநெஞ்சிலாதவஞ்
சனு, மெனையுநீதியன்பரோடுவந்தநாதன்வாழியே, யென்
னையாளவந்தகோலமென்றும்வாழிவாழியே." அன்றியும்,
"பந்தபாசம்வேரொடும்பறிந்துவீழவென்முடி, தந்தபாதம்
வாழியேசமைந்தபார்வைவாழியே." என்றும், சிற்றம்பலநா
டியார் சிவானுபூதிவிளக்கம். வாழிதிருநீறுவாழிதிருவஞ்செ

முத்தி, வாழிசிவாலயங்கள்வாழிதிருவேடமே.'' எ-ம். வரும்.
மறைமலையுருவனவுரைமுறைகாண்க. (௨௫)

சித்தமார்மயலீங்கிசைக்குறே
டொத்துநிறகுருவுபாயமுணர்த்தவிம்
மெய்த்தகமுத்திமுடிவைவிளம்பினேன்
மத்திமாருகன்னுளகம்வைத்தலால்.

நானுரைவரையவல்லனோவுளத்தி னுதனின்றியற்றிடாவிடினன், ஞானிதைவரைந்தனென்பர்கள்றுயிர்க்குத்தற்சுதந்தரமிலதறியார், தேனலர்குழலாளுமை விழிகளிப்பத்திருநடஞ்செய்தருளெங்கோன், ஞானுளத்திருந்து வரைந்தனனென்றே சாற்றுவீர்தெளிந்த மாதவரே.

எங்குமாய்விரிசத் தாதியேபாசமித்தனையோர்வது பசுவிதனுக், கங்கறிவளிப்பதருட்பதியாகு மாயமுப்பொருளுமோர்விடயந், தங்குறிற்றொன்றுந்தவிர்ந்தொருவிடயந்தாவுமுன்னிடையினிற்சொரூப, மங்கண்முன்னிகழுமென் றனன்போரியமர் சிதம்பரகுருதேவன்.

முத்திமுடிவுரையிதற்குமொழிந்தவுதாரணமுன்னூறொடுதொண்ணூறுஞ், சத்தியநூற்றொருபான்சா

ற்றியநாமிவையிலொன்றுதவிராதுள்ளத், தொத்தநி
ரிபையமறவுணர்ந்தவரேயுலகமெலாமொளியாயோங்
கி, மொய்த்தவகண்டாகாரப்பேரானந்தக்கடற்குண்
மூழ்கிவாழ்வார்.

முத்திமுடிவெனுமிதனை மோகமுடனெழுதிட
வேமுயன்றுளோர்கள், வைத்தவெழுத்தினிலொன்
றுகுறையாமறகூட்டாமலவரைகபின்னு, மொத்திட
த்தம்பிறபபறுவரு றமெழுத்திலொன்றேனுமுயாத்தி
த்தாழ்த்தின், மெத்துபிறப்புறுவரிநுசத்தியமென்றெ
ங்குரவன்விளம்பினனால்.

வானந்தருத்திரன்மாமணியாகிநிவாய்ந்தவன்வே
தானந்தருத்திரனானோனுங்காண்பரிதாயொளிரு
மோனந்தருத்திரமுத்திமுடிவைமொழிந்தனனு
லானந்தருத்திரற்கன்பாஞ்சரவணனையனுமே.

முனிவர்களுலகின்மொழியுநான்முடிவாய்மொ
ழிந்தருண்முத்தியின்முடிவை, யினிமைசெய்நூலாயி
யம்பியென்போலுமெளியருமுயவளித்தனனால், கனி
களுந்தேனுங்கண்டுநல்லமுதுங் கப்பவின்பொங்கதிர
சமாங், தனிநிலையோகிஞெளியினுக்கொளியாஞ்சர
வணபவனெனுந்தவனே.

எத்திறத்தோர்முத்திகளுமித்திறத்திலுளதிதனை யிலகக்காணென், றத்திறத்தின்முத்திமுடிவெனுமரு நூலாகவெனக்காக்கித்தந்தான், பத்தர்பணிந்திடவரு ளும்பரம்பரனென்மீதில்வைத்தபரிவினாலே, யுத்தமர் களுறைகாஞ்சிச்சரவணையென்றெனைப்போல்வந்துவ ந்துதானே.

வாக்குமனக்கெட்டாதவான்பரமேயென்மலத்தை
நீக்கியருள்கொழிக்கவேநினைந்து-பார்க்குட்
சரவணையென்றோர்நாமஞ்சாற்றிவந்துவீட்டை
விரவுமருளால்விளக்கிற்றால்.

கச்சியப்பதேவனடியுச்சியினுள்வைபபாம்
சிவஞானதேவனடிபவமாறப்பணிவாம்
தவப்பிரகாசன்றிருத்தாளுவப்புறவேத்திடுவாம்
சிதம்பரதேசிகன்றிருத்தாளிதம்பெறவாழ்த்திடுவாம்
சரவணபவனெனைச்சார்ந்ததுணையே.

திருச்சிற்றம்பலம்.

---

# முத்திமுடிவுரை

முற்றுப்பெற்றது.

## ௨. தாரணசாத்திரங்களின் பெயரும் பாட்டுத்தொகையும்.

| சாத்திரங்கள். | பாட்டுத் தொகை. | சாத்திரங்கள். | பாட்டுத் தொகை. |
|---|---|---|---|
| தேவாரம். | ௰௨ | நிட்டைவிளக்கம். | ௯ |
| திருவாசகம். | ௨௧ | அம்பலவாணையர்தசகாரியம். | ௨ |
| திருவிசைப்பா. | ௨ | திருவண்ணாமலையர்தச காரியம். | ௫ |
| திருப்பல்லாண்டு. | ௧ | நெஞ்சுவிடுதூது. | ௧ |
| திருப்புகழ். | ௫ | துகளறுபோதம். | ௪ |
| காஞ்சிபுராணம். | ௧ | சிற்றம்பலநாடியார். | ௭ |
| கோயிற்புராணம். | ௧ | சிவானந்தமாலை. | ௰௨ |
| விருத்தகிரிபுராணம். | ௧ | ஒழிவிலொடுக்கம். | ௰௪ |
| தணிகைப்புராணம். | ௬ | தேவிகாலோத்தரம். | ௪ |
| கூவப்புராணம். | ௨ | அவிரோதவுந்தியார். | ௯ |
| உய்யவந்தநாயனார்புராணம். | ௧ | பகவற்கீதை. | ௨ |
| திருவுந்தியார். | ௨ | பிரமகீதை. | ௫ |
| திருக்களிற்றுப்படியார். | ௨ | ஞானவாசிட்டம். | ௰ |
| சிவஞானபோதம். | ௬ | தத்துவராயர். | ௨ |
| சிவஞானசித்தியார். | ௰௯ | தத்துவரத்தினாகரம். | ௧ |
| உண்மைவிளக்கம். | ௨ | தத்துவாமிர்தம். | ௨ |
| சிவப்பிரகாசம். | ௰ | சூறுந்திரட்டு. | ௧ |
| திருவருட்பயன். | ௮ | பாடுதுறை. | ௨ |
| வினாவெண்பா. | ௧ | ஞானவிளக்கம். | ௫ |
| போற்றிப்பஃறொடை. | ௧ | மெய்மொழிச்சரிதை. | ௨ |
| உண்மைநெறிவிளக்கம். | ௧ | | |

## உதாரணசாத்திரங்களின்பெயரும் பாடற்ருகையும்.

| சாத்திரங்கள். | பாட்டுத் தொகை. | சாத்திரங்கள். | பாட்டுத் தொகை. |
|---|---|---|---|
| சிவபோகசாரம். | எ | அத்துவிதவுண்மை. | க |
| அமுதசாரம். | உ | திருவம்மானை. | ௬ |
| பதிபசுபாசவிளக்கம். | ௩ | சித்தாந்தசிகாமணி. | உ |
| சிவானுபூதிவிளக்கம். | ரு | சிவாகமார்த்ததரிசனம். | ௯ |
| சிவநெறிப்பிரகாசம். | உ | வீராகமம். | ரு |
| மெய்ஞ்ஞானதீபம். | க | பட்டணத்துப்பிள்ளைநாய | |
| மெய்ஞ்ஞானவெண்பா. | க | னார். | அ |
| அஞ்ஞவதைப்பரணி | எ | திருவள்ளுவநாயனார். | ரு |
| மோகவதைப்பரணி. | ரு | தாயுமானார். | ரு |
| வயிராகதீபம். | ரு | திருவாய்மொழி. | அ |
| வயிராகசதகம். | க | நாலடியார். | ச |
| சர்வக்கியானோத்தரம். | க | பிரபுலிங்கலீலை. | அ |
| சிவஞானதீபம். | ரு | சிவஞானக்கலம்பகம். | ௬ |
| ஞானசாகரவெண்பா. | ச | நெஞ்சொடுமகிழ்தல். | உ |
| உபதேசமாலை. | உ | பஞ்சாக்கரப்பஃறொடை. | க |
| போதரத்நாகரம். | க | பொன்வண்ணத்தந்தாதி. | உ |
| ஞானசூரியன். | க | அம்மைதிருவந்தாதி. | க |
| திருமந்திரம். | ருக | சித்தரந்தாதி. | க |
| அஞ்ஞானநிவிர்த்தி. | க | தணிகையந்தாதி. | உ |
| நிட்டானுபூதிசாரம். | க | ஆனந்தருத்திரேசரந்தாதி. | ௫ |
| சசிவன்னபோதம். | ப | பஞ்சாக்கரந்தாதி. | உ |
| மெய்க்குருவினு. | க | கலைசையந்தாதி. | க |
| ஞானமணமாலை. | ௰ | இளசையந்தாதி. | ரு |
| எதிர்காலத்திரங்கல். | ரு | உபதேசகாண்டம். | க |

| சாத்திரங்கள். | பாட்டுத்தொகை. | சாத்திரங்கள். | பாட்டுத்தொகை. |
|---|---|---|---|
| காசிகண்டம். | உ | ஆனந்தரங்கதேசாவண்டு வந்தாது. | க |
| சிந்தாமணி. | க | குகைநமசிவாயர். | உ |
| கந்தரலங்காரம். | உ | பரமாசாரியார். | க |
| கந்தரநுபூதி. | உ | சிவஞானசுவாமிகள். | உ |
| போரூராமுறை. | ௩ | கச்சியப்பசுவாமிகள். | உ |
| போரூராபிள்ளைத்தமிழ். | க | பழுதைகட்டியம்பலவாணர். | க |
| சண்முகையாற்றுப்படை. | க | வாரஞ்சியையர். | க |
| வேதசிரோதயம். | க | சந்திரசேகரவாக்கியம். | க |
| வாளுபவதந்தி. | க | சைவசமயநெறி. | க |
| [illegible]ணை. | க | ஆகமொத்தநூல் - ௱௰௫ | |
| சிவவாக்கியம் | ௫ | உதாரணப்பாட்டு-௱௬௰. | |
| திருச்சாம்பிரகந்தி. | ௪ | | |
| ஏகம்பவாணன் [illegible] பு. | ௬ | | |

---